# தாயகம்

ஏப்ரல்-ஒக்ரோபர் 2011



50/=

கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சியின் கொண்டையூசிகள்

- சி. சிவசேகரம் -

ஆச்சிக்கு எத்தனை வயதென்று
எனக்குத் தெரியாது, ஆச்சிக்குந் தெரியாது.
ஆனாலும் ஆச்சியிடம் எத்தனை கொண்டையூசிகள் என்று
எனக்குத் தெரியும். ஏனென்றால், ஆச்சி
நாள் தவறாமல்
அவற்றின் எண்ணிக்கையைக் கூறுவார்.
நாள் தவறாமல்
காலையும் மாலையும் எண்ணிப் பார்ப்பார்.
அவருடைய கொண்டையூசிகள்
காது குடையவும் பல்லுக் குத்தவும் பயன்படும்.
ஒரு தடைவை, ஆச்சியின் பேரன்
தன் மூக்கிற்குள் திணித்த மஞ்சாடி விதையை
வெளியே எடுக்கவும்
ஒன்றுக்கு மேற்பட்ட தடைவைகள்
திறப்புக்களைத் தொலைத்த பூட்டுக்களைத் திறக்கவும்
அவை பயன்பட்டுள்ளன. என்றாலும் ஆச்சி
ஒரு நாளேனும் அவற்றில் ஒன்றையேனும்
தனது கொண்டையிற் செருகி
நான் கண்டதில்லை. அதை விட, நானறிய
அவற்றைச் செருகும் அளவிலான கொண்டை
ஆச்சிக்கு இருந்ததுமில்லை.

என்றாலும் எவருமே அவற்றைக்
காது குடைவான் என்றோ பற் குத்தி என்றோ
மருத்துவக் கருவி என்றோ
கள்ளத் திறப்பு என்றோ அழைத்ததில்லை.
எல்லாருக்கும் அவை
ஆச்சியின் கொண்டையூசிகள் தான்.

எவ்வாறோ
அரசாங்கத்தை நினைக்கும் போது
ஆச்சியின் கொண்டையூசிகளும்
ஆச்சியின் கொண்டையூசிகளைக் காணும் போது
அரசாங்கமும்
மனதிற்கு வருகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியஜனநாயகம் புதியவாழ்வு புதியபண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்

இதழ் இல | இதழ் இல

பிரதம ஆசிரியர்
க.தணிகாசலம்
தொ.பே: 021-2223629

ஆசிரியர் குழு
சி.சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
கலையரசன் வே. குமாரசாமி
சோ. தேவராஜா
அ. பகீரதன்
ஜெ. சற்குருநாதன்
சு. இதயராஜா
த. கோபாலகிருஷ்ணன்


பக்க வடிவமைப்பு
ரவி

அட்டைப்படம்
முன்னட்டை - கிருபா

தொடர்பு
ஆசிரியர், ஆடியபாதம் வீதி
கொக்குவில்.
021-2223629

மின்னஞ்சல்: thayakam_1@yahoo.com

அச்சுப்பதிப்பு
கரிகணன் பிறின்டேர்ஸ்
காங்கேசன்துறை. 2224937



வெளியீடு
தேசிய கலை இலக்கியப் பேரவை

## பண்பாட்டு நெருக்கடிகள்

போருக்குப் பிற்பட்ட எமது சமூகம் என்றும் இல்லாத அளவுக்கு பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. போரின் பாதிப்புக்களில் இருந்து முற்றாக மீளமுடியாத நிலையே இன்றும் தொடர்ந்து நிலவுகிறது. போருக்கு காரணமான தேசிய இனப் பிரச்சினைக்கான நியாயமான அரசியற் தீர்வு இதுவரை முன்வைக்கபடவில்லை. தீர்வின்றி நீளும் இக்கால இடைவெளி இனக்குரோத அரசியற் சகதிக்குள் தொடர்ந்தும் நாட்டை இழுத்துச் செல்வதற்கே வாய்ப்பாக அமைகிறது.

இத்தகைய நிலையில் இவைகளி லிருந்து விடுபடுவதற்கான அரசியல் விழிப்புணர்வை மக்கள் பெறவேண்டிய ஒரு சூழலில் பண்பாட்டு நெருக்கடியும் அவற்றுள் ஒன்றாக எழுந்து நிற்கிறது. இன்று பண்பாட்டுச் சீரழிவுகள், பாலியல் ஒடுக்குமுறைகள், இளைஞர்கள், மாணவர்களிடையே மது அருந்தல், போதை வஸ்துப் பாவனைகள் அதிகரித்தல் பற்றி அடிக்கடி பேசப்படும் நிலை உருவாகி உள்ளது. இதுபற்றி சமூக நலனில் அக்கறையுடையவர்கள் சிலர் ஆதங்கத்துடன் இடையிடையே பத்திரிகை களில் எழுதும் கட்டுரைகளுடன் இவைகளை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் ஓய்ந்து விடுகின்றன. இத்தகைய பண்பாட்டுப் பிறழ்வுகளுக்கான காரணிகளை கண்டறிந்து அதனை ஒழிக்க முயலாது தனியே சட்டங்கள், அற ஒழுக்கப் போதனைகளால் மட்டும் இவைகளை ஒழிக்க முடியாது. எமது சமூக பண்பாட்டுத் தளத்தில் இன்றும் கூட பாலியல் நாட்டங்கள் பற்றிய விடயங்களை வெளிப்படையாகப் பேசுவது புனிதமற்ற ஒன்றாகவே கருதப்படுகிறது. இவை பற்றிய அறிவியல் பூர்வமான அணுகு

## உள்ளே..

**கவிதைகள்**

கல்வயல் குமாரசாமி
சோ. பத்மநாதன்
குப்பிழான் ஐ. சண்முகன்
சிவசேகரம்
மாசில் பிரபாகரன்
அழ. பகீரதன்
புலோலியூர் வேல்நந்தன்
யாதவன்
கன்னிமுத்து வெல்லபதியான்
ஜெயம் ஜெகன்
சீதனன்
காவத்தையூர் மகேந்திரன்
யோகி

**சிறுகதைகள்**

தாட்சாயணி
அனாதரட்சகன்
சிறி
சமரபாகு சீ. உதயகுமார்
க. சுரேந்திரகுமார்
துவாரகன்

**குறுநாவல்**

தணிகையன்

**கட்டுரைகள்**

கனகநாயகம் வேலந்தன்

வினவு: www.vinavu.com

முறையை விடுத்து முழுதுக்குப் பின்னால் பேசப்படும் நிலையே இருந்து வருகிறது. இதனால் இவை பற்றிய விழிப்புணர்வை இளம் தலைமுறையினர் மத்தியில் ஏற்படுத்துவதில் இது பெரும் தடையாக உள்ளது. பண்பாட்டுப் பிறழ்வுகள் என்பன வெறும் தனிமனித உணர்வு சார்ந்த பிரச்சினைகள் மட்டுமல்ல. இதற்கான தூண்டல்களை ஏற்படுத்துவதிலும், அதிகரிப்பதிலும் சமூக பொருளாதார பண்பாட்டுக் காரணிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. இக்காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு எமது பண்பாட்டு தன் தேக்க நிலையை மாற்றிப் புதுப்பித்துக் கொள்ளும் ஒரு "பண்பாட்டு உயிர்ப்பு" நிலை இன்று அவசியமாகிறது.

எமது சமூகத்தில் ஒருசிலர் தமக்கு இருக்கும் சமூகப் பொறுப்பை மறந்து இவற்றை தனிமனிதப் பிறழ்வுகளாக மட்டுமே நோக்கிச் செயற்பட முனைகின்றனர். இதனால் ஒருவகை புதின விருப்புக்குள் மூழ்கி, உண்மைத் தன்மைகளை ஆராயாமல், தத்தமது மன வக்கிரங்களை தீர்ப்பதற்கான வாய்ப்பாகவும் இச்சூழலைப் பயன்படுத்த முனைகின்றனர். இது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக தீய விளைவுகளை மேலும் தூண்டுவதற்கே துணையாக அமைகிறது.

பாலியல் நடத்தைப் பிறழ்வுகள் எமது சமூகத்துக்கு புதியதொன்றல்ல. காலம் காலமாக இருந்து வருவதுதான். ஆனால் ஏகாதிபத்திய உலகமய பொருளாதார அமைப்பின் ஆதிக்கத்துக்குள்ளும், அதன் நச்சுத்தனமான நுகர்வுக் கலாசாரப் பரம்பலுக்குள்ளும் சிக்கிக் கொண்டுள்ள ஒரு சமூகத்தில் இத்தகைய பண்பாட்டு நெருக்கடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நுகர்வுச் சந்தையில் குவிக்கப்படும் நவீன இலத்திரனியல் சாதனங்களின் பெருக்கம் கையடக்கத் தொலைபேசிகள், கணனி வலைத் தொடர்புகளுக்கான வாய்ப்புக்கள் யாவும் மனித உறவுகளை மேம்படுத்த உதவி இருக்க வேண்டும். ஆனால் இவ் அதிகாரத்துவ சமூக அமைப்பு மக்கள் மேல் திணித்து வரும் சுயநல போட்டிச் சிந்தனையால் மனித உறவுகள் சிதறடிக்கப் படுகின்றன. உறவுகள் உடைந்து சிதைந்து மனிதர்கள் இன்று தனியன்களாகின்றனர். இவை தடையற்ற துரிதமான தொடர்பாடலுக்கான வாய்புக் களைப் மேலும் பெருக்கி சமூகத் தீமைகளை அதிகரித்து வருகின்றன. தீயைக் கொண்டு ஒளியையும் ஏற்றலாம், வீட்டையும் எரிக்கலாம். நவீன இலத்திர னியல் சாதனங்களும் அவ்வாறானவையே. நாம் வாழும் சமூக பொருளாதார கலாசார அமைப்பையும் அது தரும் சிந்தனை களையும் கேள்விக்குட்படுத்தி மக்களை யும், இளம் சந்ததியினரையும் விழிப்ப டையச் செய்யாமல் இலத்திரனியல் சாதனங்களின் பரம்பலை மட்டும் தடுக்க எண்ணுவதில் பயனில்லை.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்" என்றது. முதலாளித்துவ சமூக அமைப்பு அதனை மீறி தொழிற்சாலைகளையும் பணிமனை களையும் நோக்கி பெண்களையும் சிறுவர்களையும் தனது உழைப்புச் சுரண்டலுக்காக இழுத்து வந்தது. ஆனால் நிலப்பிரபுத்துவம் வகுத்த பெண்ணடிமைச் சிந்தனைகளை அது கைவிடவில்லை. பெண்களை நுகர்வுப் பண்டங்களாகவும் விளம்பரக் காட்சிப் பொருட்களாகவும் சந்தையில் நிறுத்தி வைத்துள்ளது. பெண்ணுடலை மையமாகக் கொண்ட பிரபுத்துவ ஆணாதிக்க அழகியல் கலை இலக்கியக் கோட்பாடுகளை அது கேள்விக்கு உட்படுத்தவில்லை. புராண, இதிகாச, காப்பியங்கள் முதல் இன்றைய சினிமாவரை இதன் தாக்கம் தொடர்கிறது. இதுவும் பெண் அடிமைத்தனம் தொடர்ந்து நிலவுவதற்கும், பாலியல் வல்லுறவுகள் பெருகுவதற்குமான புறக் காரணிகளில் ஒன்றாக அமைகிறது. எனவே இவ்விரு சமூக அமைப்புக்களின் தாக்கங்களில் விடுபட்ட ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்க வேண்டிய அவசியம் இதனால் இங்கு உணரப் படுகிறது.

தமிழக சினிமாவினதும், சின்னத் திரைகளினதும் தாக்கம் இப் பாலியல் பிறழ்வுகளுக்கு உதவிகரமாக அமை கின்றன என்பது எல்லோரும் அறிந்த விடயம். பயனுள்ள நல்ல சினிமா பற்றிய விழிப்புணர்வு முயற்சிகள் கூட சிறு சிறு வட்டங்களோடு சுருங்கிவிடுகிறது. இத னால் மக்களின் இன்றைய நுகர்வுத்தரம் தென்னிந்திய சந்தைக்கும், சீரழிவுத் தூண்டல்களுக்கும் தொடர்ந்தும் வாய்ப் பாக அமைந்து வருகிறது. எமது மண்ணில் வெளிவரும் செய்தித்தாள்களின் வார இதழ்களிலேயே இந்நுகர்வுத் தரத்தின் விற்பனைக்கான வலிமையைக் காணமுடியும். பாலியல் பிறழ்வுகள் பற்றிய பயனுள்ள ஆய்வுக் கட்டுரைகள் வெளிவரும் மறுபக்கத்திலேயே நடிகை களின் அரைநிர்வாணப் படங்கள் காட்சிப் படுத்தப் பட்டிருக்கும் அவலத்தை நாம் அடிக்கடி காண்கிறோம். இந்த நிலையை மாற்றி இளம் தலைமுறையினரின் கலையுணர்வையும், நுகர்வுத் தரத்தையும் மேம்படுத்த முயலவேண்டும். எமது இளம் கலைஞர்களால் உருவாக்கப் படக்கூடிய பயனுள்ள குறுந்திரைப் படங்களை இதற்கு வாய்ப்பான ஒரு மாற்றுச் சாதனமாக நாம் கைக்கொள்ள முடியும்.

போருக்கு முன்னர் இளம் தலைமுறையினருக்கு சிறிய அளவிலாவது

சமூக அக்கறையும், இலக்குகளும் இருந்தன. போரால் அழிவடைந்த ஒரு சமூகத்தில், நுகர்விய வாழ்வைத் தவிர இலக்குகள் ஏதுமற்ற இளம் தலைமுறையினராக இவர்கள் இன்று மாற்றப்பட்டு வருகின்றனர். இது போன்ற நிலையில். இவர்கள் இலகுவாக சமூகச் சீரழிவுகளுக்குப் பலியாகும் வாய்ப்பு மேலும் அதிகரிக்கிறது. இது தேசிய இனங்களினதும், தேசம் தழுவிய மக்களின் விடுதலையிலும் பெரும் பாதிப்பைச் செலுத்தும் ஒன்றாகும். எனவே சமூக விஞ்ஞான நோக்குடன் போரின் அழிவுகளில் இருந்து பாடங்களைக் கற்று ஒரு புதிய சமூகத்தை உருவாக்கும் இலக்கை நோக்கி இளம் தலைமுறையினர் முன்செல்ல வேண்டும். அவர்களுடன் இணைந்து சமூக நலனில் அக்கறை கொண்ட கல்வியாளர்களும், பொது மக்களும் இப்பண்பாட்டு நெருக்கடிகளிலிருந்து எமது சமூகத்தை மீட்பதற்கான செயற் திட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப் படுத்துவதில் தமது பங்களிப்பை நல்க முன்வர வேண்டும்.

---

## நடைபெறுகிற ஆட்டங்களும் கூறுகிற நியாயங்களும்

அமெரிக்கா என்பது உலகின் சர்வாதிகாரிகளையும் கொடுங்கோலர்களையும் அழித்து நல்லாட்சியை நிறுவ அமைந்துள்ள உலக மகா சக்தி என்று சிலர் நம்புகிறார்கள். அதுவும் போதாமல் மற்றவர்களையும் நம்புமாறு தூண்ட முனைகிறார்கள். அண்மையில் அமெரிக்கா நேரடியாகவே ஓர் கிரித்தரமான வேட்டையாடி தன்னால் எதிரியாகவே சிறைப்பிடிக்கப்பட்டிருக்கக் கூடிய பின்லாடனை கோரமாக கொன்றொழித்தது. இதை மெச்சுகிறவர்கள் நம்மிடையே உள்ளனர். பலருக்கு அதைப்பற்றிய ஒரு அபிப்பிராயம் இல்லை. ஏனெனில் தமிழர்களுக்கு உலக நிகழ்வுகளை பற்றி அதிகம் கூறப்படுவது இல்லை. அவர்களுக்கு சொந்தக்காரர் புலம் பெயர்ந்துள்ள நாடுகளின் பெயர்களுக்கு மேலாக தெரிய வேண்டியதெல்லாம் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும். ஒருவேளை அவுஸ்திரேலியாவும், எப்படியாவது இந்தியாவும் தமிழ் மக்கள் சார்பாக இலங்கையில் குறுக்கிட்டு ஏதையாவது பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை தாங்கள் தெரிவு செய்த தலைவர்களும் புலம் பெயர்ந்தோரிடையே வாழும் பிரமுகர்களும் விடாது முயன்று வருகிறார்கள் என்பதும் தான். அமெரிக்கா இதுவரை கவிழ்த்துள்ள ஒவ்வொரு சர்வாதிகார ஆட்சிக்கும் அது கவிழுமாறு காத்து நிற்கிற சர்வாதிகார ஆட்சிகள் பத்துக்கும் குறையாமல் இருக்குமென்று நமக்கு சொல்லப்படுவதில்லை. அண்மையில் அமெரிக்கா கவிழ்த்துள்ள ஒரே அரபு ஆட்சி கடாபியினுடையது. அது சிரியாவிலும் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு கடுமையாக முயலுகிறது. அதன் பின்பு இன்னொரு உலகில் ஈரானுக்கு உள்ள செல்வாக்கையும், அது இஸ்ரேலுடைய மேற்காசிய பிராந்திய இராணுவ ஆதிக்கத்திற்கான ஒரு சவாலாக அமைவதையும் தடுக்கும் முயற்சியை எளிதாக்கும் என்பது அமெரிக்காவின் கணிப்பு. யூகோஸ்லாவியாவினதும் பின்பு சோமாலியாவினதும் உடைவிலும் சூடானின் உடைவிலும் அமெரிக்காவின் பங்களிப்பு எந்த ஒடுக்கப்பட்ட மக்களது நலனையும் கணிப்பிற் கொண்டதல்ல என்பதை நாம் விளங்கிக் கொண்டால் லிபியா ஏன் இலக்கு வைக்கப்பட்டது என்பதனை நாம் விளங்கிக் கொள்ள உதவும்.

லிபியாவின் எண்ணெய் வளத்தின் மீதான ஆதிக்கத்திற்காக மட்டும் கடாபி ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா முனையவில்லை. கடாபியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு 1990 களிலேயே கரைந்துவிட்டது. மேற்குலகிற்கு ஓரளவு நல்ல பிள்ளையாக அவர் இருந்து வருகிறபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அவர் ஆபிரிக்காவின் பொருளாதார சுபாதீனத்திற்கு வேண்டிய சில நடவடிக்கைகளை எடுத்தமை மேற்குலகத்திற்கு சிறிது மனக்கசப்பை ஏற்படுத்தியது உண்மை எனினும் இந்த ஆட்சி கவிழ்ப்புக்கு அது போதிய காரணமல்ல. துனிசியாவிலும் அதை விட முக்கியமாக எகிப்திலும் ஏற்பட்ட மக்கள் எழுச்சிகள் அமெரிக்க விரோத ஆட்சிகளை உருவாக்காமல் தடுப்பதில் அமெரிக்கா குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளது. அதே எதிர்ப்பு அலை மேலும் பல எழுச்சிகளை தூண்டி உள்ள நிலையில் அந்த அலையை அமெரிக்காவிற்கு சாதகமாக திருப்பி அமெரிக்காவுக்கு பூரண விசுவாசமுள்ள ஆட்சி ஒன்றை நிறுவவே லிபியாவிலும் கிளர்ச்சி ஊக்குவிக்கப் பட்டது. எகிப்திலும் துனிசியாவிலும் ஆயுதமேந்தாமலே மக்கள் ஆட்சியை எதிர்த்துப் போராடினர். லிபியாவில் கிளர்ச்சிக் காரர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும் மேற்கைரோப்பாவும் நேரடியாக முழுமூச்சில் இறங்கின. கிளர்ச்சிக் காரர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. கிளர்ச்சிக் காரர்கள் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடியவர்கள் அல்ல. அவர்களை வெள்ளை வெறி பிடித்த ஒரு கூட்டம் என்றே சொல்ல முடியும். அவர்களது வெறிச் செயல்களைத் தடுக்க மேற்குலகு எதையுமே செய்யாததோடு அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறது. இனி மனித உரிமை மீறல் என்ற பெயரில் சிலரை அதிகாரத்திலிருந்து ஒதுக்க இயலுமாகலாம். எனினும் முதன்மையான போர்க் குற்றவாளிகளான அமெரிக்காவும், பிரான்சும், இத்தாலியும் எந்த விதமான விசாரணைக்கும் உட்படப்போவது இல்லை. நாளை லிபியாவின் பாதுகாப்பை உறுதிப் படுத்துகிற சாட்டில் அமெரிக்காவின் "அஃப்றிகொம்" எனும் ஆபிரிக்காவுக்கான இராணுவ அமைப்பு லிபியாவில் காலூன்றி அதன் மூலம் ஆபிரிக்கக் கண்டத்தில் தனக்கு தளமமைக்க வாய்ப்பு உண்டு.

லிபியா நமக்கு கூறுகிற பாடங்களை நாம் சரியாக கற்றுக் கொள்கிறோமா?

1.கடாபியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை மெச்சி அதன் அடிப் படையில் அமெரிக்கா நமக்கும் உதவும் என்று மனநிலையை உருவாக்கவே நமது ஊடகங்களும் அவற்றின் எசமானர்களும் முயலுகின்றனர்.

2.சிலருக்கு இங்கு ஓர் ஆட்சி மாற்றம் பற்றிய அதீத எதிர்பார்ப்புக்களும் உள்ளன.

3.எனினும் உண்மை யாதெனில் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு இலங்கையில் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வோ மனித உரிமைகள் பேணப்படுவதோ அல்ல. மனித இனத்திற்கான எந்த குற்றத்தையும் பற்றிய மேற்குலக கரிசனைகள் அக் குற்றத்தை எவர் மீது சுமத்தி எவ்வாறு அதைத் தமக்குப் பணியச் செய்யலாம் என்பதை பற்றியதே ஒழிய குற்றவாளிகளை தண்டிப்பதையும் பற்றியதல்ல.

4.இப்போது அமெரிக்கா தமிழ்த் தலைவர்களை எட்டுவேளைச் சந்திக்க அக்கறை காட்டுவது போலத் தெரிவது இலங்கை அரசாங்கத்தின் மீது நெருக்கு வாரம் கொடுப்பதற்காக என்று பலரும் உடன்படுவர். ஆனால் அந்த நெருக்குவாரம் தேசிய இனப்பிரச்சனையை தீர்க்கும் நோக்கிலானது என்று நினைப்பவர்கள் தவறு செய்கின்றனர்.

5. எவ்வாறு இந்தியா இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையைப் பயன்படுத்தி தன்னுடன் முரண்பட்டுக் கொண்டிருந்த ஜெயவர்த்தன அரசாங்கத்தை பணிய வைத்ததோ அவ்வாறே அமெரிக்காவும் போர்க்குற்றங்கள் தொடங்கித் தமிழ்த் தலைவர்களுடன் பேசுவது வரையிலான சைகைகள் மூலம் ராஜபக்ச அரசாங்கம் சீனாவுடனும் தனது நெருக்கத்தை மேலும் வளர்க்கலாகாது என்று சைகை காட்டுகிறது.

6. அந்தப் பேரினவாத அரசாங்கம் சீனாவிலிருந்து விலகி நிற்பதால் அது சிறுபான்மைத் தேசிய இனங்களிடம் நியாயமாக நடந்து கொள்ளும் என்று நாம் நினைப்பது போல தவறு இருக்க இயலாது.

7. டில்லிப் பயணங்கள் போல அமெரிக்கப் பயணமும் தமிழ் மக்களைப் பேய்க்காட்டும் முயற்சியாகவும் கொஞ்சம் உதவலாம். ஆனாலும் எந்த அயற் பயணமும் அயற் குறுக்கீடும் நமது பிரச்சனைகளுக்கு தீர்வாகா.

மேலை நாடுகளின் அக்கறைகள் எல்லாம் ஆடு நனைகிறதையிட்டு அழுகிற ஓநாய்களின் அக்கறைகள் தான்.

ஆடுகள் அஞ்ச வேண்டியது மழையை விட முக்கியமாக ஓநாய்களையே தான்.

- அன்பர் குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சியும் அப்புவும்

- அழு பகீரதன் -

முற்றத்து ஒற்றைச் செவ்வரத்தை பூக்கும்
முழுநிலா வானுலாவும் வைகறைப் போதில்
கொக்கரக் கோவென சேவலும் கூவும்
பக்கத்துக் கோயில் மணியொலி கேட்கும்
சாணம் மெழுகிய திண்ணையில் படுத்த
அப்பு எழுந்து விடிஞ்சுது என்று
ஆச்சியை தட்டி எழுப்ப அம்மாளாச்சியென
உச்சியை பார்த்தே எழுவர் நன்றே!

ஆச்சி அடுக்களைப் பக்கம் நகர்வார்
யானைத் தீப்பெட்டி தடவி எடுத்து
குச்சி தேய்த்து குப்பி விளக்கேற்றி
பானை வைத்தே அடுப்பை மூட்ட
வேப்ப மரத்தின் தண்டு பிடுங்கி
குச்சி எடுத்து பல்லு விளக்கும் அப்பு
ஆச்சி எழுந்து உமிக் கரி எடுத்து
பல்லு விளக்கி அலம்புவர் நயந்தே!

சொம்பு எடுத்து தொழுவம் சென்று
பசும் பால் கறப்பள் ஆச்சி
கொம்பு பிடித்து உதவுவர் அப்பு
சாணம் பொறுக்கி எருவாக்க இடுவர்
குந்தூசி எடுத்து பலாமர இலையை
தொட்டுத் தொட்டு சேர்ப்பர் சிறப்பாய்
வீட்டுத் தோட்டத்தில் பாத்தி கட்டுவர்
துலா மிதித்து நீரிறைப்பர் உவந்தே!

உருத்திராட்ச மாலை மணிகள் தடவி
மந்திரம் உச்சரித்து சிவசிவ என்பர்
வேய்ந்த ஓலை இடுக்கில் சங்கெடுத்து
ஒலிநாதம் எழுப்பி ஓம் என சொல்வர்
பாக்கு உரலெடுத்து பக்கத்தில் வைப்பர்
டொக்கு டொக்கு என்றே இடிப்பர்
வெத்திலை சுண்ணாம்பு சேர்த்தே சப்புவர்
சிவப்பாய் துப்புவர் சிரிப்பர் சிவந்தே!

வீட்டுப் புறத்தில் கொட்டில் இருக்கும்
முகட்டில் கட்டித் தூங்கும் வெங்காயம்
வயல் வெளியில் மிளகாய் சிவக்கும்
வீட்டறைக்குள் கல்லுப் பெட்டிக்குள் நெல்லிருக்கும்
உறியில் முட்டியில் தயிர் இருக்கும்
கத்தரியும் வெண்டியும் தோட்டத்தில் சிரிக்கும்
இயற்கையுடன் இசைந்த வாழ்வில் இன்புறுவர்
பேரன் பேத்தியொடு ஆச்சியும் அப்புவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை விட்டும் தூவானம்......

- தாட்சாயணி -



எனக்குப் பசிக்குது, ஆனா சாப்பிட ஒண்டுமில்லை. அம்மம்மாவிட்டைக் கேட்டால் காய்ந்த விழுவா. நான் வேறை ஆரிட்டைக் கேக்கிற. எனக்கெண்டு இப்ப இருக்கிறது அவ ஒராள் தானே. வெள்ளை உடுப்பெல்லாம் நல்லாகக் காயேல்லை. எண்டாலும், அதைப் போட்டுக் கொண்டு முத்தத்து வெயிலுக்கை நிக்கிறன். வெயில் படப்பட உடுப்பு மடமடப்பா வரட்டும். பள்ளிக் கூடத்திலை மத்தியானச் சாப்பாடெண்டாலும் கிடைக்கும். அதுக்குத் தான் நான் பள்ளிக்கூடம் போறன். படிக்க வேணுமெண்டு எனக்குப் பெரிய விருப்பம் ஒண்டும் இல்லை. ஏன்? படிச்சு என்ன செய்யிறது.? ரீச்சர் சொல்லுற மாதிரி படிச்சு பெரிய ஆளாய் வந்து பேந்து என்ன செய்யிறது...? எங்கட அம்மாவும் அப்பாவும் என்ன செத்துத் தானே போச்சினம். அப்பிடி நானும் வளர்ந்தவுடனை செத்துப் போடுவன். அதுக்கு என்னத்துக்குப் படிப்பு...? பள்ளிக்கூடம் போனால் சாப்பாடு தருவினை. சாப்பிட்டிட்டு வரவேண்டியது தான், நான் விளையாடக் கூடப் போறதில்லை பிள்ளைகளோடை. ஏனெண்டால் விளையாடினால் கூடப் பசிக்கும். இப்பவே சாப்பாடில்லாமல் படுற பாடு... பிறகு கூடப் பசிச்சால் நான் எங்கை போறது...?

எனக்கு கையிலை செல் பீஸ் பட்டது. அதாலை என்னை வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பிட்டினை. என்னோடை அம்மம்மா வந்திட்டா. அங்கை என்ரை தம்பி அப்பப்பாவோடை என்னாடு பட்டானோ தெரியாது. வவுனியாவிலை மருந்து கட்டின கையோடை அம்மம்மா என்னை மெள்ளமா வெளியை கொண்டந்திட்டா. வவுனியாவிலை தெரிஞ்ச ஆக்கள் வீட்டை இருந்திட்டு பிறகுதான் நாங்கள் யாழ்ப்பாணம் வந்தம். ஆனா எங்களுக்குச் சரியான பதிவு ஒண்டும் இல்லையெண்டு எங்களுக்கு நிவாரணம் தரேல்லை. நிவாரணம் தந்திருந்தால் பரவாயில்லை. ஒரு மாதிரி சரிக்கட்டலாம், எண்டு அம்மம்மா நெடுகச் சொல்லுறவா. அவ அடிக்கடி விதானையாரிட்டை ஒப்பிசுக்குப் போய் அலைஞ்சலைஞ்சு திரும்பி வாறவ. நீங்கள் முகாமிலை இருந்தனியளோ? எப்ப உங்களை விட்டவங்கள். அப்பப்புவின்ர காட் எங்கை? எண்டு கனக்கக் கேள்விகள் கேக்கினமாம். அம்மம்மாவுக்கு வயது அறுபத்தேழு. எனக்கு ஒம்பது வயது. இந்த நிலைமையில் நாங்கள் என்ன துவக்கெடுத்தனாங்கள் எண்டு நினைச்சோ உந்தக் கேள்வியெல்லாம் கேக்கினம் எண்டு அம்மம்மா புறுபுறுப்பா.

இப்ப நாங்கள் இஞ்சைச் அலையிற மாதிரி என்ரை தம்பியும் அப்பப்பாவும் எங்கை யிருந்து கஷ்டப்படினமோ தெரியாது? முகாமுக்குப் போயிருப்பினமோ இல்லாட்டி வேறை இடங்களிலை காயப்பட்டு ஏதாவது ஆபத்து வந்ததோ தெரியாது? அவையளைப் பற்றி ஒண்டும் தெரியாது. அண்டைக்கு வகுப்பிலை அஜீஸ் ஒரு கதை சொன்னான்.

அவன் எப்பவும் பெரிய மனிசன் மாதிரித்தானே கதைப்பான். எங்களுக்குத் தெரியாத கதையெல்லாம் அவன்தான் சொல்லுவான். அவையளின்ரை சொந்தக்காரர் ஆரோ செத்துப்போச்சினமாம்.

சேச்சிலை வைச்சுப் பூசை பண்ணிப்போட்டு சோமக் காலையிலை புதைச்சதெண்டு சொன்னான். தாங்கள் மெழுகுவத்தி பிடிச்சுக்கொண்டு நிண்டு, பிறகு மண்போட்ட தெண்டும் சொன்னான். உடனை மணி விடேல்லை. தன்ரை தாத்தாண்டை செத்த வீட்டுக்குத் தாங்கள் பந்தம் கொளுத்திப் பிடிச்சதெண்டும் பூப்போட்டதெண்டும் விடாமல் சொன்னான். எனக்குச் சொல்ல ஒண்டும் இல்லை. நானும் செத்த வீடு பாத்தனான் தான். அம்மாண்டை, அப்பாண்டை. ஆனால் அதுக்குப் பிறகு எனக்குக் காயம் வந்திட்டுது. நான் மயங்கிப் போனன். எப்பிடி நடந்திருக்குமோ தெரியா..? அலிஸ் சொன்னான் தாங்கள் வேதக்காரர் செத்தாக்களைப் புதைக்கிறதெண்டும், எங்களைப் போலை சைவக்காரர் எரிக்கிறவையெண்டும் சொன்னான். ரெண்டும் கொடுமைதான். புதைச்சாலும் கஷ்ரம், எரிச்சாலும் கஷ்ரம். எனக்கு நினைக்கவே என்னவோ செய்யுது. ஆனால் செத்தாக்களுக்கு உணர்ச்சி இருக்காதாம். அவை நித்திரை ... மாதிரித்தான் கிடப்பினமாம். அப்ப எங்கட அம்மா, அப்பாவையும் என்ன செய்திருப்பினம். ஆர் எரிச்சிருப்பினம்...? அந்த நேரம் ஆராவது அவையளைப் புதைச்சிருப்பினம் எண்டு அம்மம்மா சொல்லுறா. அவவுக்கும் வடிவாத் தெரியேல்லை. அப்ப எங்கட அம்மா, அப்பா வேதக்காரரா மாறிட்டினையோ...? நானும் அப்ப வேதத்துக்கு மாற வேணுமோ? அப்பாவுக்கு மூத்த பிள்ளையும், அம்மாவுக்கு கடைசிப்பிள்ளையும் கொள்ளி போடுறது தானாம் எங்கட சமயத்து வழக்கமாம். மணி சொன்னவன். அப்ப அப்பாவுக்கு நான் கொள்ளி வைச்சிருக்க வேணுமோ..? தம்பி அம்மாவுக்குக் கொள்ளி வச்சிருக்க வேணுமோ....? தம்பி... தம்பி எங்கை இப்ப..? அப்பப்பா எப்பிடியும் அவனைத் தன்ரை கையுக்கை வச்சிருப்பார். அம்மம்மா என்ரை கையை விடாத மாதிரி. அம்மம்மா என்னைக் கவனமா வைச்சிருந்தாலும் அம்மா, அப்பாவையும் தம்பியையும் நினைக்க நெடுகப் புலம்பினபடிதான்.

“வெயிலுக்கை நிண்டு காயாமல் வந்து பணிஸ் துண்டைச் சாப்பிடு..? அம்மம்மா கூப்பிடுறா. எங்கை சில்லறை பொறுக்கி வாங்கி வந்தாவோ தெரியாது. நேற்று மிளகாய்ப் பழம் பிடுங்கப்போன இடத்தை கிடைச்ச காசிலை வாங்கினதா அம்மம்மா சொன்னா. பாவம் எனக்குப் பசிக்கக் கூடாதெண்டு அவ களைச்சல் பட்டு வேலை செய்யுறா. அவவுக்காகவாவது நான் கஷ்ரப்பட்டு படிக்கத்தான் வேணும். அதுக்குப் பிறகு நான் கொஞ்சங்கூட நிக்காமல் பணிசைத் தின்டு பச்சைத் தண்ணியை விழுங்கிப் போட்டு பள்ளிக் கூடத்துக்கு வெளிக்கிட்டிட்டன்.

வகுப்பிலை ரீச்சர் ஏதாவது பறவைகள், மிருகங்கள் கீறி, கலர்ப் பென்சில் பாவிக்காமல் என்னத்தாலேயன் ஒட்டிக்கொண்டு வரச் சொன்னவா. நான் ஒரு பெரிய யானை கீறிக்கொண்டு போனனான். ஆனா என்னத்தாலை ஒட்டுறது எண்டுதான் தெரியேல்லை. யானை எண்டால் கறுப்பு. கரியை எடுத்துத் தேய்க்கலாம். அதுவும் கல்லாலை கீறின மாதிரிக் கிடக்குமே எண்டிட்டு வீதியிலை காஞ்ச சருகுகளை ஒட்டி, உடம்புக்கு பனையின்ரை பொருக்குகளை உடைச்சு ஒட்டிக்கொண்டு வந்திருந்தன். யானையின்ரை வயிறெல்லாம் ஒரே பொருமலாக் கிடந்தது. எனக்கே என்ரை படத்தைப் பிடிக்கேல்லை. ஆனா, மற்ற எல்லோரும் நல்ல வடிவாத்தான் செய்து வந்தவை. அனிசும், யானை தான் கீறினவன், ஆனா அவன் அரிசியைக் கறுப்புச் சாயத்திலை தோய்ச்சு ஒட்டியிருந்தவன். நாங்கள் சாப்பிடுறதுக்கே அரிசி இல்லாமல் இருக்கிறம். அவனுக்கு படம் கீறி ஒட்டுறதுக்கு அரிசி கிடைக்குது. நாங்களும் ஊரிலை இருக்கேக்கை எவ்வளவு அரிசிக் கிடந்ததுகள். இப்ப இஞ்சை வந்தாப்பிறகு தானை இவ்வளவு கஷ்டப்படுறம். மணி மான் ஒண்டு கீறியிருந்தவன். அதுக்கு மஞ்சள் பருப்பாலை ஒட்டியிருந்தான். ஆனா ரீச்சர் உப்பிடிச் சொல்லியிருக்கக் கூடாது தான். காசு உள்ள ஆக்கள் அக்கா, அண்ணா, அப்பா அம்மா எண்டு எல்லோரும் உள்ள ஆக்கள் நல்ல வடிவா அவையளைக் கொண்டு எல்லாம் வாங்குவிச்சு ஒட்டிக்கொண்டு வருவினை. ஆனா அம்மா, அப்பா ஒருவரும் இல்லாமல், வசதியும் இல்லாத என்னைப் போலை ஆக்கள் என்ன செய்யிற...? நான் அம்மம்மா விட்டைக் கேக்க ஏலுமே. வடிவான படம் கீறி ஒட்டித் தரச் சொல்லி... நான் தானை தனிய

எல்லாம் செய்ய வேணும். என்ரை தம்பி இருந்தால் அவனுக்கு நான் எல்லாம் வடிவாச் செய்து குடுப்பன். உமா செய்தது மாதிரி.... ஒரு கிளி கீறி அதுக்குக் கீழால் இலையாலைக் கிழித்துக் கிழித்து ஒட்டி, செல்லாத்தும் பூனைப் பிச்க சொண்டுக்கு ஒட்டி நான் குடுப்பன் என்ரை தம்பிக்கு. அதுக்கு காசு சிலவழிக்கத் தேவையில்லைத் தானே. உமாவுக்கு உதவ அவளின்ரை அம்மாதானாம் சொல்லிக் குடுத்தது. எனக்குச் சொல்லித்தர ஆரும் இல்லாததாலை தான் நான் உந்தப் பெரிய யானையைப் பூதம் மாதிரி ஆக்கிப் போட்டன். தம்பி என்னோடை வந்து சேர்ந்தால் அவனுக்கு நான் எல்லாம் சொல்லிக் குடுப்பன். "பொன்னார் மேனியனே...." தேவாரத்திலை யிருந்து உப்பிடிப் படங்கள் கீறுற வேலைவரைக்கும் நான் சொல்லிக் குடுப்பன்.

ரீச்சர் எல்லாற்றையுமையும் பாத்தா. அனிசின்ரை யையும், மணியின்ரையையும் அவ பெரிசாச் சொல்லேல்லை.

'அரிசி, பருப்பு இதுகளிலை நீங்கள் ஒட்ட வேணும் எண்டு நான் சொல்லேல்லை பிள்ளையள், அரிசி பருப்பெல்லாம் சாப்பிடுற பொருட்கள் வீணாக்கக் கூடாது. இப்பத்தைய காலகட்டத்திலை எத்தினையோ பேர், சாப்பிட சாப்பாடு இல்லாத நேரத்திலை உதுகளைக் கொண்டு படங்கள் ஒட்டுறதை நாங்கள் தவிர்க்கோணும். அதோடை கழிவுப் பொருட்களைக் கொண்டு படங்களை உருவாக்கிறது நல்லம். கொஞ்சப்பேர் அப்பிடிச் செய்திருக்கிறீங்கள் தான். இலைகள், தாள்கள், சவர்க்கார உறை, வைக்கல், உமி, தேயிலை வடிச்ச தூள் இப்பிடி எத்தினையோ கழிவுப் பொருள் இருக்கு" எண்டவ ஒவ்வொருத்தரா பாத்துக்கொண்டு வந்தா. அவவுக்கு கிளியையும், வண்ணத்துப்பூச்சியையும் பிடிச்சுப் போச்சு. என்ரையையும் பாத்து 'குட்' எண்டா. ஆனா வடிவா அழுத்தமா ஒரே சீரா ஒட்டியிருந்தா இன்னும் வடிவாயிருக்கும் எண்டா... எனக்குப் பெரிய புழுகமில்லாட்டிலும் இப்பிடித்தான் செய்யவேணுமெண்டு அவ சொன்னதிலை ஒரு சந்தோசம்.

ஆனா அனிஸ் வேற மாதிரிச் சொன்னான். எனக்கு அம்மா, அப்பா இல்லையெண்ட படியால் தானாம் ரீச்சர் அப்பிடிக் கதைச்சவவாம். என்ரை படம் வடிவாயில்லையாம். எனக்கு அவன் சொன்னபடியால பெரிய கவலையாப் போச்சுது. அவனிலை கோபமும் வந்திட்டுது. பேசாமல் இருந்திட்டன். மத்தியானச் சாப்பாடு குடுக்கேக்கை நான் ஆசையா வாங்கி ஒரு பொருக்கும் விடாமல் சாப்பிட்டன். அனிஸ், மணியாக்கள் உந்தச் சாப்பாட்டை விட தங்கட சாப்பாடு நல்லமெண்டு சொல்லி, கொஞ்சத்தைக் கொட்டிப் போட்டாங்கள். அதை அவங்கள் வாங்கிக் கொடாமலிருந் திருந்தால் அதை நான் அம்மம்மாவுக்குக் கொண்டு போயிருக்கலாம். வீணாக்கிப் போட்டாங்கள். பள்ளிக்கூடம் முடியுற நேரம் எல்லாரையும் கூட்டிக்கொண்டு போக ஆக்கள் வந்தினம். மோட்டச் சைக்கிள், சைக்கிள் எண்டு அப்பாமார், அம்மாமார், அக்காமார், அண்ணாமார் எண்டு பலபேரும் வந்திருந்தினம். என்னைப் போலை சில பேரைத் தான் கூட்டிக்கொண்டு போக ஒருதரும் வரேல்லை. ஒழுங்கையுக் குள்ளாலை, விட்டுப்போற பிள்ளையள் நடந்து போச்சுதுகள். உமாவும் அதுக் குள்ளாலை தான் போச்சுது. கச்சல் நெல்லிக்காயை வாய்க்குள்ளை போட்டு சப்பிக்கொண்டு 'வேணுமா?' எண்டு என்னைப் பாத்துக் கையை நீட்டிச்சுது. 'எனக்கு வேண்டாம்' எண்டிட்டன். அம்மா, அப்பா இல்லையெண்டு என்னைப் பாவம் பாத்துத் தருகுது. அப்படி ஒருதரும் என்னைப் பாவம் பாக்க வேண்டாம் எண்டு வீம்பு வந்துது. எண்டாலும் நெல்லிக்காய் தானே. வாங்கியிருக்கலாம் எண்டு பேந்து நினைச்சன்.

'எங்கட வீட்டைத் தாண்டிப் போற நேரம் உமா திரும்பிப் பாத்துது.

'ரவீன்ரை வீட்டை ஆரோ வந்திருக்கினம்..." எண்டு சத்தமாய்ச் சொல்லிக் கொண்டு போச்சுது...

எங்கட வீட்டை ஆர் வருவினம் எண்டு எனக்கு ஒரே ஆச்சரியம். விழுவிழுவெண்டு ஓடுற மாதிரி உள்ளை போனால் எனக்கு என்ரை கண்ணை நம்பேலாமல் கிடக்கு. அப்பப்பா வெளியிலை கிடந்த வாங்கிலை இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலை தம்பி பவித்திரன். எனக்கு ஒரே சந்தோசமாய்ப் போச்சு. ஓடிப்போறன். தம்பியைக் கட்டிப் பிடிக்கிறன். அப்பப்பா விலை தாவி ஏறுறன். அப்பப்பா அழுறார். 'சுகமா இருக்கிறியோ தம்பி...' என்றுறார். தம்பி என்னைப் பாத்து மெல்லச் சிரிக்கிறான். அவனுக்கு நல்ல ஞாபகம் வரேல்லைப் போலை. இடுக்கித் தூக்கப் பாக்கிறன். கை நோகுது. ஷெல் பீஸ் பட்ட கை தானை. ஏலாமல் போச்சு. அப்பப்பா கையைத் தூக்கிப் பாக்கிறார் தம்பியும் புதினம் பாக்கிறான்.

"அப்ப நீங்கள் துண்டு வெட்டி வரேல்லையோ...?" அம்மம்மா கேக்கிறா.

"துண்டு வெட்டினால் பேந்து முகாமிலை கொண்டு வந்து போட்டுவாங்கள்.... அதாலை துண்டு வெட்டமுதல் ஆஸ்பத்திரியாலை வெளிக்கிட்டிட்டு, வவுனியாவிலை தோணிக்கல்லிலை சங்கரன் வீட்டை இருந்தனாங்கள்... இஞ்ச வந்து அஞ்சாறு மாதம் ஆகுது..."

அம்மம்மா சொல்லிப் போட்டுக் கேட்டா... "நீங்கள் எப்ப வந்தியள்"

"நாங்களும் சனங்களோடை சனமா வவுனியாக்கு வந்து வீரபுரம் முகாமிலை வச்சிருந்தவங்கள். விடுறம் விடுறம் என்று இழுத்தடிச்சு இஞ்ச கொண்டந்து விட்டு இப்ப எட்டுமாசம் ஆகுது..."

"இப்ப எங்கை இருக்கிறியள்...."

கொக்குவிலிலை என்ரை ஒண்டு விட்ட சகோதரம் ஒண்டு இருக்குது... அங்கைதான்.

"சின்னவன் முகாமுக்கை சரியாக் கஷ்டப்பட்டிருப்பான். பாவம் என்ரை சின்னக் குட்டி"

அம்மம்மா பவித்திரனைத் தூக்கிக் கொஞ்சுறா....

"பவி... பள்ளிக்கூடம் போறியோ..." என்று தம்பியைப் பாத்துக் கேட்டன்.

அப்பப்பா... என்னை ரவுண் பள்ளிக் கூடத்திலை சேத்து விட்டிருக்கிறார்... என்டான். என்ரை பாக்கைத் திறந்து கொப்பிகளை எடுத்துப் பாத்தான். சித்திரக் கொப்பியின்ரை பக்கங்களைத் தட்டித் தட்டிப் பாத்தான். கடைசியாய் நான் ஒட்டி வைச்சிருந்த யானையைப் பாத்து "பெரிய... யானை.." என்டு சிரிச்சான்.

"நான் என்ரை தம்பிக்கு இதைவிட வடிவா கீறி, நான் எல்லாம் ஒட்டித் தருவன்..." என்டு நானும் ஆசையாச் சொன்னன்.

"என்ன மாதிரி சீவியம்...." அம்மம்மா அப்பப்பாவிட்டைக் கேக்கிறா....

"நிவாரணம் தாறதாலை பறவாயில்லை...." என்டார் அப்பப்பா.

"எனக்கினிப் பறவாயில்லை. தனிக்கட்டையாப் போயிடுவன்... தின்னாமல் குடிக்காமல் கிடக்கலாம். இவனை உங்களிட்டை ஒப்படைச்சுப் போட்டால்..." என்டா அம்மம்மா.

"அவன் உங்களிட்டையே இருக்கட்டும்..." என்டார் அப்பப்பா.

"என்னாலை இந்த வயசான காலத்திலை ஏலாது. நல்லா நொடிச்சுப் போனன். உங்களிட்டை வந்தால் நிவாரணத்திலையாவது பிள்ளை கொஞ்சம் சீவிக்கட்டும்...." என்டா அம்மம்மா.

"என்ன விசர்க்கதை கதைக்கிறீங்கள்... என்னாலை மட்டும் ஏலுமோ... ரெண்டு பேருக்கும் மட்டும் வாற நிவாரணத்திலை சீவிக்கிறம்" என்டார் அப்பப்பா.

"அப்ப சின்னவனையும் என்னட்டை விடுங்கோ. பாவம் சகோதரங்களைப் பிரிக்க வேண்டாம்...." என்டா அம்மம்மா

"அவனைப்பொறுத்து விடுற. நீங்கள் களவா வந்தனீங்கள். அவன் என்னோடை முறைப்படி வந்தவன். உங்களோடை விட்டா அவனுக்கும் நிவாரணம் வெட்டுப்பட்டுப் போம்..."

"களவா வந்ததோ..." நான் திடுக்கிட்டுப் போனன். அம்மம்மாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிடித்தான் வாயடைச்சுப் போனா.

தம்பி என்ரை கையைப் புரட்டிப் புரட்டி" எங்கை அண்ணா மருந்து போட்டது. என்டு கேக்கிறான். நான் ஒண்டும் பேசாமல் நிக்கிறன்.

"இப்ப இப்பிடியே இருப்பம். பிறகு பாப்பம். ஏதாவது ஒரு வழி வரும் தானே. அப்ப ரெண்டு பிள்ளையளையும் ஒண்டாச் சேர்க்கிற வழியைப் பாப்பம்" என்றிட்டு அப்பப்பா தம்பியைக் கூட்டிக்கொண்டு படலைப்பக்கம் போறார். தம்பி என்ரை பாக்கைத் திறந்து எடுத்துப் பாத்த சித்திரக் கொப்பியின்ரை பக்கங்கள் காத்திலை படபடக்குது. அதைப் பாக்க நான் அவனுக்கு ஒட்டிக் குடுப்ப நினைச்ச கிளி எழும்பி பறக்குது போலை கிடக்கு. தம்பி திரும்பித் திரும்பிப் பாத்தபடியே போய்க் கொண்டிருக்கிறான். எனக்கு தலை சுத்துற மாதிரிக் கிடக்கு..........

□□□□

தாயகம்

## சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| **இலங்கை** | | | |
| ஒரு ஆண்டு | - | ரூபா | 300.00 |
| இரண்டு ஆண்டு | - | ரூபா | 600.00 |
| மூன்று ஆண்டு | - | ரூபா | 900.00 |
| **கனடா** | | | |
| ஒரு ஆண்டு | - | டொலர் | 20.00 |
| இரண்டு ஆண்டு | - | டொலர் | 40.00 |
| மூன்று ஆண்டு | - | டொலர் | 60.00 |
| **பிரித்தானியா** | | | |
| ஒரு ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் | | 8.00 |
| இரண்டு ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் | | 15.00 |
| மூன்று ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் | | 20.00 |
| **ஐரோப்பிய நாடுகள்** | | | |
| ஒரு ஆண்டு | - | ஈரோ | 10.00 |
| இரண்டு ஆண்டு | - | ஈரோ | 20.00 |
| மூன்று ஆண்டு | - | ஈரோ | 30.00 |
| **அவுஸ்திரேலியா** | | | |
| ஒரு ஆண்டு | - | டொலர் | 20.00 |
| இரண்டு ஆண்டு | - | டொலர் | 40.00 |
| மூன்று ஆண்டு | - | டொலர் | 60.00 |

# மாரி வரும்

- சீதனன் -

முகிலற்ற வெறுவானம்
முணுமுணுப்பாக [illegible]
தலைக்குமேல்
கொழுத்துகின்ற
கோடை வெயிலில்

நிழலற்ற நீள் வழியில்
தொடரும் நெடும் பயணம்
கொடுந்துயர மானாலும்
நம்பிக்கை நிழல் விரியும்

கோடை கொடு வெயிலில்
வாடி மடிந்த பயிர்
வேர்முகிக விழ்ந்த விதை
மண்ணில் உயிர்தரிக்கும்

காலங்கள் மாறும்
மாறிவிடும் கோடை
மாரிவரும் மண்ணில்
சுரம் மீள ஊறும்.

மண்ணில் புதைந்த விதை
மாரிவரை காத்திருந்து
முளை அவிழ்த்து
முகம் சிரிக்கும்

கார்முகில்கள் மூடி
கறுப்பாகும் வானம்
கொட்டி இடி இடிக்க
மின் வெட்டி வெளிச்சமிட
பேய்க்காற்றும் சேர்ந்து
பேரிசைகள் மீட்டும்

வானம் சொரியும்
பெரு மழையில்
மழைத்துளிகள் கூடி
மடைதிறக்கும் புதுவெள்ளம்

நாளும் தொடர்ந்து வரும்
வாழ்வின் அனுபவங்கள்
நல்லவைகள் கெட்டவைகள்
யாவும் கலந்தது போல்
பள்ளம் நோக்கி
மழை வெள்ளம் பாய்ந்து வரும்
கூளம் குப்பைகளை
கூட்டி அள்ளி வரும்
தேங்கித் தாமப் நின்று
சேறாய் சகதிகளாய்
ஊறி நிலத்தடியின்
ஊற்றாய் சுவைக்க வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டுப் பறவை.....

- கல்லிருந்து வெள்ளைபுரியாள் -

என்னைக்
கைப்பிடித்ததிலிருந்து
ஒரு கூண்டுப் பறவையாகவே
கணக்கெடுக்கிறாய் நீ

நேற்றைய அந்த ராத்திரிப்
பொழுதுகளில் என்
கன்னங்களில்
நீ அறைந்த அறை
ஒவ்வொன்றின் போதும்
தெறித்த ரத்தத் துளிகள்
ஒவ்வொன்றும் - இன்றும் என்
வீட்டு அடுக்களைச்
சுவர்களில் - கறைபடிந்த
சித்திரங்களாய்

உன் அடாவடித்தனங்களின்
பிரதி பிம்பங்களாய்
காட்சி தருகிறது
நீ நினைத்திருக்கலாம்
என்னை
"ஊமை" வித்தென்று

நீ நினைத்திருக்கலாம்
என்னை
ஆசைக்கும் மோகத்துக்கும்
மட்டுமான
இன்பக் கட்டிலென்று

நீ நினைத்திருக்கலாம்
எப்படியும் "இவளை"
அடக்கி ஆளலாமென்று

உனது அடியும் உதையும்
ஆக்கினைகளும்
தினமும்
தொடர்ந்த கொடுமைகளும்
கடந்த மூன்று தசாப்த காலமாக
இங்கே இடம் பெற்ற

உள் நாட்டுப் போரை விடவும்
உக்கிரமானது

இன்று நான் - உனது
அடக்கு முறைகளையும்
ஒடுக்கு முறைகளையும்
உடைத்தெறியும் மனவலிமையோடும்
உள்ளக் கொதிப்போடும்
ஆழ்கடல் சூறையாயும்
சீறும் புயலாயும்
பாரதியின் அக்கினிக் குஞ்சாயும்

இன்னும் அந்த
பீனிக்ஸ் பறவையாயும்
"புரட்சிப் பெண்ணாக"
உயர்ச்சி பெறுவேன்

ஓ..
இனி நான்
கூண்டுப் பறவை அல்ல
கூண்டினை
உடைத்தெறியப் போகும்
ஒரு
சுதந்திரப் பறவையாவேன்.





நூல் : செங்கதிர்
ஆசிரியர் : செங்கதிரோன்
தொடர்புகள் : திரு.த.கோபாலகிருஷ்ணன்
19, மேல்மாடித்தெரு,
மட்டக்களப்பு.
விலை : 60/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜராஜ சோழன் ஆட்சி! பார்ப்பனியத்தின் நீட்சி



பெரிய கோவிலை எழுப்பிய ராஜராஜனின் ஆட்சியில்தான் குட வோலை முறை எனும் ஜனநாயக முறை செழித்திருந்ததாகவும், வேந்தன் முன்னெப் போதும் இல்லாத வகையில் நிலங்களை அளந்து முறைப்படுத்தி 'உலகளந்தான்' எனும் பெயர் பெற்றதாகவும் கூறி 'தமிழனின் பொற் கால ஆட்சி' என கலைஞர் முதல் தமிழின வாதிகள் வரை பலராலும் போற்றப் படுகிறது ராஜராஜனின் ஆட்சி.

உலகின் மிக உயரமான கோபுரங்களைக் கொண்ட, பழமையான பெருங் கோவில்களில் தஞ்சைப் பெரிய கோவிலும் ஒன்று. இன்றிருப்பதைப் போன்ற நுட்பக் கட்டுமானப் பொறி நுட்பங்கள் ஏதும் வளர்ந்திராத, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கட்டிடப் பொறியியலில் மாபெரும் சாதனையாகக் கட்டப்பட்டதால் இந்தக் கோவில், மழைபெய்தால் நீர்க்கசிவு ஏற்படாதிருக்கப் பதிக்கப்பட்டிருக்கும் நான்குழாய்கள், ஒரே கல்லினால் ஆன மிகப் பெரும் நந்தி எனப் பல்வேறு பிரம்மாண்டமான பொறியியல் சாதனை களை எல்லாம் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே சாதித்துக் காட்டிய மாமன்னன் ராஜராஜன் போற்றிக் கொண்டாடப் படுகிறான். கூடவே அவனது ஆட்சியும் தமிழகத்தின் பொற்கால ஆட்சி என்று புகழப்படுகிறது.

தஞ்சைப் பெரிய கோவிலின் கலைநுட்பமும், பொறியியல் சாதனையும் மனிதகுல வரலாற்றில் மகத்தான படைப்புகள் தான். அதே போல் எகிப்தின் பாரோக்கள் கட்டிய பிரமிடுகளும், சீனப் பெருஞ்சுவரும் கூட மனித வரலாற்றின் பெரும் சாதனைகள் தான் எனினும் அவை பொற்காலங்களாகக் கொண்டாடப்படுவ தில்லை. கலைத்திறனைப் போற்றுவது என்பது வேறு அரசாட்சியைக் கொண்டாடுவ தென்பது வேறு.

அன்றாடம்காய்ச்சிகளாக வாழும் அப்பாவித் தமிழர்கள் கூட இப்பெருமிதக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 'கடாரம் கொண்டான்' என்றும் சோழ சாம்ராச்சியம் என்றும் வழியும் கோபுர மாத்திரத்தில் 'நம் தமிழனின் பெருமை' என்று பெருமிதத்துள் வீழ்கின்றனர்.

வரலாறு நெடுகிலும், மன்னர் ஆட்சி, உழைக்கும் மக்களுக்கு கொடுங்கோல் ஆட்சியாகவே இருந்துள்ளது. இருப்பினும் அம்மன்னர்களின் வரலாற்றுப் பாத்திரம் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. அசோகனின் பாத்திரமும் புஷ்யமித்ர சுங்கனின் பாத்திரமும் வேறுவேறுதான். முன்னெப் போதும் இல்லாப் பிரம்மாண்டமாக ராஜராஜன் பெரியகோவிலை எழுப்பியது ஏன்? அக்கற்றளிக் கோவிலின் கம்பீரம் மூலம் அவன் எதைச் சொல்ல நினைத்தான்.

**அடிமை உழைப்பிலும் போர்க் கொள்ளையிலும் உருவான பெரிய கோவில்!**

ராஜராஜனுக்கு முன்னர் நடுகல் வழிபாடுதான் தமிழ்நாட்டில் பரவி இருந்தது. அக்கம் பக்கமாக குறிஞ்சி (மலை சார்ந்த) முல்லைப் பகுதிகளில் (காடு சார்ந்த) இருந்த வேளிர் எனும் இனக்குழுக்களின்

அரசுகளை ஒழித்துக் கட்டி, மறுபுறப் பரப்பில் பேரரசுகள் உருவாக்கம் பெற்ற வரலாற்றுக் காலமே ராஜராஜனின் காலம். தொடர் போர்கள் மூலம் சிற்றரசுகளை நிர்மூலமாக்கி, அவ்வரசுகளின் செல்வங்களை எல்லாம் கவர்ந்து வந்து தன் பேரரசைக் கண்டாலே அனைவரும் அச்சத்தால் உறைந்திடச் செய்யும் மாபெரும் சின்னம் ஒன்றை உருவாக்குவதும், அச்சின்னத்தையே அதிகார மையமாக மாற்றுவதுமே ராஜராஜனின் நோக்கமாக இருந்திருக்கிறது. அவ்வாறு உருவாக்கப்பட்டதுதான் பெரிய கோவில்.

சங்கம் மருவிய காலத்தின் பின்வந்த களப்பிரர் காலத்தில் வைதீகத்தின் கொட்டம் அடக்கப்பட்டு சமணம் தழைத்தோங்கி இருந்தது. களப்பிரர்களை வீழ்த்திய பாண்டிய பல்லவர்கள் காலத்தில் ஆற்றுப்பாசனம் வளர்ச்சி பெற்று வேளாண் உற்பத்தி பெருகியது. சிற்றரசுகள் வீழ்த்தப்பட்டு பெருவேந்தர்கள் உருவாகும் வரலாற்றுக் கட்டத்தைச் சேர்ந்தது சோழர் ஆட்சி. கழுவேற்றி சமணத்தைக் கருவறுத்த சைவத்தின் வெற்றி, ராஜராஜனின் பேரரசு உருவாக்கத்தோடு ஒருங்கிணைந்தது. இக்காலத்தில் தான் சைவக்கொழுந்துகளான வேளாளர்களும் பார்ப்பனர்களும் கூட்டணி கட்டிக்கொண்டு அதிகார மையமானார்கள். இவர்களின் ஆட்சிக்கு பெரிய கோவில்தான் மைய அச்சாக இருந்தது.

கருங்கற்பாறைகளே இல்லாததும் காவிரியாறு கொண்டு வந்து சேர்த்த வண்டலால் நிரம்பியதுமான தஞ்சைப் பகுதியில், ஒரு லட்சத்து முப்பதாயிரம் டன் கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடம்தான் பெரிய கோவில். கட்டடக் கலை சார்ந்த நவீன தொழில் நுட்பங்களோ, சாலைகளோ போக்குவரத்து வசதிகளோ இல்லாத அந்தக் காலத்தில் இத்தனை பெரிய கட்டடத்தைக் கட்டி முடிக்க, எவ்வளவு மனித உழைப்பு தேவைப் பட்டிருக்கும்? இந்தக் கட்டுமானப் பணியில் எத்தனை பேர் தங்களது உயிரை இழந்திருப்பார்கள்.?

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இந்தக் கோவிலை அடிமைகளின் இலவச உழைப்புதான் உருவாக்கியது. தனது ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து போர்கள் நடத்திய ராஜராஜன் போரில் தோற்ற நாட்டு வீரர்களைக் கைதிகளாக்கிக் கொண்டு வந்து அவர்களின் உழைப்பிலேயே இக்கோயிலை எழுப்பினான். போர்க்களங்களில் இருந்து கைதிகளை மட்டுமல்ல இக்கோவிலுக்குத் தேவையான அனைத்தையும் கொள்ளையடித்துத்தான் கொண்டு வந்தான்.

மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனை வென்றபோது கைப்பற்றப்பட்ட செல்வங்களும், ஈழம், கேரளத்தின் தென் பகுதி, ஆந்திரத்தின் தென் பகுதி ஆகியவற்றை வென்று அந்நாடுகளின் கருவூலங்களைக் கொள்ளை அடித்த செல்வங்களும்தான் 216 அடிக்கோபுரமாகியது. மலைநாடு எனப்படும் சேரநாட்டை வென்றபோது எடுத்து வந்த பொன் நகைகளும், பாண்டிய நாட்டை வென்றபோது கொள்ளையடித்து வந்த முத்து, பவளங்களும்தான் பெருவுடையாருக்குரிய நகைகளாயின.

சாளுக்கிய நாட்டிலிருந்து கொள்ளையிட்டு பெருவுடையாருக்கு சொந்தமாக்கப்பட்ட 87,593 கிலோ தங்க நகைகளும், சேர, பாண்டிய நாட்டுக் கொள்ளையில் கிடைத்த 95,277 கிலோ வெள்ளியும் இதில் அடக்கம். ஈழப் போரின்போது கைப்பற்றப்பட்ட கிராமங்கள் பெரிய கோவிலுக்கான வருவாய்க் கிராமங்களாக (நிவந்தம்) விடப்பட்டிருந்தன. இவ்வாறு அண்டை நாடெங்கும் போர் தொடுத்து கொள்ளையடித்த பொருட்களால் உருவானதுதான் தஞ்சைப் பெரிய கோவில்.

இக்கோவில் உருவாவதற்காக தென்னகத்தில் சொரிந்த ரத்த ஆறு ஓயவேயில்லை. இருந்தது. காந்தளூரில் (இன்றைய திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி) சேரனைத் தோற்கடித்து, உதகை நகர் (கல்குளம் வட்டம்) கோட்டை தகர்க்கப்பட்டு எஞ்சிய நகரெங்கும் தீவைக்கப்பட்டது. இது அவனுடைய மெய்க்கீர்த்தியில் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி' என்று சொல்லப்படுகிறது.

அண்மையில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் இதன் அடுத்த வரி 'மலையாளிகள் தலை அறுத்து' என்றுள்ளதாக முனைவர் தொ. பரமசிவம் குறிப்பிடுகிறார். அடுத்து மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனைத் தோற்கடித்த போரில் நகரங்களைக் கொளுத்தியும், குழந்தைகள் எனக்கூடப் பாராது அனைவரையும் கொன்று வெறியாட்டம் போட்டது சோழர் படை.

கன்னிப் பெண்களைக் கைப்பற்றி மனைவியராக்கிக் கொண்டும் அளவற்ற பொருட்களைக் கவர்ந்து கொண்டும் தன் நாட்டிற்குத் திரும்பினான்.

ஈழத்தின் மீது படை எடுத்து அந்நாட்டு அரசியையும், அரசகுமாரர்களையும் கைப்பற்றி வந்தனர். புத்தமடாலய நினைவுச் சின்னங்களில் இருந்த பொன்னாலான உருவங்களைக் கொள்ளை அடித்தனர். இந்தப் படையெடுப்பின்போது அநுராதபுரம் நகரை தீவைத்து அழித்தனர். புது நகராக பொலன்னறுவையை உருவாக்கினர். ஜெயாதுபுத் சராக்குக்கு ஜனநாயகம் வழங்கியதைப் போல ஜனநாதபுரம் என அதற்குப் பெயருமிட்டனர்.

நாட்டு மக்களைச் சுரண்டிய பெரிய கோவில் பொருளாதாரம்!

ஆகம நெறிப்படி பிரமாண்டமாகக் கட்டப்பட்ட கோவில்களில் தஞ்சைப் பெரிய கோவிலே முதற்கோவில் என்பர். சைவம் பரப்பும் வேலையை மட்டும் அக்கோவில் செய்து கொண்டிருக்கவில்லை. சோழர் காலத்தின் வட்டிக்கடையாகவும், நில உடைமையாளராகவும், பொற்கொல்லராகவும் அரசின் அதிகாரமாகவும் விளங்கியது.

சோழநாட்டின் விளை நிலங்களில் பெரும்பகுதி பெருவுடையார் கோவிலுடன் இணைக்கப்பட்டிருந்தது. குடிகளிடம் இருந்து விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு கோவிலுக்கு வசூலிக்கப்பட்டது. கோவில் நிதிக் குவியலில் (பண்டாரம்) இருந்து விவசாயிகள் தமது தொழிற் தேவைகட்கும், பெண்களுக்கு சீதனம் தரவும் கடன் பெற்றனர். பெருவுடையார் கோவில் கணக்கில் இருந்த பல்லாயிரக் கணக்கான கழஞ்சு பொன்களும், காசுகளும் பெரும்பாலும் பல ஊராட்சி மன்றங்களுக்கும், சபைகளுக்கும் கடனாகத் தரப்பட்டு 12 சதவீதம் வட்டியாக (பணமாகவோ பொருளாகவோ) வசூலிக்கப்பட்டது.

சிறிய அளவில் நிலம் வைத்திருந்த விவசாயிகட்குக் கடன் கொடுத்து விளைச்சல் இல்லையால் அவர்கள் கடன் கட்டத் தவறிய போது, அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டு பெரிய கோவிலுக்கு சொந்தமாக்கப்பட்டன. கடனாளியான விவசாயிகளை கோவில் அடிமைகளாக்கி அவர்கள் முதுகில் சூட்டுக் கோலால் சூடுபோட்டு, கோவில் நிலங்களில் வேலை செய்ய வைத்தனர்.

> தஞ்சைப் பெரிய கோவிலின் கலை நுட்பமும், பொறியியல் சாதனையும் மகத்தானதுதான். ஆனால் அம் மகத்துவங்களைக் கண்டு பிரமித்து மட்டும் நிற்காமல் அதன் பின்னால் மறைந்துள்ள மனித வதைகளையும் நாம் கண்டுகொள்ள வேண்டும். புனிதங்களை கேள்விக்கு உட்படுத்துவது மட்டுமல்ல மனிதத்துவத்தை கட்டி எழுப்புவதற்கு உரமாகவும் மாற்றுச் சிந்தனைகள் அமைய வேண்டும். அதற்கு ஓர் உந்துதலாக இக்கட்டுரை இங்கு மீள் பிரசுரமாகிறது.
>
> - ஆசிரியர் குழு -

பெரிய கோவில் இறைத் திருமேனிக்கு ராஜராஜன் அளித்தது 2,692 கிலோ தங்கமாகும். பெரிய கோவிலுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து காணிக் கடனாக ஆண்டொன்றுக்கு வந்த நெல் மட்டும் 1 லட்சத்து 20 ஆயிரம் கலம். ஆண்டொன்றுக்கு கோவிலுக்கு வந்த வருவாயில் நெல் தவிர பொன், 300 கழஞ்சு, காசுகள் 2 ஆயிரம் என நாட்டின் ஒட்டுமொத்த செல்வமுமே பெரிய கோவிலில் குவிக்கப்பட்டிருந்தது. இவற்றை நிர்வாகம் செய்வதற்கென 4 பண்டாரிகள், 116 பரிசாரகர்கள், 6 கணக்கர், 12 கீழ்க் கணக்கர் பெரிய கோவிலில் பணி புரிந்தனர். கோவிலுக்கு நெல்லும், பொன்னும் கட்டாயமாகத் தரவேண்டும் என 57 கிராமங்களுக்கு ராஜராஜன் உத்தரவிட்டிருந்தான்.

அன்றாடம் இந்தக் கோவில் இயங்குவதற்கான இலவச உழைப்பும் மக்களிடம் இருந்து பெறப்பட்டது. இக் கோவிலுக்கு நந்தா விளக்கெரிப்பதற்காக 400 இடையர்களுக்கு 'சாவா மூவா பேராடுகள்' எனும் பெயரில் ஆடு, மாடு, எருமைகள் வழங்கப்பட்டன. 'வெட்டிக் குடிகள்' என அழைக்கப்பட்ட இந்த 400 பேரும் கோவிலுக்கு விளக்கெரிக்க நாளொன்றுக்கு உழக்கு நெய் கொடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. கோவிலுக்குக் கொடுத்தது போக, இவர்களுக்கு ஆடுமாடுகளிடமிருந்து கிடைத்த உபரியைத் தவிர வேறு சம்பளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. கால்நடைகளின் எண்ணிக்கை குறையாமல் அவற்றைப் பராமரித்து கோவிலுக்கு நெய் அளக்கும் வெட்டிக் குடி (ஊதியம் இல்லா வேலையாட்கள்) களாக அவர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டது. நெய் அளக்கத் தவறிய இடையர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

வெட்டிக் குடிகளைப் போன்றே பல பெண்கள், பெரிய கோவில் நெல் குற்று சாலையில் சம்பளம் இன்றி வேலை செய்ய அமர்த்தப்பட்டனர். ஆனால், பார்ப்பனர்களுக்கென்று, வேதம் கற்க பாடசாலைகள், உணவு உறைவிட வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலை மாணவர்களுக்கு 6 கலம் நெல்லோடு 1 பொன் உபகாரச் சம்பளமாகவும் வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்தும், நிலப்பறிப்புச் செய்தும், அரச வல்லமையால் வரி தண்டிச் சுரண்டியும் தான் பெரிய கோவில் வானுயர்ந்து நின்றது.

பாரம்பரிய நிலவுடைமை ஆதிக்கத்தின் காவல்!

இவ்வாறு பெரிய கோவில் செழித்திருந்த காலத்தில் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது?

பார்ப்பனரைத் தவிர அனைத்துத் தரப்பினரும் தத்தம் ஊர்களுக்கு அரசு ஏற்பாடு செய்திருந்த காவலுக்கென்று 'பாடி காவல் வரி' செலுத்தினர். கைத்தொழில் செய்வோர் ஒவ்வொரு தொழிலுக்கும் வரி (இறை) செலுத்த வேண்டியிருந்தது. நெசவாளர் 'தறி இறை'யும், எண்ணெய் பிழிபவர் 'செக்கு இறை'யும், தட்டார், தட்டாரப் பாட்டமும், தச்சர், 'தச்சு இறை'யும் வரிகளாகச் செலுத்தினர். மக்களிடமிருந்து புரவு, இரவு, குடிமை, திருமண வரி, போர்வரி எனப் பல வரிகளை அரசு வசூலித்த அதே நேரத்தில் ஊர், சபை போன்ற அமைப்புகளும் தனியாக வரி விதித்தன. இவ்வாறு விதிக்கப்பட்ட 400க்கும் மேற்பட்ட வரிகளில் பெரும் பாலானவை, பார்ப்பன, வெள்ளாள சாதி தவிர்த்த பிற சாதியினரிடமிருந்துதான் வசூலிக்கப்பட்டன.

விவசாயிகள், விளைச்சலில் ஆறில் ஒரு பங்கை வரியாக செலுத்த வேண்டியிருந்தது. அந்த வரிக்குக் 'கடமை' எனப் பெயரிட்டு தன் மூலம் அரசுக்கு நெல் கொடுப்பது உழவர்கள் வாழ்வின் நிரந்தரமான கடமையாக்கப்பட்டிருந்தது. இந்த வரியை செலுத்தத் தவறினால் நிலம் பிடுங்கப்பட்டு அந்த நிலம் ஊர்ப் பொதுவாக்கப்பட்டது. மக்கள் பஞ்சத்தாலும் வறுமையாலும் வாடியுள்ளனர். வரிகொடுக்க இயலாதோரின் நிலங்கள் ஈவிரக்கமின்றிப் பறிமுதல் செய்யப்பட்டன. ஊர்களோ அதனை விற்று பணத்தை வரியாக (இறை)க் கட்டின. நிலத்தைப் பறித்தல்தான் அன்றைய சமூக அமைப்பில் மிகப் பெரிய தண்டனையாக இருந்தது.

சோழர் ஆட்சிக்காலத்தில் அடிமை முறை இருந்துள்ளதையும் வறுமையினால் மக்கள் தம்மை கோவிலுக்கு அடிமையாக விற்றுக் கொண்டதையும் கல்வெட்டு ஆதாரங்கள் காட்டுகின்றன. ஆறு பேர் பதின்மூன்று காசுகளுக்குத் தம்மைப் பெரிய கோவிலுக்கு விற்றுக் கொண்டுள்ளனர். நந்திபுரம் மங்கலத்தில் பதிகம் பாடுவதற்காக 3 பெண்கள் பரிசளிக்கப் பட்டனர். திருவிடந்தைப் பெருமாள் கோவில் எனும் ஊரிலுள்ள ஸ்ரீவராகதேவர் கோவிலுக்கு 12 மீனவர் குடும்பத்தினர் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டிருக்கின்றனர். இதே போல நெசவாளர்களும் கோவிலுக்கு அடிமை களாக தம்மை விற்றுக் கொண்டுள்ளனர். இவ்வடிமைகள் தங்களின் தொழில் மூலம் வரும் வருவாயில் கணிசமான பங்கை கோவிலுக்குத் தர வேண்டும் என்றும், ஆண்டுக்கு இருமுறை வரும் கோவில் திருநாட்களில் பணிகள் செய்யவேண்டும் என்றும் விதிகள் இருந்தன.

பார்ப்பனர் அல்லாதோரின் பஞ்சாயத்து ஆதிக்கத்திலுள்ள கிராமங்களை 'ஊர்கள்' என்றழைத்தனர். ஊர்களின் நில உரிமைகளை மாற்றியும் கோவிலுக்குக் குடிகள் கொடுக்க வேண்டிய காணிக்கையை அதிகரித்தும் ராஜராஜன் கட்டளை பிறப்பித்தான்.

தங்கள் தேவைக்கென சிறு அளவில் வேளாண்மை செய்து வந்தவர்களின் நிலங்கள் அவ்வப்போது ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்டு அந்த உழவர்களைக் கூலியாக மாற்றியோ (குடி நீக்கியர்) குத்தகையாளராக மாற்றியோ (குடி நீக்காமலோ) அவர்களின் நிலங்கள் கோவிலுக்குச் சொந்தமாக்கப்பட்டன.

அரசனுக்கும், கோவிலுக்குமான பங்கான மேல்வாரமும் குத்தகைதாரர்களின் பங்கான கீழ்வாரமும் எடுக்கப்பட்டபின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் சிவத்தம்பியை நினைவுகூர்கிறோம்



மூத்த தமிழறிஞர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஐம்பதுகளில் இலங்கையில் எழுச்சியடைந்த முற்போக்கு கலை இலக்கியச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். கல்விப் புலத்தின் பல்வேறு துறைகளிலும் தனது பங்களிப்பை நல்கியவர். பல பயனுள்ள ஆய்வு நூல்களை தந்து சென்றவர்.

அவர் நமக்குரிய கருத்து நிலைப்பாடுகளை கொண்டிருந்த போதும் போர்க்காலச் சூழலின் தேசிய கலை இலக்கியப் பேரவையினர் ஏற்பாடு செய்த கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்குகொண்டிருந்தார். கலைஞர்கள், கலை இலக்கிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த சமாதானத்துக்கான முயற்சிகளிலும் அவரது பங்களிப்பு இருந்தது. அத்துடன் போர்ச் சூழலில் வாழ்ந்த ஒரு மூத்த அறிஞர் என்ற வகையில் ஏனைய கல்வியாளர்களையும் இணைத்து அவர் செய்யக்கூடிய பணிகளை ஊக்குவிக்கும் வகையில் தேசிய கலை இலக்கியப் பேரவை ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. காலத்தின் தேவை கருதி வெறுமனே விலகி நின்று செய்யும் விமர்சன முறையை விடுத்து பேராசிரியர் சிவத்தம்பி அவர்களை முன் நிலைப் படுத்தி அமைந்த விமர்சன கலந்துரையாடலிலும் அவர் கலந்து கொண்டார். இவர் எல்லோருடனும் அன்புடன் பழகி இவர் ஆற்றிய கலை இலக்கிய, கல்விசார் புலமைத்துவப் பணிகள் இவரை என்றும் நினைவுறுத்தும். தாயகம் இணைந்து அவரது மறைவை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறது.

வரி அறிவித்துள்ள மானியங்களை உரியவர்களுக்குக் கொடுத்த பின்பு எஞ்சியதே உழவர்களுக்குக் கிடைத்தது. இது விளைச்சலில் பத்தில் ஒரு பங்கை விடக் குறைவானது. 'மேல் வாரமாக' செலுத்த வேண்டிய விளைச்சல் ஆண்டுகளிலே அதிகமாக இருந்ததுடன் அடிக்கடி இந்த அளவு உயர்த்தப் பட்டுக் கொண்டே போனதால் உழவர்க்குக் கிடைக்கும் பங்கு குறைந்து கொண்டே போனது.

இதனால் உடைமையாளருக்கு (கோவில்தான் உடைமையாளர்) அஞ்சி உழுகுடிகள் ஊரைவிட்டு ஓடியுள்ளனர். வரி அதிகமாகப் பெருகியதால் தாங்கள் வெள்ளாமை செய்து குடியிருக்கப் போவதில்லை என பன்னிருகுடி மக்கள் எச்சரிக்கையும் விட்டுள்ளனர். சாகுபடி செய்யாது கிடந்த நிலங்களுக்கும் வரி இருந்தது. அதை வசூலிக்கத் தவறிய புன்னைவாயில் எனும் ஊர் சபை தண்டிக்கப்பட்டிருந்தது.

ஊரார் சிலரே வரி நெல்லைக் குறைத்து அளப்பதற்காக' தமது ஊர் நிலத்தில் வரி விலக்குப் பெற்றிருந்த (இறையிலி) நிலங்களின் அளவைக் கூடுதலாகக் கணக்குக் காட்ட முயன்றிருக்கின்றனர். சொந்த நிலமுடையவர்கள் கூட தங்கள் வரியில்லா நிலங்கள் எனக் கணக்குக் காட்டி அனுபவித்து வந்தனர். கோவிலின் அரவணைப்பில் இருந்து எவ்வாறெல்லாம் தப்பலாம் எனத் திட்டமிட்ட குடிமக்கள் மகிழ்ச்சியுடன் வரி செலுத்தி இருக்கக் கூடுமா?

பார்ப்பனர்கள் நிறைந்துள்ள ஊர்களில் மற்ற சாதியினர் யாரும் நிலவுடைமையாளராக இருப்பின் அவர்கள் நிலங்களை விற்றுவிடச் சொல்லி ராஜராஜன் ஆணை பிறப்பித்தான். அந்நிலங்களை ராஜராஜனின் தமக்கை குந்தவை விலைக்கு வாங்கி கோவிலுக்கு சொந்தமாக்கினாள். இவ்வாறாக பார்ப்பனர் ஊர்களில் பார்ப்பனரல்லாதோரின் நில உரிமை பறிக்கப்பட்டு அவர்கள் உழுகுடிகளாகத் தாழ்த்தப்பட்டனர்.

இவ்வாறு கோவிலைச் சார்ந்து பிறப்பிக்கப்படும் நிலப்பறிப்பு, வரி விதிப்பு போன்ற ஆணைகளை யாரேனும் உழவர்கள் எதிர்த்தால் அவர்கள் சிவத்துரோகி எனப் பட்டம் கட்டி அடக்கப்பட்டனர்.

விவசாயத் தொழிலாளர்கட்கு நெல் கூலியாக அளக்கப்பட்டது. நெல் அளப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் பதவிப் பெயர் 'பருமி' இன்றளவும் அச்சொல் மக்கள் மத்தியில் கஞ்சத் தனத்திற்கு மாற்றாகச் சொல்லப் படுவதிலிருந்தே சோழர் காலத்தில் தொழிலாளர்கள் எவ்வளவெல்லாம் வயிற்றில் அடிக்கப்பட்டிருப்பர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

சேரிகள், அடிமை விபச்சாரம் ராஜராஜ சோழனின் சாதனை!

ராஜராஜன் 400க்கும் மேற்பட்ட பெண்களை வலுவில் கொணர்ந்து உடம்பில் சூடு போட்டு 'தேவரடியார்களாக' மாற்றினான். இப்பெண்கள் கோவிலின் பணியேனாடு நிரந்தர மாகப் பிணைக் கப்பட்டனர். இறைவனின் பெயரால் விபச்சாரத்தைப் புனிதமாக்கி தஞ்சையில் 'தளிச்சேரி'யை உருவாக்கினான். கோவில் அடிமைகளை கட்டாயப்படுத்தி இழுத்து வரப்பட்ட இப்பெண்கள் அரசனின் அந்தப் புரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட கொடுமைகளும் சோழப் பொற்காலத்தில் தான் நிகழ்ந்தன. கோவில் பூசகர்கள் பெருநிலவுடமையாளர்களின் காமவெறிக்குப் பலி கொடுக்கப்பட்ட 'தேவரடியார்' குலப் பெண்களின் ஆயிரம் ஆண்டுகாலக் கொடுமையை 1929 இல் சுயமரியாதை இயக்கமும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் போராடி சட்டம் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

'தமிழ்மறை மீட்டான்' என சைவக் கொழுந்துகளால் போற்றப்படும் ராஜராஜன் தமிழ் மறைகளை ஒளித்து வைத்துக் கொண்டு சமயக்குரவர் நால்வரும் வந்து கேட்டால் தான் தருவோம் என தில்லை தீட்சிதர்கள் மிரட்டியபோது பம்மிப் பதுங்கி சமயக் குரவர்களின் தங்கச் சிலைகளைச் செய்து அவர்களுக்குத் தானம் தந்து மீட்டானே ஒழிய, தளிச்சேரிப் பெண்டிர் மீது சூடு போட்ட வீரத்தை தீட்சிதரிடம் காட்டவில்லை. 'சமச்சீர் கல்வியை எதிர்த்து போராடுவோம்' என மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மிரட்டியபோது செம்மொழி கொண்டானின் அரசு அனைத்துத் தரப்பினரின் நலன்களும் காக்கப்படும் எனக் கெஞ்சியதே, ராஜராஜன் காட்டியதும் அதே வீரம்தான்.

தமிழ்நாட்டில் கிடைத்த கல் வெட்டுக்களில் தீண்டாமை பற்றிய முதல் குறிப்பே ராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் வந்துவிடுவது. வரலாற்று அறிஞர் ரொமிலா

## மாடாக உழைத்த மனிதர்கள்

-எஸ்.யாதவன்-

தந்தையர் தினமாம் இன்று
தமிழினில் கவி எழுதி- எம்
முந்தையர் பட்ட பாட்டை
சிந்தையில் மீட்டல் நன்று.

நள்ளிரவு ஆன பின்னே
நாய்களும் ஓய்ந்து உறங்கும்!
பேய்களே திரியும் என்ற
பேச்சினால் பயம் கிளம்பும்!

நித்திரை கொள்ள மறுத்து
நித்தமும் விழித்து எழுந்து
கொட்டிலில் மாட்டை அவிழ்த்து
பூட்டுவர் இரட்டைத் திருக்கல்

கலட்டித் தெருவெங்கும் கடகடக்கும்
கணீரெனும் சலங்கையொலி கலகலக்கும்
காட்டேறி கோவிலடியில் காத்து
நிற்கும் மற்ற
மாட்டு வண்டிகளுடன் சேர்ந்து
போட்டிக்கு காளைகள் நடைபோடும்

காட்டுக்குள் மின்மினியும்
கத்துகின்ற ஆந்தைகளும்
பத்தை நிழல்களும்
பாய்ந்தோடும் முயல்களும்
மனதிலே பயம் கிளப்பும்
மாடுகளும் வெருண்டோடும்.

தரிசாக மணல் கோலி
தட்டி வண்டியில் முட்டும்வரை
கொட்டி நிரப்பி கும்பியாக்க
கூதல் காற்று வீசும்
குளிரிலும் வியர்த்து ஓடி
சம்பில்துறை கடல் நீரில்
சங்கமிக்கும் வியர்வைத் துளி

வீடுக்குவர விடிந்து போகும்!
வந்த பின்பும் விழித்து
உறங்கார் களைப்பினாலே
மாட்டுக்கு தண்ணீர் வைத்து- மீண்டும்
மாடாகப் புறப்படுவர்
மணல் ஏற்ற!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாப்பர் இவன் காலத்தில் ஊருக்கு வெளியே தீட்டாச் சேரியும், பறைச்சேரியும் இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒவ்வொரு சாதிக்கும் தனித் தனிச் சுடுகாடுகள் இருந்தன.

தாழ்த்தப்பட்ட சாதி அடிமைகள் சாகுபடி நாட்களில் சகதியில் உழல்வதும் மற்ற நேரங்களில் கல்லுடைப்பதும், பல்லக்கு சுமப்பதும் கட்டாயமானது. ராஜராஜனின் பொற்காலம் பற்றிப் பேசுபவர்கள் அவன் காலத்தில் இருந்த தீண்டாமைக் கொடுமையைப் பற்றியோ, சாதிகளால் மக்கள் பிரிந்து கிடந்ததைப் பற்றியோ பேசுவதே இல்லை.

கோவிலை மையமாகக் கொண்ட சோழர் கால அதிகார அமைப்பில் சாதிவாரிக் கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்பட்டன. பார்ப்பன வெள்ளாள நிலவுடைமை ஆதிக்கச் சாதிகள் ஒரு புறமும் விவசாயத் தொழிலாளர்கள் அடித்தட்டு உழைப்பாளர் மற்றும் உடைமை, உரிமை அற்ற சமூக அடிமைகளாக கடைச் சாதி தீண்டாப்படாதோர் மறுபுறமாக சமூகமே பிரிந்து கிடந்தது.

**பொற்காலத்தில் கொழித்த பார்ப்பனர்களும், ஆண்டைகளின் ஜனநாயகமும்!**

ராஜராஜனின் பொற்கால ஆட்சியை அனுபவித்தவர்கள் யார்? தீட்சிதப் பார்ப்பனர்கள் தனக்கு பட்டம் சூட்ட மறுத்ததால் பீகார் பகுதியில் இருந்து ஆயிரக் கணக்கான பார்ப்பனர்களை சோழநாட்டிற்கு அழைத்து வந்து ராஜராஜன் அவர்களைக் குடியேற்றினான். தமிழக மன்னர்களின் வரலாற்றில் முதன் முதலாக ராஜகுரு என்றொரு பதவியை உருவாக்கி, ஈசான சிவப் பண்டிதர் எனும் காஷ்மீரப் பார்ப்பனரை அப்பதவியில் நியமித்தான். பின்னர் பார்ப்பனரையே இப்பதவிக்கு வருவது மரபாக்கப்பட்டது. ராணுவப் படையெடுப்பு போன்றவற்றை தான் கவனித்துக் கொண்டு குடிமக்கள் நிர்வாகத்தை ராஜ குருவின் ஆலோசனைக்கு விட்டிருந்தான்.

பிரம்மதேயம் என்ற பெயரில் பார்ப்பனர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அகரங்கள், அக்கிரகாரங்கள், சதுர்வேதி மங்கலங்கள் எனப்படும் தனிக் கிராமங்கள், கோவில்கள் மடங்கள் ஆகியவை அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. 250 ஊர்கள் சோழர் காலத்தில் பார்ப்பனர்களுக்கும் தானமாக வழங்கப்பட்டன. இந்தியச்

> கோவிலை மையமாகக் கொண்ட சோழர் கால அதிகார அமைப்பில் சாதிவாரிக் கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்பட்டன. பார்ப்பன வெள்ளாள நிலவுடைமை ஆதிக்கச் சாதிகள் ஒரு புறமும் விவசாயத் தொழிலாளர்கள் அடித்தட்டு உழைப்பாளர் மற்றும் உடைமை, உரிமை அற்ற சமூக அடிமைகளாக கடைச் சாதி தீண்டாப் படாதோர் மறுபுறமாக சமூகமே பிரிந்து கிடந்தது.

சட்டங்கள் எவையும் செல்லுபடியாகாத இன்றைய சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் போன்றே குற்றவிசாரணைக் காகக் கூட அரசப்படையினர் இத்தகைய மங்கலங்களின் உள்ளே நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது.

குடவோலை முறை எனும் ஜனநாயகமுறை சோழர் காலத்தில் இருந்ததாகக் கூறப்படுவது ஒரு மாயைதான். வாரியங்களைத் தேர்ந்தெடுக்க ஓலைகளில் வேட்பாளர்கள் பெயர்கள் எழுதப்பட்டு ஒரு குடத்துக்குள் அவ்வோலைகள் போடப்படும். பின்னர் குழந்தையின் கையை விட்டு எடுக்கப்படும் ஓலையில் வரும் பெயருக்குரியவர் சபைக்குத் தேர்வு செய்யப்படுவார். இந்த திருவுளச்சீட்டு ஜனநாயகத்தில் வேட்பாளராக நிற்பதற்கு வேதம் கற்றிருக்க வேண்டும். நில உடைமையாளராக இருக்க வேண்டும் என்ற இரு தகுதிகள் வைக்கப்பட்டிருந்தன.

வேதக் கல்வி பார்ப்பனர்களுக்கு மட்டுமேயான உரிமையாக இருந்ததால், பார்ப்பன நிலவுடைமையாளர்கள் மட்டுமே வாரியங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். இதுதான் குடவோலை முறையின் யோக்கியதை. அதுமட்டுமல்ல நிலவுடைமையாளர்களான பிராமணர்கள் மட்டுமே பெருவாரியாக கோவிலின் நிதி நிர்வாகிகளாக (பண்டாரி) இருக்க முடியும் என்று ராஜராஜன் ஆணை பிறப்பித்தான்.

பார்ப்பனர்களுக்கு தன் எடைக்கு எடை (துலாபாரம்) தங்கமும், தானியமும் பலமுறை தானமாகத் தந்தவன் ராஜராஜன்.

அதுமட்டுமல்ல, அவனும் அவனது தமக்கை குந்தவையும் தமது பிறவி இழிவு நீங்கி சொர்க்கம் செல்வதற்காக, தங்கத்தால் பசுமாடு ஒன்றைச் செய்து, அதன் வயிற்றுக்குள் சென்று வந்த பின்னர், அந்த தங்கப் பசுவை பார்ப்பனர்க்கு தானமாகத் தந்துவிடும் ஹிரண்யகர்ப்ப தானம் செய்தனர்.

மண்ணும் பொன்னும் தந்து பார்ப்பனர்களை மகிழ்வித்த ராஜராஜன் தனது அரசாட்சியிலும் பார்ப்பன நீதி முறைகளையே பின்பற்றினான். தனது அண்ணன் ஆதித்த கரிகாலனைக் கொலை செய்த பார்ப்பனர்களைக்கூட அவன் தண்டிக்கவில்லை. சோழ எல்லை தாண்டி சேர நாட்டிற்கு நாடுகடத்தினான். "கொலைக்குற்றம் செய்தாலும் பார்ப்பனர்களுக்கு மரணதண்டனை தரக்கூடாது" என்ற மனுதரும விதியைத் தனக்கே பிரயோகித்துக் கொண்ட மன்னன், மக்கள் மீது அவ்விதியை எங்ஙனம் நிலை நாட்டியிருப்பான் என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம்.

சோழநாட்டின் ஊர்களில் நிலம், ஊருக்குப் பொதுவாயினும், அவை கோவிலுக்குச் சொந்தமாக்கப்பட்டு, அதில் வேளாளரின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. விளைநெல்லில் பெரும்பங்கு குத்தகை உரிமையாகவும், (காராட்சி) கோவிலுக்காக மேற்பார்வை ஊதியமாகவும் (மீயாட்சி) வேளாளருக்கு மட்டுமே கிடைத்தது.

வேளாளர் தம் மேற்பார்வையில் இருந்த நிலங்களில் 'காராட்சி' மீயாட்சிப் பங்குகளை முன்னிலும் அதிகமாக வசூலித்தபோது பயிரிட்ட குடிமக்கள் கிளர்ச்சி செய்துள்ளனர். இந்த வேளாளர் பங்குகளுக்கு மன்னன் உச்சவரம்பு நிர்ணயிக்காததால் உழுகுடிகளையும் விவசாயக் கூலிகளையும் வேளாளச் சாதியினர் வரைமுறையின்றிச் சுரண்டிக் கொழுத்தனர். ராஜராஜனின் காலம் மட்டுமன்றி, சோழர் காலம் முழுவதுமே வேளாளர் பார்ப்பனக் கூட்டணிக்கு பெருவாழ்வைத் தந்த பொற்காலமாக இருந்தது.

**களப்பிரர் காலம், உழைக்கும் மக்களின் பொற்காலம்!**

ராஜராஜனது பொற்காலத்தை வியந்தோதும் சதாசிவ பண்டாரத்தாரில் இருந்து கருணாநிதி வரை தமிழக வரலாற்றில் இருண்டகாலமாக களப்பிரர் காலமிருந்ததெனக் குறிப்பிடத் தவறுவதே இல்லை. அந்த இருண்டகாலத்தை புரிந்து கொண்டால் தான் சோழர் பொற்காலத்தின் மகிமையை விளங்கிக் கொள்ள இயலும்.

களப்பிரர்களின் ஆட்சிக் காலத்துக்கு (கி.பி. 4முதல் 6ஆம் நூற்றாண்டு வரை) முந்தைய சங்கக் காலத்தில் (கி. பி. 3ம் நூற்றாண்டு வரை) விவசாய உற்பத்தி வளர்ச்சி பெற்று முற்காலப்பாண்டியர்களின் அரசு உருவாகி வந்தது. நிலவுடைமை என்பது பொது வில் இருந்த வேளிர்களின் காலம் அது. பாண்டிய ஆட்சியின்போது விவசாயமயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டு விளிம்புகளிலிருந்த இனக்குழு சமூகம் விவசாய விரிவாக்கத்துக்குள் கொண்டுவரப்பட்டு அவர்களின் உடமை உறிஞ்சப்பட்டது. அவர்களின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. பார்ப்பனர்களுக்குத் தானமாக்கப்பட்டன. அரசனுக்காக வரியாக இனக்குழுக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டது. இதனை எதிர்த்து கிளர்ந்தெழுந்த இனக்குழு சமூகங்களின் எழுச்சி தமிழகமெங்கும் 300 ஆண்டுகள் தொடர்ந்து களப்பிரர் ஆட்சிக்காலமாகக் குறிப்பிடப்படும் காலம் இதுதான்.

இக்காலத்தில் நிலங்கள் மீண்டும் பொதுவாக்கப்பட்டன. பார்ப்பனர்களுக்குத் தானமாகத் தரப்பட்ட நிலங்கள் பறிக்கப்பட்டன. இந்த இருண்ட காலத்தில் தான் தமிழிலக்கிய வளர்ச்சி உச்சத்தில் இருந்தது. மணிமேகலை, சீவகசிந்தாமணி, எலி விருத்தம், கிளி விருத்தம், களவழி நாற்பது, இனியவை நாற்பது போன்ற இலக்கிய நூல்களும் விருத்தம் தாழிசை போன்ற பாவகைகளும், உரை நூல்களும் உருவாக்கப்பட்டன. தமிழுக்கு வச்சிரநந்தி தலைமையில் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெற்றது. வைதீகத்தை வீறுகொண்டு எதிர்த்து பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பிரகடனம் செய்த திருக்குறளும் களப்பிரர் காலத்தில் தான் இயற்றப்பட்டது. தமிழகமெங்கும் பௌத்தமும் சமணமும் தழைத்தோங்கியிருந்த காலமும் இதுதான்.

இந்த 'இருண்டகால' த்தைத்தான் பல்லவர்களும் பாண்டியர்களும் வீழ்த்தினர். இனக்குழுக்களின் பொது நிலத்தை மீண்டும் பறித்து, பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கினர். நிலத்தின் மீது நிலவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவுடைமையை நீக்கியதனாலேயே பொது நீக்கி என்று இம்மன்னர்கள் புகழப்பட்டனர்.

இன்று மண்ணின் மைந்தர்களாக இருளர்கள் வீடுகட்ட நிலம் கேட்டால் முடியாது எனப் பதில் சொல்லும் அதே 'சோழரின்' ஆட்சி, ஆயிரக்கணக்கான ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலங்களைப் 'பொதுநீக்கி' ஹுண்டாய், நோக்கியா போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு வாரிவழங்கிக் கொண்டிருக்கிறது. அதே போன்ற பொது நீக்கிய அரசைத்தான் பல்லவர்களும் பாண்டியர்களும் நிறுவினார்கள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சதுர்வேதி மங்கலங்களாக்கப்பட்ட பொது நிலங்கள் மிகப்பெரும் அளவில் பார்ப்பனர்களுக்கு தானமாகவும் வேளாளர்களுக்கு தனி உடைமையாகவும் ஆக்கப்பட்டது. மாமன்னன் ராஜராஜனின் ஆட்சியின் தான் பழங்குடி மக்களை அடித்து விரட்டிவிட்டு மலைகளையும் காடுகளையும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கின்றன இன்றைய 'புரிந்துணர்வு' ஒப்பந்தங்கள்.

ராஜராஜனின் காலத்திலும் அவன் வாரிசுகளின் காலத்திலும் தேவதானம், பள்ளிச் சந்தம் இறையிலி எனும் பெயரில் செப்பேடுகளில் பதியப்பட்டன. செழிப்பான காவிரிப் பாசன நிலங்களின் மீது வேளாளர், பார்ப்பனக் கூட்டணியின் பிடி இறுகியது. ஏனைய சாதிகள் உழைக்கும் கூலிகளாக மாற்றப்பட்டனர். வானுயர நிற்கும் பெருவுடையார் கோவிலின் அடித்தளத்தில், பொற்காலப் புரட்டில் புதைந்திருக்கும் உண்மை இதுதான்.

வடக்கே மகதப் பேரரசின் அசோகனின் ஆட்சிக் காலத்தில் பார்ப்பன வேள்விகள் ஒட்டுமொத்தமாகத் தடை செய்யப்பட்டன. தெற்கே களப்பிரர் ஆட்சிக் காலத்திலோ பார்ப்பனர்களுக்குத் தரப்பட்டிருந்த தேவதானங்கள் பறிக்கப்பட்டு நிலங்கள் பொதுவாக்கப் பட்டன.

பௌத்த மன்னர் பிருகத்ரதனின் ஆட்சியை வீழ்த்த கிளர்ச்சி செய்து, வட இந்தியாவில் பார்ப்பன மீட்சியை உருவாக்கியவன், பார்ப்பனத் தளபதி புஷ்யமித்திர சுங்கன். அதேபோல தமிழகத்தில் களப்பிரரை வீழ்த்தி பொது நீக்கி, பவுத்தத்தையும் சமணத்தையும் ஒழித்து சைவத்தை நிலைநாட்டி பார்ப்பனியத்துக்குப் புத்துயிர் கொடுத்தவர்கள்தான் பல்லவ, பாண்டியர்கள். இந்தப் பார்ப்பன மீட்சியின் உச்சத்தைத் தொட்டவன் ராஜராஜன்.

தமிழின் மாபெரும் படைப்புகள், புதிதாகப் படைக்கப்பட்ட பாவினங்கள், விருத்தங்கள், அறநூலின் உச்சமான திருக்குறள் என களப்பிரர் கால இலக்கியங்கள் எண்ணற்றவை. சோழர் காலத்தில் உருவான இலக்கியங்கள் யாவை?

**சோழர் காலம் பொற்காலமா, பார்ப்பனிய மீட்சிக் காலமா?**

இன்று கருணாநிதிக்கு சூட்டப்படும் சமத்துவப் பெரியார், வாழும் வள்ளுவர் போன்ற எண்ணற்ற அடைமொழிகளைப் போலவே சோழர்களும் அடைமொழி சூடினார்கள். இன்று கருணாநிதியின் துதிபாடுவதற்காகவே நடத்தப்படும் சொற்பொழிவுகளைப் போலவே, அன்றைய 'மெய்க்கீர்த்தி'களும், 'உலா' பரணிகளும்தான் சோழர்களைச் சொறிந்தன. வருணாசிரமத்தை கடுமையாக எதிர்த்த திருக்குறளின் பொருளைத் திரிப்பதற்கு சோழர்கள் காலத்தில் பல உரையாசிரியர்கள் தோன்றினார்கள். வேதங்களையும், வேள்விகளையும் கண்டித்து, பிறப்பினால் அல்ல, ஒழுக்கத்தினாலேயே மனிதனுக்கு உயர்வு வரும் என்று கற்பித்த வள்ளுவரின் குறளையே திரித்துப் பரிமேலழகர் எனும் பார்ப்பனர் நால் வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட ஒழுக்கங்களில் வழுவாது நிற்க' என்று சோழர்காலத்தில் தான் உரை எழுதினார்.

சோழர் காலத்துக்கு முந்திய நிலைமையை தெரிந்துகொள்வோம். (சோழர் காலத்) கலிங்கத்துப் பரணியின் 'மறையவர் வேள்வி குன்றி, மனுநெறி குன்றி, குலைந்து, சாதிகள் கலப்புற்றதாகப் பாடியுள்ளார். இவற்றை எல்லாம் மீண்டும் தலைகீழாக மாற்றி மனுநெறியை நிலைநாட்டியதுதான் சோழர்களின் 'சாதனை'.

சோழ மன்னர்கள் சிங்களம், மலைநாடு, கங்கம், மாலத்தீவெல்லாம் படையெடுத்துச் சென்று தலை அறுத்துக் கொண்டிருந்தார்கள். தலையறுத்துக் கொள்ளையடித்த பொன்னையும் பொருளையும் கொண்டு, கோவில் கட்டுவதற்காக மக்களைக் கல்லுடைக்கப் பணித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்சூத்திரர்களின் 'ஊர்களும்' பார்ப்பனர்களின் பிரம்மதேயங்களும் பார்ப்பன ராஜகுருவின் ஆலோசனைகளும் ஆணைக்கும் கட்டுப்பட்டே இருந்தன. உழுகுடிகளை ஒட்டச் சுரண்ட பெரியகோவிலும் வட்டாரக் கோவில்களும் இருந்தன.

இதனைப் பொற்காலம் என்று கொண்டாடும் தமிழினவாதிகள் சாது தமிழ்ப் பெருமிதத்திலுள்ள வெள்ளாளப் பார்ப்பனக் கூட்டு ஆதிக்கத்தையும் தீண்டாச் சேரியையும் கூச்சமின்றி மறைத்துக் கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் யாரும் சிந்தித்து விடாதிருக்க, கங்கை கொண்டான், 'கடாரம் கொண்டான்' என்று மாற்றான் தோட்டத்தில் தாவி அறுத்து வந்து தமிழ்நாட்டில் கோபுரம் கட்டியிருப்பதை அண்ணாந்து பார்க்கச் சொல்கிறார்கள். நாம் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே நம் காலடி மண்ணை 'இறையிலி' ஆக்கி ஏகாதிபத்தியங்களின் 'மங்கலங்களாக' மாற்றிக் கொண்டிருக்கிறது கருணாநிதி அரசு.

வைதீக மதத்தை எதிர்த்து நின்ற புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததன் 2550 ஆம் ஆண்டை பத்தோடு பதினொன்றாக அனுசரித்த திமுக அரசு, பார்ப்பனதாசனான ராஜராஜனை மட்டும் கோலாகலமாகக் கொண்டாடக் காரணம் கருணாநிதி தன்னை ராஜராஜனுடன் இனம் காண்கிறார் என்பதுதான்.

சனாதன தர்மம் என்று சொன்னாலே காறித் துப்பிய காலம் ஒன்று இருந்தது. அதுதான் சுயமரியாதை இயக்கக் காலம். அந்தக் காலத்தை 'களப்பிரர் காலத்தோடு' ஒப்பிடலாம் என்றால், அந்நிலை முளை மழுங்கவைக்க குல்லுகப்பட்டருடன் கூட்டு சேர்ந்த காஞ்சித்தலைவன் அண்ணா தான், பார்ப்பன மீட்சிக்கு அடிக்கொள்ளி வைத்த நரசிம்ம பல்லவன். மவுண்ட்ரோடு மகாவிஷ்ணுவிடமும் தினமலரிடமும் நல்ல பெயரெடுக்கத் துடிக்கும் 'திருவாரூர் சோழன்' தான், பார்ப்பனர்களுக்கு பொற்கால ஆட்சி தந்த ராஜராஜன்.

விந்தியம் கடந்து வந்த பார்ப்பனர்களுக்கு உள்ளூரின் விளை நிலங்கள் எல்லாம் 'வரி நீக்கி' அவன் வழங்கியதைத்தானே, தேசம் கடந்து வரும் கம்பெனிகளுக்கு 'வரி நீக்கி' வழங்குகிறார் கருணாநிதி.

கோவிலின் ஆணைகளை எதிர்த்தவர்களுக்கு 'சிவத்துரோகி' பட்டம் என்றால் உலகவங்கி ஆணைகளை நிறைவேற்றும் அரசை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு இன்றோ 'தேசத்துரோக' வழக்கு.

பிற பார்ப்பனர்களை தமிழ் நாட்டுக்கு வரவழைத்து வாழவைத்த ராஜராஜனின் வரலாறும், பார்ப்பனிய பாதுகையைத் தலைநகரத்திற்கு இழுத்து வந்து வாழவைத்த கலைஞரின் வரலாறும் வேறுவேறா என்ன? அன்று ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்ட தீண்டாச் சேரியை போலத்தானே, இன்று எழில்மிகு சென்னைக்கு வெளியே துரத்தப்படும் உழைக்கும் மக்களுக்காக இக்காலச் சோழன் ஒதுக்கும் செம்மஞ்சேரி?

இன்று ராஜராஜனை 'மாமன்னன்' என்றும் அவனது ஆட்சி 'தமிழனின் பொற்காலம்' என்றும் புகழ்பவர்கள் 'அக்காலத்தில் ஒரு மன்னன் அப்படித்தான் இருந்திருக்க முடியும்" என்று நியாயப் படுத்துகின்றனர். வரலாற்றில் கீதையும் இருந்தது. அதே காலத்தில் அதனை எதிர்த்து நின்ற பவுத்தமும் இருந்தது. அசோகன் இருந்தான். பவுத்தத்தை வீழ்த்திய புஷ்யமித்திர சுங்கனும் இருந்தான். பார்ப்பனர்க்கு தனிச் சலுகை நீக்கி நிலங்களைப் பொதுவாக்கிய களப்பிரர் இருந்தனர். பொதுவை நீக்கி பார்ப்பனதாசனாக வாழ்ந்த ராஜராஜனும் இருந்தான்.

கீதையா, பவுத்தமா? அசோகனா, சுங்கபுஷ்யனா? களப்பிரரா, ராஜராஜனா? நாம் எந்தப் பக்கம் என்பதுதான் கேள்வி.

**ஆதாரங்கள்:**

1.சதாசிவ பண்டாரத்தார்

2.கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி

3.மயிலை சீனி. வேங்கடசாமி

4.குடவாயில் பாலசுப்பிரமணியம்

5.நா. வானமாமலை, பொ. வேல்சாமி,
அ. மார்க்ஸ், ஆ. சிவசுப்பிரமணியன்
தொ. பரமசிவன் ஆகியோரது நூல்கள்
மற்றும் கட்டுரைகள்.


நன்றி இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தானின் நினைவுகள்

-தானிலையன்-



யுத்தம் நடந்து ஓராண்டுக்குப் பின்னர் அகதி முகாமிலிருந்து அப்பொழுதுதான் வசந்தன் வீடு திரும்புகிறான். வசந்தன் என்ற பெயர் ஓர் இளைஞனின் தோற்றப்பாட்டைத்தான் நினைவூட்டும். ஆனால் ஐம்பதைத் தாண்டி முதுமையை நோக்கிப் பயணிக்கும் அவனது முழுப் பெயர் வசந்தராசா என்பதுதான். யுத்தச்சூழலால் அள்ளுப்பட்டு அலைக் கழிக்கப்பட்டு பாடுகள் சுமந்த பெரும் எண்ணிக்கையான மக்களில் அவனும் ஒருவன். அன்பான மனைவி பிள்ளைகள் அனைவருடனும் நால்வராக வன்னியில் வாழ்ந்த அந்தக் குடும்பத்தில் அவன் மட்டுமே தனிமரமாக எஞ்சி இருக்கிறான். இரு மகன்களில் மூத்தமகன் யுத்தத்தில் இறந்துபோனான். இளையவன் அனைத்து தடுப்பு முகாம்களிலும் தேடி அலைந்தும் இல்லாததால் நிரந்தரமாகவே காணாமல் போனவர்களின் பட்டியலில் ஒருவனானான். யுத்தத்தின் போது வீசப்பட்ட ஷெல்லால் அவனது மனைவி அவன் கண் முன்னால் உடல் சிதறி துடிதுடித்துப் பலியானாள். அந்த ஷெல்லின் துண்டுகளால் அவனது இடது கால் பாதிக்கப்பட்டு நொண்டியான கால்களுடன்தான் வசந்தன் பழைய உறவுகளைத் தேடி அவன் பிறந்து வளர்ந்த தனது கிராமத்துக்கு வருகிறான்.

பிரதான வீதியில் பஸ்ஸில் வந்து இறங்கிய அவன் பயணப் பையை தோளில் மாட்டியபடி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பிரதான தெருவை நிதானமாகக் கடக்கிறான். கிராமத்துக்குச் செல்லும் கிழக்கு வீதியின் முகப்பில் நின்று தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது நிற்கிறார்களா என அவதானித்துவிட்டு காலைத் தாண்டியபடி நடக்க முனைகிறான். பழகிய முகங்கள் எதுவுமில்லை. அவனைப் பார்த்துக்கொண்டு சயிக்கிளில் சென்ற நரைத்ததலையும் தாடியுடனும் கூடிய மனிதன் அவனது இளமைக்கால நண்பன் முத்து தான் என்பது அவனைக் கடந்து சென்ற பின்னர்தான் அவனுக்கு நினைவில் வருகிறது. சந்தியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோக்களின் இளம் சாரதிகள் அவனை ஒரு ஓட்டத்துக்கான நபராக எண்ணி உசாரடைகின்றனர். எனினும் அவர்களைக் கவனிக்காமல் பல ஆண்டுகள் பிரிந்திருந்த அந்த கிராமத்தின் நீண்ட தெருவில் நடக்கும் உற்சாகம் அவனது முகத்திலும் நடையிலும் வெளிப்பட்டதைக் கண்டு அவனைப் பார்த்தபடி நிற்கின்றனர். கைத்தொலை பேசியின் அழைப்பொலி ஓய்வடைய சந்தியில் நின்ற ஓட்டோக்களில் ஒன்று புறப்பட்டு காலைத் தாண்டியபடி சிறுது தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து சென்று கொண்டிருந்த அவனருகே சென்று நின்றது.

'அண்ணை ஏறுங்கோ.. கனகமக்கா உங்களை ஏத்தியரச் சொல்லி போன் பண்ணினவ'

'அக்கா.. சொல்லி விட்டவவா.. சரி.. நடக்கிறது எனக்கு பெரிய பிரச்சினையில்லைத் தம்பி'

பாதிப்படைந்த கால்களை மெதுவாக ஓட்டோவில் தூக்கிவைத்தும் கொண்டே கூறுகிறான் வசந்தன். ஓட்டோவில் அமர்ந்து பசுமையான அந்த வயல் வெளிகளையும், தெருவால் போவோர் வருவோரது முகங்களையும் உற்று நோக்கியபடி அவன் இருந்தான்.

'அண்ணை.. என்னியாலை வாறியளோ?

வசந்தனைத் திரும்பிப் பார்த்து அந்த ஓட்டோக்கார இளைஞன் கேட்டான்.

'ஓம் தம்பி.. முகம் தெரிஞ்ச முகமா இருக்கு.. ஆற்றை மகன் தம்பி நீர்'

'செல்வராசாவின்ரை மகன்'

'டே.. எங்கட செல்வாவின்ரை மகனே.. சின்னனிலை கண்டது. எப்பிடி.. அப்பா சுகமா இருக்கிறாரே'

'ஓ.. உங்களைப்பற்றி அப்பா இடைகிடை கதைக்கிறவர்'

'அந்த நாளிலை கொஞ்சக் கூத்தே நாங்கள் ஆடின நாங்கள்.. டே.. எங்கடை வாசிகசாலை, உவ்வளவு செல்லடிக்கும் தப்பிக் கிடக்கு'

அந்த வாசிகசாலையின் அழகிய தோற்றத்தை ஓட்டோவுக்கு வெளியே கழுத்தை நீட்டி பார்த்துவிட்டு அமர்ந்த வசந்தன் வீடு செல்லும் வரை அமைதியானான்.

அவனது இளமைக்காலத்ததில் ஓலைக்கொட்டிலாக அந்த வாசிகசாலை உருவான காலத்திலிருந்தே அதன் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான். அதனை மையமாக வைத்து அந்தக் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பெற்ற அனுபவங்கள் எவ்வளவு பெறுமதியானவை. அவற்றைக் கணக்கில் எடுக்கத் தவறியமையும் தான் தாங்கள் பட்ட இன்னல்களுக்கு காரணம் என எண்ணிய போது அவனது கண்களில் நீர் பனித்தது. அவன் இழந்து திரும்பிய உறவுகளின் நினைவுகள் மீண்டும் எழ அவனது நெஞ்சு கனத்தது. கேற்றடியில் காத்திருந்த சகோதரியைக் கண்டதும் விம்மிப் பொருமி இருவரும் வாய்விட்டு உரத்து அழுகின்றனர். அழுகுரல் கேட்டு அங்கு ஓடி வந்த அயலவர்களும் கண்கலங்கி நிற்கின்றனர். கிராமத்தின் பழைய நண்பர்கள், உறவினர், அயலவர் யாவரும் அவனது வருகையை கேள்வியுற்று இரவுவரை வந்து அவனுக்கு ஆறுதல் கூறிச் செல்கின்றனர்.

அன்றிரவு அவனுக்கு உறக்கம் வரவில்லை. இன்று அவனும் அவனைப் போன்றவர்களும் எதிர்கொண்ட பேரழிவுகளின் பெருந்துயரங்களின் அனுபவங்களிலிருந்து எதிர் காலத்துக்கான ஒரு சிறிய வெளிச்சத்தையாவது இந்தச் சமூகம் பெறமுனையாதா என்ற ஏக்கம் மட்டுமே தனது வாழ்வில் எஞ்சி இருப்பதை அவன் உணர்ந்தான். தனது மாணவப் பருவத்திலிருந்தே அந்தக் கிராமத்து இளைஞர்களுடன் கூடிப் பொதுப் பணிகளில் ஈடுபட்டும், எதிர்காலக் கனவுகள் பலவற்றை இலட்சியமாக மனங்களில் சுமந்து கொண்டு அலைகளுக்காவே வாழ முற்பட்ட அந்தக்காலம் அவனது நினைவில் விரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கிராமத்தில் ஒருநாள், ஒரு மாலை மங்கும் நேரம். அடிவானத்தில் முகில் கூட்டங்களில் பட்டுத் தெறித்து ஒருசில ஒளிக் கீற்றுக்களும் மெல்ல மறைய அந்தக் கிராமத்தை இருள் கௌவிக் கொண்டிருந்தது. தென்னோலையால் வேயப்பட்டு பாரதி சனசமூக நிலையம் என தகரத்தில் பெயர் பொறிக்கப்பட்ட அந்தக் கிராமத்து வாசிகசாலையின் மேலையில் வைத்து பெற்றோல்மாக்ஸ் விளக்கை வசந்தனும், ஞானசீலனும் சேர்ந்து ஏற்றுகின்றனர். கொழுந்து விட்டு எண்ணெயில் பற்றி எரிந்து அந்த விளக்கு காற்றை அடித்ததும் அடங்கி ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. வழமையாக இரவு வேளைகளில் வாசிகசாலை மின்சாரவசதி இல்லாததால் பூட்டப்பட்டே இருக்கும். இதுபோன்ற பொதுச்சபை, நிர்வாகசபைக் கூட்டங்கள் போன்ற பொதுநிகழ்வுகள் நடைபெறும் போதுதான் அங்கு விளக்கெரியும்.

அன்று அக்கிராமத்தின் வழமைக்கு மாறாக நடந்த ஒரு சம்பவத்தால் அக்கிராம மக்களிடம் எழுந்த சர்ச்சைக்கு முடிவு கட்டுவதற்காக விசேட பொதுக் கூட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது. அதனால் பொதுச்சபை உறுப்பினர்கள் மட்டுமல்ல அதற்கான தீர்வை அறிய விரும்பிய பொதுமக்களும் என்றுமே இல்லாதவாறு அந்தக் வாசிகசாலையைச் சுற்றிதிரளத் தொடங்கி இருந்தனர். வாசிகசாலையின் உள்ளேயும் வெளியேயும் மட்டுமல்ல முன்னால் செல்லும் வீதியின் இரு மருங்கிலுமுள்ள தெருப்படலைகளுக்கு முன்னாலும் மக்கள் கூடிநின்று தங்களது அபிப்பிராயங்களை பகிர்ந்து கொண்டனர். பலர் அடக்கமாகவும் சிலர் ஆவேசத்துடனும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தனர்.

'ஞானம் வெளியிலை இருந்து வந்தவன் அவனுக்கு ஊர் வழப்பம் தெரியாது'

'அதுதானே இத்தனை நாங்கள் அவங்களை எவ்வளவு கட்டுப்பாடா வைச்சிருக்கிறம் முத்தையர் எவ்வளவு அனுபவம் உள்ள மனிசன் இன்னைக்கும் கலங்காமல் சாப்பிடுற சைவப் பாரம்பரியம் உள்ளவர்.. அந்தாள் செய்தது சரிதான்'

'உதெல்லைன்னை கதைக்கிறியள் வாசிகசாலை பொது இடம்தானே' பொது இடத்திலை இருந்து படிச்சு விட்டால் என்ன?

'மூக்கு நீ பேச்சுவது கதையாதை.. பின்னுக்கு வாறதையும் யோசிக்க வேணும் உதிலை விட்டா பள்ளிக்கூடத்திலை தண்ணி அள்ளக் கேப்பாங்கள் குளத்திலை குளிக்கப்போறம் என்று கேப்பாங்கள் கோயிலுக்குக்கை போகக் கேப்பாங்கள் எல்லாத்துக்கும் விட்டிட்டு இருப்போமன்'

அவர்களது உரையாடல்கள் தத்தமது அனுபவ எல்லைகளைச் சுற்றி எங்கெங்கோ போய்வந்தன. அவை யாவும் அந்த வாசிக சாலையில் அனைத்துச் சாதியினரும் சமத்துவமாக அமர்ந்து பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிக்க முடியுமா இல்லையா என்பதைப் பற்றிய முடிவை நோக்கியதாகவே இருந்தது. அந்த முடிவை எடுப்பதற்காகவே அன்று அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது.

யாழ் நகரிலிருந்து ஐந்து மைல் தொலைவில்த்தான் அந்தக் கிராமம் அமைந்திருந்தது. எனினும் பிரதான வீதியிலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு மேல் உட்புறமாகத் தள்ளி இருந்தமையால் அதன் கிராமிய இயல்புகள் பெருமளவு மாற்றமடையாமல் இன்னும் அப்படியே இருந்தன. செழுமையான பரந்த வயல் வெளிகள், தாமரைகள் பூத்துக் குலுங்கும் பல குளங்கள், உயர்ந்து வளர்ந்திருக்கும் பனை, தென்னை. மா, பலா போன்ற பயன்தரு மரங்கள், கிராமத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கெல்லையாக கோடையில் தேங்கியும், மாரியில் மழை நீரால் நிறைந்தும் ஓடும் உப்பாறு, அதனருகே நீண்டு பரந்திருக்கும் தரவைப் புல்வெளி. இவ்வாறு இயற்கை அழகுடன் பசுமை நிறைந்து காட்சியளிக்கும் அந்தக் கிராமம், மண்பற்று, ஊர்ப்பற்றி லிருந்து விடுபட்டுப் பார்த்தாலும் கூட அழகான கிராமந்தான்.

அக்கிராமத்து மக்களில் ஒரு சிலர் நகரை நோக்கி உத்தியோகம் தொழில் என்று சென்று வந்தனர். பெரும்பாலான மக்கள் தோட்டங்கள் வயல்கள் கைத்தொழில்கள் என கிராமத்துக் குள்ளேயே தமது வாழ்க்கை வருமானங் களுக்கான வழிகளை தேடிக்கொண்டனர். அதுமட்டுமல்ல பண்பாட்டின் காவலராக விளங்கிய நாவலரே வந்து கல்வி கற்றுச் செல்லும் அளவிற்கு அறிவுப் புலமை மிக்கவர்கள் வாழ்ந்து வருவதுமான சிறப்பைக் கொண்ட கிராமமாகவும் அது இருந்தது. அவர்கள் அன்று பழமையின் காவலர்களாக இருந்தாலும் அக்கிராமத்தின் புதிய தலைமுறையினரான இளைஞர்கள் தமது காலத்திற்கு ஏற்ப தமது பங்கிற்கு புதுமைக் கவிஞன் பாரதியின் பெயரால் ஒரு வாசிகசாலையை அமைத்திருந்தனர். அதில் ஆண்டு தோறும் நடைபெறும் பாரதி விழாக்களில் பலதரப்பட்ட அறிஞர்களையும் அழைத்து புதிய கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிப்பதில் முனைப்பாக இருந்தனர். சிறிது சிறிதாக வளர்ந்த அக்கருத்துப் பரம்பலின் வளர்ச்சி நடைமுறையாக மாற்றமுறும் போதே இன்று சாதியப் பாகுபாடு ஒரு பிரச்சனையாக எழுந்து தீர்வுக்காக மக்கள் முன் வந்து நிற்கிறது.

வசந்தனின் பக்கத்து வீட்டு நண்பனான ஞானம் எல்லோரும் சமத்துவமாக இருந்து படிக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தான். அவனது குடும்பம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்புதான் நகர்ப்புறத்தில் இருந்து வந்து அந்த ஊரில் குடியேறி இருந்தது. தந்தையார் கூலித்தொழில் செய்து வந்தார். நகரிலுள்ள பாடசாலையில் மாணவனாக இருந்த ஞானசீலன் தற்பொழுது வேலைதேடும் ஒரு இளைஞனாக இருந்தான். இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட அவனது குடும்ப நிலையும், வாழ்வின் மாறுபட்ட சூழல்களில் பெற்ற அனுபவங்களும் அவனிடம் சமூகம் பற்றிய அக்கறையை இளவயதிலேயே ஏற்படுத்தி இருந்தது.

ஐம்பத்தெட்டின் இனக் கலவரத் திற்குப் பின்னர் அதனால் பாதிக்கப்பட்ட வர்களில் பலர் தனித்தமிழ் நாட்டுக்கான தீவிர உணர்வை மனதில் ஆழப் பதித்துக் கொண்டனர். அவர்களில் ஒருவனாக ஞானமும் இருந்தான். அதனைக் கருவாக வைத்து கவிதைகள் நாடகங்கள் எழுதுவதில் அவன் முனைப்பாக இருந்தான். அவன் எழுதிய 'இலட்சியக் கனவு' எனும் நாடகம் மேடையேற்ற அனுமதி மறுக்கப் பட்டதால் பலரது வாசிப்புக்கான ஒன்றாகவே இருந்தது. வசந்தனும் அதை வாசித்திருந்தான். அந்த நாடகம் வசந்தனைப் போன்று பல இளைஞர்களின் மனதில் அன்றே பாதிப்பைச் செலுத்தி யிருந்தது. அத்தகைய உணர்வை விரிவுபடுத்தும் நோக்குடனேயே அந்தக் கிராமத்து இளைஞர்களோடு இணைந்து சமூகநாடகங்களை மேடை ஏற்றுதல், மாலைநேர விளையாட்டுக்களில் கிராமத்து இளைஞர்களை ஒன்றிணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஞானம் ஈடுபட்டிருந்தான். அதன் தொடர் வளர்ச்சியாகவே பாரதியின் பெயரில் அக்கிராமத்தில் அந்த வாசிகசாலை உருவானது. அதன் செயலாளராக அவனை அவர்கள் தெரிவு செய்திருந்தனர். இளைஞர்களிடம் மட்டுமல்ல அவ்வூர்ப் பெரியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரதும் அன்பையும் மதிப்பையும் கூட அவன் பெற்றிருந்தான்.

இப்படியான ஒரு சூழலில்தான் அந்தச் சம்பவம் நடந்தது. அந்த வாசிகசாலையில் ஆண்டு தோறும் நடைபெற்ற பாரதி விழாக்களும், அந்த வாசிகசாலையில் நிறைந்திருந்த புதிய புதிய பத்திரிகைகள், சஞ்சிகைகளும் பக்கத்து கிராமங்களிலிருந்தும் வாசகர்களை ஈர்த்திருந்தது. முதல்நாள் மாலை நேரம் பாடசாலை சீருடையுடன் வந்த ஒரு மாணவன் வாசிகசாலையில் அமர்ந்து சஞ்சிகை ஒன்றை படிப்பதில் மிகுந்த ஆர்வமாக அதில் மூழ்கி இருந்தான். அப்பொழுதுதான் அங்கு பத்திரிகை வாசிப்பதற்கு வந்த வாசிகசாலையின் தலைவர் முத்தையா வாங்கில் அமராமல் நின்றபடியே கிராமத்துக்குப் புதிதான அந்த மாணவனது முகத்தை சிறிது நேரம் உற்று நோக்கினார்.

'நீ வல்லிபிள்ளை பேரனெல்லே' ஆட்காட்டி விரலை அவனை நோக்கி நீட்டியபடி கேட்டார் முத்தையா.
'ஓம்'

சிறிது தயக்கத்துடன் அவனிட மிருந்து பதில் வந்தது.

'எழும்பு' வாங்கிலை இருந்து படிக்கக்கூடாது. நின்றுதான் படிக்க வேணும்'

அதிகாரத் தொனியுடன் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அந்த மாணவன் திகைப்படைந்தான். தயங்கிய படி இருக்கையை விட்டு எழுந்த அவன் தான் ஆவலுடன் படித்த அந்தச் சஞ்சிகையை மூடிவைத்துவிட்டு மெல்ல வெளியே வந்தான். அவன் எழுந்ததின் வாங்கில் அமர்ந்து பத்திரிகையை புரட்டிய முத்தையாவின் திருநீறணிந்த நெற்றியை ஒருமுறை பார்த்துவிட்டு வெளியே வந்து சயிக்கிளில் ஏறி வேகமாகச் சென்றான். இந்தச் சம்பவம் நடைபெறும்போது அந்த மாணவனின் வயதை ஒத்தவனாக அன்று இருந்த வசந்தனும் அங்கு சஞ்சிகை படித்துக் கொண்டிருந்தான். அந்தச் சம்பவம் அவனது மனதையும் மிகவும் பாதித்தது. அவனும் வெறுப்புடன் எழுந்து புத்தகத்தை மூடிவைத்து விட்டு சயிக்கிளில் ஏறி ஞானசீலனின் வீட்டை நோக்கி விரைவாகச் சென்றான். வசந்தன் தனது செயலால் வெறுப்படைந்து செல்வதை தலையைக் குனிந்து கண்ணாடிக்கு மேலாக அவதானித்த முத்தையா எவ்வித சலனமும் இன்றி தனது வாசிப்பை மீண்டும் தொடர்ந்தார்.

வீட்டு விறாந்தையில் கதிரையில் அமர்ந்தபடி ஞானம் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தான். வசந்தன் வந்து வாசிகசாலையில் நடந்த சம்பவத்தைக் கூறியதும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தவனாய் இருக்கையை விட்டு எழுந்தான். நேரடியாகச் சென்று அவரது நடத்தைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்ற உணர்வுடன் சயிக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாக வாசிகசாலையை நோக்கிச் சென்றான். வசந்தனும் அவனுடன் கூடச் சென்றான்.

'என்ன நீங்கள் வாங்கிலை இருந்து படிச்ச ஒரு மாணவனை எழுப்பிக் கலைச்சுப் போட்டியளாம்?'

சயிக்கிளை வாசிகசாலை சுவருக் கருகில் நிறுத்தியவாறாக விறாந்தையில் நின்றபடி கேட்கிறான் ஞானம்.

'ஓ.. கலைச்சனான்தான்.. இங்கை எல்லோரும் இருந்து படிக்கேலாது'

அதே அதிகாரத் தொனியுடன் பதில் சொல்கிறார் முத்தையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இது பாரதியின்ரை பேரிலை இயங்கிற வாசிகசாலை.. விழாக்களையும் நடத்திக் கொண்டு நாங்கள் இப்பிடிச் செய்யக்கூடாது'

'ஞானம்.. இந்த ஊருக்கென்று பாரம்பரியமா சில வழக்கங்கள் இருக்கு அதுகளை நாங்கள் கைவிடேலாது'

'அதை விருப்பமெண்டா வீடு களுக்கை வைச்சிருங்கோ.. பொது இடங்களிலை உதுகளைப் பாக்கேலாது.. அந்தப் பெடியன்ரை மனம் எவ்வளவு பாதிப்படைஞ்சிருக்கும்.. அப்பிடியெண்டா பொதுக்கூட்டத்தைக் கூட்டி கெதியா இதுக்கு முடிவெடுக்கவேணும்'

'ஓ.. தாராளமா கூட்டும்.. நான் பொதுச்சபையிலை என்ரை கருத்தைச் சொல்லுறன்'

அந்த வாசிகசாலையின் தலைவரான முத்தையருடன் ஞானசீலன் இப்படி முரண்பட்டுக் கதைத்துக் கொண்டது அதுவே முதல் முறையாக இருந்தது. அறுபது வயதை தாண்டியிருந்த அவரது தமிழ்ப்பற்றும் இலக்கியப் புலமையும் அவனை மிகவும் வசீகரித்திருந்தது. அவன் ஓய்வு நேரங்களில் அவருடன் உரையாடு வதாலும் புத்தகங்களை பரிமாறிப் படிப்பதாலும் தான் பயனடைவதாக அவனே உணர்ந்திருக்கிறான். அத்தகைய ஒருவர் இப்படி நடந்து கொண்டதும் அதனை எதிர்த்து தான் அவருடன் முரண்பட நேர்ந்ததும் அவனுக்கு அதிர்ச்சியைத் தந்தது. இருந்தும் தனது கோபத்தை ஞானம் நடத்தையிலும் வார்த்தையிலும் இறுக்கமாக வெளிப் படுத்தினான். முத்தையர் அதற்காக ஆத்திரமடைந்த போதும் அவரது பதிலை சாதகமாகப் பயன்படுத்தி பொதுக் கூட்டத்துக்கான சம்மதத்தை அவரிடம் அவன் பெற்றுக்கொண்டான்.

ஞானம் தான் வயதில் சிறியவனாக இருந்தாலும் அறிவியல் பூர்வமான நீதியான கருத்தின் பக்கம் நிற்பவனாக எண்ணினான். அது மட்டுமல்ல அத்தகைய கருத்துக்க ளோடு அவ்வூர் இளைஞர் களுடன் இணைந்து அவன் பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தான். அதனால் இளைஞர்களது ஆதரவின் பலம் எப்பொழுதும் அந்த நல்ல கருத்துக்கு இருக்கும் என்ற நம்பிக்கையும் அவனிடம் இருந்தது. அத்தகைய எதிர் பார்ப்புடன் தான் அவசர பொதுக்கூட்டத்தை மறுநாள் கூட்டுவதற்கான முடிவை ஞானம் எடுத்திருந்தான்.

பொதுச்சபைக் கூட்டம் தேவாரத் துடன் ஆரம்பமாகியது. வழமையாக தேவாரம் பாடும் கதிரேசண்ணர்தான் தேவாரத்தை ஆரம்பிக்கிறார். நடுத்தர வயதானவராக இருந்தாலும் ஞானம் இளைஞர்களுடன் சேர்ந்து மேடையேற்றிய நாடகங்களில் பாடல்களைப் பாடுவதில் அவனுடன் இணைந்து செயற்பட்டவர். அதனை மனதில் எண்ணியோ என்னவோ வழமைக்கு மாறாக 'சங்கநிதி பதுமநிதி' என்று ஆரம்பித்தது மட்டுமல்ல 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்ற அடியை அழுத்தி ஆலாபரணம் செய்து மிகுந்த உணர்வுடன் பாடினார். இரவின் அமைதியில் அவரது பாடல் கணீர் என்று ஒலிக்க அப்பாடல் முடியும் வரை சபையினர் அதில் லயித்து மௌனித்து நின்றனர். கதிரேசரின் இப்பாடற் தெரிவு ஞானத்தின் மனதில் நம்பிக்கையை ஊட்டியது. தலைவர் முத்தையர் கூட்டத்தை ஆரம்பித்து ஊரின் வழக்கங் களையும் தனது நிலைப் பாட்டையும் விளக்கினார். ஞானத்தின் செயற் பாடுகளைப் புகழ்ந்து அவனது கோரிக் கையின் நியாயப்பாட்டைக்கூட தொட்டுப் பேசினார். பின்பு அவர் ஊர் கட்டுப்பாட்டின் அவசியத்தை அழுத்திக் கூறினார். வெளியே இருந்து வந்ததால் தான் ஞானத்தால் அதன் அவசியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறிவிட்டு அமர்ந்தார்.

ஞானத்துக்கு ஊரில் இருந்து தன்னை அனுப்பி வைத்த முத்தையரின் பேச்சு மனதில் பெருந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அவ்வூர் இளைஞர்கள் அவனை அன்னாறு கருதாமல் இதுவரை இருந்து வந்தது போல் தனது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்கள் என்ற எண்ணம் அவனிடம் உறுதியாக இருந்தது. இளைஞர்களே வாசிக சாலையின் உறுப்பினர்களில் பெரும்பான்மையாக இருந்தமையால் வாக்களிப்புக்கு விட்டால் தனது பிரேரணை வெற்றிபெறும் என அவன் நம்பினான். எனினும் இதுபோன்ற நிறுவனங்களில் பெரியவர்கள் உட்பட அனைவரும் ஒன்றுபட்டுத் தீர்மானம் எடுப்பதே கிராமத்தின் வளர்ச்சிக்கு பயனளிக்கும் என்பதற்காக தனது பக்க நியாயத்தை எடுத்துக் கூறினான். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என முத்தையரிடம் பெற்றுப் படித்த புத்தகத்தின் வரிகளையே விளக்கி சாதிகள் இவ்வாறு பிளவுபடாமல் ஐக்கியப்பட வேண்டியதன் அவசியம் பற்றி பேசினான். சாதியத்துக்கெதிரான பாரதியின் கருத்துக்களை நினைவுறுத்தினான். முதியவரைவிட அவனது விளக்கங்கள் தெளிவாகவும் நிதானமாகவும் இருந்தன. குறுக்கீடுகள் இன்றி அனைவரும் அமைதியாக அவற்றைச் செவிமடுத்தனர்.

ஒருமனதான தீர்மானத்துக்கு சபை வரமுடியாமையால் தலைவர் வாக்கெடுப்புக்கு விடுவதாக அறிவித்தார். முதலில் பிரேரணைக்கு ஆதரவானவர்களை கைகளை உயர்த்தும்படி கேட்டுக் கொண்டார். சபை அமைதியாக எதுவித சலனமும் இன்றி விறைத்துப் போயிருந்தது. சிறிதுநேர இடைவெளியின் பின் ஒரேஒரு

## இருள் கவியும் மாலை முகம்

-கல்வயல் குமாரசாமி-

வானம் வியர்வை பூக்கும்
வெள்ளிகளாய்
உருள் பூமிப் பரப்பு எங்கும்
வடியும் நிலா
உயிர்ப்பு எய்தும்
முல்லை பூக்கும்
காகம் கரிக்குருவி
காலைக்குத் திருப்பள்ளி
எழுச்சி பாடும் - பாட
மோகமுறும் பரிதி
கீழ்வான் முற்றமுடன்
தழுவுதற்கு கதிர்க்கை
நீட்டும்
தாகமுறும் நில மடந்தை
தண் நிலவாம் குளிர்ந்த மகள்
நாணம் பூப்பாள்
சோகத்தை இசைத்த குயில்
வன்னி வனம்
ஆறைப்பாடும்
ஆதாட்டம் கண்டு கண்
கலங்கிப் போகும்

கரம் மட்டும் அக்கூட்டத்தில் இருந்து உயர்ந்தது. ஞானத்தைவிட வயதில் கூடியவராக இருந்தாலும் அவனுடன் புத்தக வாசிப்பில் அக்கறை காட்டிய மதியாபரணத்தின் கரங்கள்தான் அது. தேவாரத்தை தேர்வு செய்து மனமுருகப் பாடிய சுந்தரேசனாரும் கைகளைக் கட்டியவாறு மௌனித்து நின்றது ஞானத்துக்கு ஆச்சரியமாக இருந்தது. வசந்தன் வயதில் குறைந்த மாணவனாக இருந்தமையால் உறுப்பினராக இணைந்து வாக்களிக்கும் தகுதியை பெறவில்லை. வெளியே நின்று அங்கு நடப்பதை அவதானித்த அவனுக்கு அந்த முடிவு மிகவும் வேதனை அளித்தது. அதிலும் ஊரில் இருந்து ஞானத்தை பிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிக்கும் முத்தையரின் பேச்சு அவனுக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

ஞானம் அவனது பொதுவாழ்வில் அவன் ஏற்றுக் கொண்ட நீதியான சமத்துவமான தனிநாட்டுக்கான கனவு முதல் முறையாக சிதறடிக்கப் படுவதையும், நிராதரவான ஒரு சூழலுக்குள் அவை தள்ளப்படுவதையும் உணர்ந்து அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தான். அவனது நம்பிக்கை சிதறடிக்கப்பட்ட போது அவனை அடைந்த ஏமாற்றம் அவனுக்குள் ஆத்திரமாக கனன்று எழுந்தாலும் எதிர்காலத்துக்கான நம்பிக்கையுடன் தன்னை அவன் நிதானப் படுத்திக் கொண்டான். முதியவர்கள்தான் பழைய கருத்துக்களிலிருந்து விடுபட முடியாதவர்களாக இருந்தாலும் அவனோடு பல பாரதி விழாக்களை நடத்துவதிலும், புதிய கருத்துக்களை வெளிப்படுத்தும் நாடகங் களை மேடையேற்றுவதிலும் முன்னின்ற அந்த இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவனால் ஊகிக்க முடியாமல் இருந்தது. அவனுக்கு முன்னால் வாங்கில் அமர்ந்தும் சுற்றிவர நின்றுகொண்டுமிருந்த அவர்களும் கூட தாம் விடுபட முடியாத ஓர் கட்டிறுக்கத்துக்கு உட்பட்டிருப்பதாக எண்ணி மௌனமாகி நின்றனர். சபையில் உள்ள எவரும் பிரேரணையைத் தோல்வி யடையச் செய்தமைக்கான மகிழ்ச்சியை வெளிக் காட்டவில்லை. அது ஞானத்தின் மனதைப் புண்படுத்தும் என மௌனமாகவே இருந்தனர். இதனால் சிறிது நேரம் அங்கு நீடித்திருந்த அமைதியை ஞானம் தான் முதலில் குலைக்கவேண்டி இருந்தது.

'இது பாரதியின்ரை பேரிலை இயங்கிற வாசிகசாலை' இஞ்சை சமத்துவமா வாசிக்க முடியாட்டி நான் இதிலை செயலாளரா இருக்க விரும்பேல்லை' நான் பதவியை இராஜினாமாச் செய்யிறன்'

அமைதியாகக் கூறியபடி கையில் வைத்திருந்த பதிவேடுகளை தலைவரின் மேசைமீது வைத்துவிட்டு வாசிகசாலையை விட்டு ஞானம் வெளியேறினான்.

'ஞானம் ஞானம் அவசரப் படாதையும் இஞ்சை வாரும்.. கூட்டம் இன்னும் முடியேல்லை. கூடிக் கதைச்சு முடிவெடுப்பம்'

தலைவர் முத்தையர் இருக்கையை விட்டு எழுந்து அவசரமாக அழைத்தபோதும் கூட்டம் கலைந்து வெளியே ஞானத்தை சுற்றி நின்றது. ஊர் வழக்கத்தை மீறமுடியாது எனவும் ராஜினாமாவைக் கைவிடும்படியும் அங்கு நின்றவர்கள் அவனைக் கோரி நின்றனர். ஞானம் முதல் முறையாக தான் பொதுவாழ்க்கையில் ஈடுபடுவதால் கிடைக்கும் பதவி, புகழ், ஊர்ப் பெரியவர்கள் செலுத்தும் அன்பு மதிப்பு மாலை மரியாதைகளை ஏற்று போலித்தனமாக வாழ்வதா? அல்லது போற்றுதலுக்கும், தூற்றுதல்களுக்கும் அப்பால் உண்மைக்கும், நீதிக்குமாக தான் வாழ்வதா என்பதை தீர்க்கமாக முடிவுசெய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

'இந்தச் சின்ன விசயத்திலையே மாற்றத்தைக் கொண்டு வரமுடியாட்டி புத்தகங்களைப் படிச்சு.. விழாக்களை வைச்சு என்ன பிரயோசனம்.. பேச்சொன்று செயலொன்றா நாங்கள் வாழக்கூடாது'

ஞானம் தனது முடிவில் உறுதியாக இருந்தான். கூட்டம் மெல்ல கலைந்தது. அவனும் வசந்தனும் வீட்டை நோக்கி நடந்தனர். வசந்தன் உறுப்பினராக இணையா விட்டாலும் பொது நடவடிக் கைகள் யாவற்றிலும் ஞானத்துடன் சேர்ந்து உற்சாகமாக செயற்பட்டு வந்தான். அதனால் அவனிடமும் சமூகத்தின் மீதான அக்கறையும் சரிபிழைகள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுகளும் இருந்தன.

'ஞானமண்ணை.. பெடியள் எல்லாரும் பொழுதுபடும் வரைக்கும் எங்கடை கருத்தோடை உறுதியாத்தான் இருந்தவங்கள்..'

'ஓ.. அப்பிடித்தான் என்னோடையும் கதைச்சவங்கள்.. அதுதான் பெரிய விடயமா இருக்கு பேந்தென்னண்டு மாறி இருப்பாங்கள்?

'தவராசாதான் உதாலை வரிலை பெரிய குழப்பங்கள் வரும் எண்டு கூடிக்கூடிக் கதைச்சவன்.. அவருக்கு.. தான் செயலாளரா வரவேணும் எண்ட ஆசை'

'ஓ.. நீர் சொல்லுறதைப் பாத்தா அவர்தான் தூண்டுதலா இருந்திருக்கிறார் எண்டு தெரியுது. ஆனால் பெடியளின்ரை மனங்களுக்கையும் இறுக்கங்கள் கூட்டங்கள் இருந்திருக்கு.. அவர் சொல்லுறார் எண்டதுக்காக மாறேலாதுதானே.. தவராசா செயலாளரா வரவிருப்பமெண்டா நாங்களே தெரிஞ்சு விட்டிருப்பம்.. கொஞ்சமாவது நல்ல கருத்துக்களுக்காக திண்ட பெடியளை பிழையா திசை திருப்பி இருக்கக் கூடாது' 'அதுவும் தவராசா தி.மு.க. ஆதரவு கதை கதைக்கிறவன்.. ஒரு எம்.ஜி.ஆர். ரசிகன்'

'அவர் ஏன் குழம்புறார் எண்டு எனக்குத் தெரியும்.. எதையும் கதைச்சுப் போட்டு போறது சுகம் வசந்தன் ஆனால் நடைமுறை எண்டு வரேக்கைதான் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். சரி விடு எல்லாம் எண்டைக்கும் இப்பிடியே இருக்கப் போகுதா.. நல்லது நடக்கும் எண்டு நம்புவம்'

ஞானம் கூறிய இந்த வார்த்தைகள் அவனுக்கு ஏற்பட்ட பெரிய ஏமாற்றத்தை தாங்கிக் கொள்வதற்காக தனக்குத் தானே கூறிக்கொண்ட வார்த்தைகள் அல்ல. அன்று நடந்த சம்பவங்களால் வயதில் சற்று இளையவனான தான் சோர்ந்து விடக்கூடாது என்பதற்காக கூறப்பட்ட வார்த்தைகள்தான் என்பதை வசந்தன் உணர்ந்திருந்தான். ஞானம் தனது வீட்டுப்படலையைத் திறந்து கொண்டு உள்ளே செல்ல வசந்தன் தனது வீட்டை நோக்கி சயிக்கிளை உருட்டியபடி நடந்தான்.

## தாகம்

-யோகி-

ஓராயிரம் பயணங்கள்
பெருவெளிக்கு
ஒரேயொரு பாதை

ஒவ்வொரு காலடிக்குள்ளும்
மரித்து
நிகழ்கிறது காலம்

பாதையிடம்
காலடிகளை ஒப்படைத்து
கடந்து செல்கின்றன கால்கள்

மரணத்தையுண்டு
மறுபடியும் பிறக்கிறது
உயிரின் தாகம்

மார்பிடுக்கிற் சுரக்கும்
பெருந்தாக நதியில்
எனது கூடிகாரமும்
வெற்றுக் கிண்ணங்களும்
மூழ்கிக் கொண்டிருக்கின்றன

தாகங்களைப் பகிர்ந்தபடி
அவரவர் பாதையில்
அவரவர் பயணங்கள்

# பாரதி.. யவர்

- குப்பிழான் ஐ.சண்முகன் -

சிங்கேறு போன்ற நடையுடையான் - நற்
சிந்தனைச் செல்வனாய் வாழ்ந்திருந்தான்
மங்காத புன்னகை கொண்டிருந்தான் - மதி
இல்லாதார் வாழ்வையே சாடி நின்றான்
அன்பாக யாரையும் ஆதரித்தான் - அருட்
பாங்கான கவிதையும் இயற்றிடுவான்
பண்பாக வாழ்வோரைப் போற்றிடுவான் - பழி
செய்வோரை நல்லாய் தூற்றிடுவான்.

பெண்ணிற்கு விடுதலை வேண்டுமென்றான் - பெருமை
அவர்க்கும் உலகினில் உண்டு என்றான்
மண்ணிற் பிறந்தவர் யாவருமே மனித
சாதியிலே ஓரங்க மென்றான்
கண்ணிற்குக் கேடுகள் செய்யமாட்டார் - காதற்
பெண்ணிற் கேனோ கொடுமை என்றான்
ஆணிற்குப் பெண்கள் இளைத்ததில்லை - அவர்
அன்னை உமையின் சொரூபமென்றான்.

சாதிகள் புவியினில் இல்லை என்றான்
சண்டைகள் உலகுக்கு வேண்டாமென்றான்
நீதிகள் யாவற்கு மொன்றே யென்றான் - நிற
வேற்றுமை நீங்கிட வேண்டு மென்றான்
தீதில் அறங்கள் புரிகவென்றான் - சிந்தை
தன்னில் ஒழுக்கம் நிறைபு மென்றான்
காவிய மிங்கே பிறக்கு மென்றான் - கலி
காலமும் மாறியே தீருமென்றான்.

தன்வாழ்வை தமிழிற்கே அர்ப்பணித்தான் - தாய்
மொழியினை தரணியில் வாழ வைத்தான்
பண்டொடுங் காலக் கவிமரபைப் - பாரிப்
பாவிலே புரட்சியைச் செய்து விட்டான்
அவ்மொழி அணிதொடை யாப்புகளை அவன்
அலட்சியமாகவே ஒதுக்கி வைத்து
சொன்னொடும் பாக்கள் எழுதிவைத்தான் - சொல்லில்
மக்கள் உணர்ச்சியைக் காட்டிச் சென்றான்.

([illegible] கவிதையிலிருந்து -1996)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப விமோசனம்

-சிறி-

[illegible]

சிவபெருமானால் தண்டிக்கப்பட்ட நக்கீரருக்குக் குளத்தில் முழுகி எழுந்தும் உடல் உபாதை தணியவில்லை. தான் மதுரை மாநகரை விட்டு அகற்றப்பட்டது நியாயமா என்று அவருக்குள் இருந்த ஐயம் இன்னும் தீரவில்லை. குற்றம் குற்றமே என்று சொன்னது எவ்வகையிலும் தவறு என்று அவரால் இன்னும் ஏற்க முடியவில்லை. புலமை இல்லாத ஒருவன் தனக்கே விளங்காத ஒரு கவிதை வாசித்துப் பரிசு பெற்றதைப்பிட்டுத் தன் மனதில் ஏற்பட்ட வெறுப்பு முதற்கண் தன் ஆணவத்தின் பாற்பட்டதா அல்லது நியாய உணர்வின் பாற்பட்டதா என்ற கேள்விக்கும் அவரால் முடிவு காண முடியவில்லை. வீடு, வாசல், மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், அரச சபை எல்லாவற்றையும், ஒரு வாக்குவாதத்திற்காக, சபையோர் நடுவே விட்டுக் கொடுக்கப்படாது என்ற வீம்புக்காக, வரட்டுக் கௌரவத்திற்காக இழந்து பரமசிவனாருடைய கோபத்துக்கு ஆளாகிய முதலாவது சாதாரண மனிதன் என்று வருந்துவதா? இல்லை பெருமைப்படுவதா என்று கூட அவருக்கு நிச்சயமில்லை. நெற்றிக்கண் பட்ட அவரது தேகத்தின் தகிப்பு அதிகமா அல்லது அநியாயமாக அவமதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டோமே என்று மனத்தின் தகிப்பு அதிகமா என்றும் அவருக்குத் தெரியவில்லை. நெடுங்காலமாகத் தன்னை அறிந்த பாண்டியன் கூடத் தனக்காகப் பரிந்து பேசவில்லையே என்று அவரது மனமும் குமைந்தது. தருமி கேட்டுப் பாடிவிட்ட செவிக்குத் தன் மனைவியின் கூந்தல் இயற்கை மணம் கொண்டது என்று சொன்னவனின் புலமையை விட இல்லையென்று நெற்றிக் கண் காட்டிய அடுத்த மாதிரிச் சொல்லியவனுடைய சத்திய மென்மை பிடிக்காதா? கற்புள்ள பெண்களின் கூந்தலில் எல்லாம் இயற்கை மணம் இருக்குமென்றால், பாண்டியனின் பட்டத்தரசியை விட்டால் மற்ற எல்லாப் பெண்களும் கற்பில்லாதவர்களா?

பாண்டியனுடைய அதிகாரத்தால் வந்த அச்சம் நியாயத்தைக் காணாதவாறு கண்ணை மறைத்தது. மற்றப் புலவர்கள்? இப்படியும் ஒரு மொத்தமான கோழைத் தனமா? பாண்டியனின் மணிமுடிக்கும் பரமசிவனாரின் கோபத்துக்கும் ஒன்று சேர்ந்து நிற்கையில் தணிந்து எதிர்க்கும் நெஞ்சுறுதி எத்தனை பேருக்கு உண்டு என்று நினைக்கும்போது நக்கீரரின் பரிமளமல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுக்குள் விளைந்த கணநேரப் பெருமிதம் சில்லென்று குளிரூட்டிச் சிலிர்க்க வைத்து மறைந்தது.

என்ன பயனற்ற நடைமுறைக்கு ஒவ்வாத யோசனைகள்! வாழ்நாள் முழுவதும் குற்றம் குற்றமே என்று சொன்ன விம்பை மட்டுமே நினைத்துக் கொண்டு திருப்திப்பட முடியுமா? இதற்காக நாளை ஒரு நாள் உலகம் பாராட்டலாம் கூடும். ஆனால் இன்றைக்குச் சோறு போடுவது யார்? சிவபெருமானே சீற்றந் தணிந்து நடந்ததை நடந்ததாயிருக்கட்டும் என்று மன்னித்ததோடு மட்டுமன்றி விமோசனம் பெறப் பாதையும் காட்டிவிட்டார். அடுத்த காரியத்தைக் கவனிக்க வேண்டியதுதான். சிவபெருமானே வந்து தன் துணிவை மெச்சினாலொழிய அரச சபையில் உள்ள பிச்சைக்காரப் பட்டாளம் தன்னுடன் உறவு கொண்டாடத் துணியாது. புகழ்பாடும் கும்பல் உள்ளவரைக்கும் பாண்டியனுக்குத் தன் அவையில் நக்கீரர் இருந்தாலென்ன, போனாலென்ன அவனுடைய தேவியின் கூந்தலின் இயற்கை மணத்துக்கு ஈடாக ஊரில் ஒரு மலருக்கும் மணமில்லை என்று வாயுளைப் பாடப்போகிற கூட்டத்தின் நடுவே குற்றம் குற்றமே என்ற நிலையினின்று பின்வாங்கிய நக்கீரன் இருந்தாலும் வெற்றி தான். பாண்டியனுக்கு எந்த வகையான மகிழ்ச்சியை மறுப்பது என்று மனம் தடுமாறியது. மனைவி, குடும்பம், மதுரை மாநகர் என்று மாறிமாறி எழுந்த நினைவுகள் சாப விமோசனத்தை நோக்கி நக்கீரரை உந்தின. மனதை ஒரு நிலைப்படுத்தித் தியானத்தில் ஆழ்வோம் என்ற முடிவுடன் நக்கீரர் குளத்தில் இறங்கி முழுகியெழுந்து ஈர வேட்டியுடன் குளக்கரை மரநிழலில் சப்பாணி கொட்டியவாறு மனதை ஒடுக்க முற்பட்டார். அப்போது....

***

இளங்கீரனுடைய தூக்கம் கலைந்தது. "மச்சான், கீரன் எழும்படா! ஊரால கடிதம் வந்திருக்குது" என்ற பிரகடனத்துடன் கதவைத் தடதடவென்று தட்டினான். அடுத்த அறையிலிருக்கும் சுரேன் எனப்படுகின்ற சுரேந்திரகுமார்.

"பரதேசியள்! சனிஞாயிறெண்டாலும் ஆறுதலாய்ப் படுக்க விடாதுகள். ஒண்டுஸ் ஆரேன் ஒருத்தன் மாறி மாறி மணியடிப்பான். இல்லாட்டி அறைக்குள்ளை வந்து குழப்புவான்." முனகியவாறு தலையணையிலிருந்து தலையை வெகு சிரமப்பட்டுப் பிய்த்தெடுத்து நிமிர்த்தி வைக்கு முன்னமே கதவைத் திறந்து கடிதத்தைக் கட்டிலின் வீசிய சுரேன் அறையை விட்டுப் போக மனமில்லாமல் நின்றான்.

கீரனுக்கும் அவனைப் போகச் சொல்ல மனம் வரவில்லை. மனம் வந்தாலும் சுரேன் இலேசில் போகப் போவதில்லை. 1990க்கு முதலே எவருக்கும் ஊரிலிருந்து கடிதங்கள் வருவது குறைவு. இப்போது கடிதம் வருவதே அபூர்வம். யாரிடமாவது கையிற் கொடுத்தனுப்பிக் கொழும்பில் போட்டால் வந்து சேரும். அதுவும் நிச்சயமில்லை. ஒரு மாதம் இரண்டு மாதம் பிந்தி வருகிற கடிதத்தில் எதுவும் பெரிய புதினம் இராது தான். காலமாகவே இயக்கங்களுடைய செய்திப் பிரச்சாரங்களுக் குள்ளிருந்தும் செய்திகளிலிருந்தும் கண் காது முளைத்து வரும் தகவல்களிலிருந்தும் ஊர் நடப்புகளை ஒவ்வொருவரும் அவரவர் மனவிருப்பத்திற்கேற்றபடி விளங்கி வியாக்கியானஞ் செய்யப் பழகிவிட்டாலும் ஊரிலிருந்து கைப்பட எழுதின கடிதத்துக்கு ஒரு மதிப்பு இருந்தே வந்தது. சுரேனும், கீரனும் அடுத்தடுத்த ஊர்க்காரர்கள். சுற்றி வளைத்துச் சொந்தமும் உண்டு. சுரேனுக்குக் கடிதம் வந்து ஆறேழு மாதமிருக்கும். மனதுக்குள் இருக்கிற கவலையை வெளிக்காட்டாமல் ஆர்ப்பாட்டமான பேச்சாலும் அட்டகாசமான சிரிப்பாலும் மூடப்பழகிவிட்டான்.

அம்மாவே எழுதியிருக்கிறா? சுரேன் ஆவலை அடக்க முயலவில்லை.

"ஓம்" என்று சொல்லியபடி உறையைத் திறந்து கடிதத்தை வாசிக்கத் தொடங்கிய கீரனுடைய மௌனத்தைக் குலைக்க வழி தெரியாத சுரேன், "மச்சான், கோப்பி ஒண்டு ஊத்தட்டா?" என்று கேட்டுவிட்டுக் கீரனுடைய மறுமொழிக்குக் காத்திராமல் அறையை விட்டுப்போனான்.

கீரன் கடிதத்தை வாசித்து முடித்தபோது அறையிலிருந்த மற்றக் கட்டிலின் கோப்பியை உறிஞ்சியபடி சுரேன் இருந்தான். கீரனுடைய கட்டிற் தலைமாட்டுக்கு அருகே கப்பலத்தின் மேல் கீரனுடைய கோப்பி வைக்கப்பட்டிருந்தது.

"கோப்பையைச் சரியாய்க் கழுவினியா" என்ற கீரனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் "அம்மா என்னவாம்?" என்று கேள்வி எழுப்பினான் சுரேன்.

"நீ ஒரு நாளும் கோப்பை சரியாய்க் கழுவமாட்டாய்"

"சோம்பேறித் தடியனுக்கு கோப்பி கொண்டந்ததும் காணாமல் ..."

"உன்னை வைத்துச் சொன்னனானே?"

"பாவமெண்டுக் கொண்டு வந்தால் அறுவான்ட வாய்க்கொழுப்பு"

"பாவம் பார்த்தே கொண்டந்தனீ? கடிதம் பார்க்கவெல்லோ உன்ர இரக்கமெல்லாம்"

"சரிசரி, என்னவாம் புதினம்?"

"எல்லாம் தெரிஞ்ச கதை தான் புதிசா ஒன்டுமில்லை" ஒரு நிமிஷநேரத் தயக்கத்தின் பின், "இந்தா வாசி" என்று கடிதத்தை நீட்டினான் கீரன்.

"எப்ப கோயிலுக்குப் போறாய்?

"ஏன் போகவேணும்?"

"அம்மா என்னவோ கெஞ்சி மண்டாடிக் கோயிலுக்குப் போ எண்டு எழுதியிருக்கிறா. ஒருக்காப் போனா முருகேசியாருக்குத் தேஞ்சு போகுமோ?"

"இதுதான் உன்னட்டைக் கடிதத்தைக் காட்டினா வாற வினை. உங்கை கோயில் வழிபா யாவாரமெல்லோ செய்யினம்"

"ஊரில எண்டா யாவாரம் இல்லையோ?"

"இந்தளவு மோசமில்லை. எண்டாலும் அங்கேயே போகாமல் விட்டிட்டன்".

"ஓ! அது தானே அம்மா இவ்வளவு கெண்டிக்கிறா. கும்பிடாட்டிலென்ன பகல் சாப்பிடவெண்டாலும் போகலாம்" பகுதி பகிடியாகவும் பகுதி உண்மையாகவும் சொல்லியபடி மறுதரம் வாசித்த திருப்தியுடன் சுரேன் வெளியேறினான்.

***

கீரனுடைய அம்மாவுக்குக் கீரன் கோயிலுக்குப் போவதை நிறுத்திய காலம் தொடங்கிப் பெருங் கவலை. அரச படையினர் இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் பெருந்தொகையிற் பிடித்துச்சென்று விசாரணையின்றி மறிக்கவும் வதைக்கவும் தொடங்கிய பிறகு, கீரன் கடவுளைப் பகைத்துக்கொண்டு என்ன கஷ்டப்படப் போகிறானோ என்று அம்மாவுடைய மனக்கவலை மேலும் அதிகரித்தது. யார்யாரை ஏன் எப்போது எவ்வாறு கொல்வார்கள் என்றே தெரியாத காலம் வந்துங்கூடக் கீரன் நாட்டை விட்டு வெளியேற முயலவில்லை. 1987இல் அமைதி காக்கும் படையின் வருகைக்குப் பிறகு நடந்த சம்பவங்களை அடுத்து அவனால் தொடர்ந்தும் ஊரில் இருக்க முடியாது என்று முடிவெடுத்து வந்த அம்மா தாலிக்கொடி உட்படக் கையிலும் கழுத்திலும் இருந்த சகலதையும் விற்று அவனை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தா.

கீரனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஒன்றும் மற்றைய தமிழ் வாலிபர்கட்கு ஏற்பட்டவற்றை விட அதிகமானவையில்லை என்று அம்மாவுக்கு ஆறுதல் சொன்னாலும் அம்மாவுக்கு இவையெல்லாமே தெய்வத்தின் கோபம் காரணமானவை என்ற நம்பிக்கை கூடியதேயொழியக் குறையவில்லை. அவன் பத்திரமாக இங்கிருந்து போய்ச் சேர்ந்தால் எப்படியும் பழனி என்று அம்மா தன் மனதிற்குள் வேண்டிக் கொண்டாள். அது எப்படிச் சாத்தியப்படும் என்றெல்லாம் அப்போது யோசிக்க அவகாசம் எது? கீரனுக்கு லண்டன் பிழைப்பு பழகி விட்டாலும் இயந்திரகதியில் நடக்கும் உழைப்பும் சாரமற்ற வாழ்க்கையும் மனதை வாட்டின. அதைப் பற்றி வீட்டிற்கு எழுதிய கடிதங்களிற் குறிப்பிட்டது அம்மாவின் அபிப்பிராயத்தை மேலும் உறுதிப் படுத்தியது. அவனுக்கும் மெல்ல மெல்ல அந்தக் கருத்துடன் உடன்பாடு ஏற்படத் தொடங்கிவிட்டது. அம்மாவுக்கோ முன்பின் யோசியாமல் பழனிக்கு நேர்ந்து விட்டோமே என்ற புதிய கவலையும் சேர்ந்து கொண்டது. கீரன் வருஷத்துக்கு ஒரு முறையாவது கோயிலுக்குப் போய் முருகனுக்கு ஒரு அர்ச்சனை செய்தாலும் தெய்வம் பொறுத்துக்கொள்ளும் என்ற நப்பாசையை ஒவ்வொரு கடிதத்திலும் தவறாமல் தெரிவிப்பார். கீரனுக்கோ இன்னும் நிச்சயமில்லை, சந்தேகம். ஆனாலும் அம்மாவின் கடிதங்கள் பாதிப்பை ஏற்படுத்தாமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப் பிரச்சனை, இனக் கலவரம், அரச படைகளின் அட்டூழியம், இயக்கங்களின் மோதல், போர், கொலைகள், வதைகள் இவையெல்லாம் தெய்வச் செயலா? தமிழர் எல்லோருமே ஒருமுறை பழனிக்குப் படையெடுத்தால் நாட்டில் முழுப் பிரச்சனையும் தீர்ந்துவிடுமா? மூட நம்பிக்கைகளும் வரட்டு ஆசாரங்களும் அரியாலையூர் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மட்டுந்தானா இருக்கின்றன? கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்றால், முட்டாள்களின் உலகத்தில் அறிஞன் வாழ முடியுமா? தான் கடவுளை நம்பவில்லை என்பதை அறிஞன் முட்டாள்களுக்கு நிரூபிக்க என்ன அவசியம்? அம்மாவுக்காகக் கோயிலுக்கு ஒரு தடவை போனால் என்ன நட்டம்? போனால் அவனது கொள்கைப் பிடிப்பு எங்கே போவது? சிநேகிதர்கள் சிரிக்கமாட்டார்களா? சிநேகிதர்களின் சிரிப்புக்குப் பயந்தா அவன் நாத்திகத்தைக் கடைப்பிடிக்கிறான். அம்மாவுக்கும் மேலாக ஒரு தெய்வம் இல்லையென்றால் அம்மாவுக்கும் மேலாக என்ன நாத்திகம்? நீண்டநேர மனக் குடைச்சலுக்குப் பிறகு கோயிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்வது என்ற முடிவுக்கு வந்தான்.

***

மரத்திலிருந்து ஒரு இலை குளநீரில் விழுந்தது. விழுந்த இலை திடீரென்று ஒரு பாதி பறவையாகி மேலே பறக்க முற்பட்டது. மறுபாதி மீனாகி நீருள் முழுக முயன்றது. தியானத்தில் இருந்த முன்னிருந்த நக்கீரரின் மனநிலையின் படிமந்தானோ அது? நிச்சயமின்மை, சஞ்சலம், சபலம், சலனம், முடிவின்மை, ஐயங்கள், கேள்விகள், மேலும் கேள்விகள், மனதின் கந்தளிப்பு, தவிப்பு, பதட்டம், துடிப்பு, வேதனை, குமுறல், கொதிப்பு, ஓய்வற்ற இயக்கம், இழுபறி…

அந்த இலை ஏன் மரத்தில் இருந்தபடியே இருந்திருக்கக்கூடாது? விழுந்தாலும் ஏன் தரையில் விழுந்து சருகாகவோ நீரில் மிதந்து நாளடைவில் அழுகியோ போயிருக்கக்கூடாது. பாண்டியன் அவையில் மற்றப் புலவர்கள்போல், மரத்தில் பாதுகாப்பாக இருக்கிற இலைகள்போல் இல்லாமல் இது மட்டும் ஏன் இப்படித் தவிக்கவேண்டும்? பறவையாகி இழுக்கிற பாதி மேலெழுந்து மரத்தில் அமர்ந்து ஏதோ வகையில் மரத்துடன் உறவு கொண்டாட முனையும் நக்கீரரின் நப்பாசையா? மீண்டும் அரச சபையுடன் உறவு துண்டிக்கப்பட்ட நிலையிலும் தான் தானாகவே இருக்க முனைகின்ற நக்கீரரின் ஆணவமா? நீரில் விழுந்தாலும் நீருக்குள்ளேயே ஒரு இருப்பைக் காணமுடியுமென்ற தைரியத்தின் வெளிப்பாடா?

நக்கீரர் கண்ணை மூடித் தியானத்தில் ஆழ்வதற்கு முன்னமே இலையாக விழுந்து விளைந்த அந்த விநோத சிருஷ்டி நக்கீரரின் பார்வையில் விழுந்தது. இது நிசமா அல்லது கற்பனையா? நீரில் இறங்கி அதை நெருங்கிப் பார்க்கலாமா? மீனையும் பறவையையும் பிரித்து அந்த அவலத்தை முடிவுக்குக் கொண்டு வரலாமா? பிரித்தால் இரண்டுமே அழிந்து அந்த இருப்பே முடிவுக்கு வந்து விடுமா? மதுரை மாநகரில் பாண்டியனின் அவையில் நடந்தவை யாவும் மனதில் நிழலாடின. மரத்தோடு மரமாக மறுபடியும் ஒரு இலையாக ஒட்டிப்போய் மற்ற ஏனைய புலவர்களைப் போல வாழ்க்கை வாழ்வதற்குத்தானா இந்தத் தியானம்?

நக்கீரரின் நெஞ்சுரத்தை மீண்டும் பரீட்சிப்பதற்குத் தான் அந்தப் பரம்பொருள் அவரைத் தவற்றுக்கு வருந்தி இரங்கித் தியானத்தில் ஈடுபடுமாறு கூறியதா? உண்மையில் அந்தப் பரம்பொருளுக்கு நக்கீரரைத் தண்டித்து என்ன பயன்? நக்கீரரை மன்னித்து என்ன பயன்? தன் நெஞ்சைப் பொய்த்து ஒரு தியானமா?

மேலும் ஐயங்கள், மேலும் நிச்சயமின்மை, மேலும் மனக்கொதிப்பு, மேலும் உடற்கொதிப்பு. இம்முறை நன்னிரக்கத்தாலோ துணிச்சலாலோ அல்ல, அறிவே சுடராக எழுந்து விரிந்து நக்கீரரை உள்ளும் புறமும் தகித்தது.

***

கோயிலுக்குப் போனபோது பூசை தொடங்கிவிட்டது. சிறுவர்க்குக் கடைசியாக ஊர்க் கோயிலில் பார்த்ததினின்று பலதும் வித்தியாசமாக இருந்தது. பெண்கள் எல்லோருமே சேலையுடன் வரவில்லை. ஆண்கள் எவருமே வேட்டியுடன் காணப்படவில்லை. குயர் பூசைக்குரு மேலே சட்டையும் லேஞ்சும் அணிந்திருந்தார். பூசையின் முடிவில் பஜனைப் பாடல்கள் கேட்டன. வில்லொற்று

பெட்டி மேளவாத்தியம் ஒலித்தது. பிளாஸ்ரிக் போத்தல்களில் அபிஷேகத்திற்குப் பால் வந்தது. பூக்கள் இலையுந் தண்டுமாகப் பூச்சட்டிகளிலும் தட்டங்களிலும் கிடந்தன. ஆனை வாழைப் பழங்கள் நுனி வெட்டாமல் படைக்கப்பட்டன. வானோவின் பூக்களும் சிவப்பு அப்பிள் பழங்களும் கண்ணைப் பறித்தன. இதெல்லாம் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற மாற்றங்களா? நாம் செய்யும் மாற்றங்கள் பிரதிபலிப்புகளுடனேயே நின்று விடுகின்றனவா? கோயிற் தரையை அழுக்காக வைத்திருக்காமல் மனிதர் விழுந்து கும்பிடலாமா? கோயிற் சுவரில் கேளிக்கை நிகழ்ச்சி விளம்பரங்களும் அரசியல் விளம்பரங்களும் காணப்படலாமா? எல்லாமே மாற்றத்துக்கு உரியன என்றால் சடங்குகளையும் ஏன் மாற்றக் கூடாது. மாட்டைப் போகவிட்டுக் கயிற்றைப் பேய்க்கீறு காரியமா பார்க்கிறோம்?

கீரனுடைய மனதில் எழுந்த கேள்வி அலைகள் முடிவின்றி நீண்டு உயர்ந்தன. கீரனுக்கு அம்மா செய்யச் சொன்ன அர்ச்சனை நினைவுக்கு வந்தபோது பூசை முடிந்து விட்டது. ஐயரிடம் போய் அர்ச்சனைக்குக் காசைநீட்ட அவர் துண்டு வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னார். துண்டு வாங்குமிடத்தைக் கண்டுபிடித்துக் கணக்கப்பிள்ளை வரும்வரை காத்திருந்து வாங்கித் திரும்பி வந்தபோது ஐயர் வேறு அலுவலில் இறங்கிவிட்டார்.

அர்ச்சனைத் துண்டை மடித்துச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு வெளியில் வந்து சப்பாத்தை மாட்டித் தெருவில் இறங்கினான்.

என்ன மச்சான் கீரன், கோவிலுக்கே வந்தனி?" என்று கேட்டகுரல் பெற்றோல் செட்டில் பழக்கம் பிடித்த தம்பிராசா னுடையது.

"இல்லை....சும்மா..." என்று கீரன் இழுத்து முடிக்கு முன்னே, "கண்டு கனகாலம், வாடா "பப்புக்குப் போய் ஒரு பியர் அடிப்பம்" என்றவாறே தம்பிராசா கையைப் பிடித்து இழுத்துச் சென்றான்.


***

தியானங் குலைந்த நக்கீரரைப் பூதமொன்று தன் குகைக்குள் சுமந்து சென்றது.

## பட்டுப்போனது மரம்

- ஜெயம்ஜெகன் -

அவளை நிலவு என்றான்
இவள் தேய்ந்து போனாள்
அவளை மலர் என்றான்
அவள் வாடிப்போனாள்
அவளைப் புத்தகம் என்றான்
அவள் புத்தி கெட்டுப் போனாள்
அவளை மழை என்றான்
அவள் நனைந்து போனாள்
அவளை இதயக் கோயில் என்றான்
இவள் இடிந்து போனாள்
அவளை முத்து என்றான்
இவள் சிப்பிபோல் தனித்துப்
போனாள்
அவளை எழில் என்றான்
இவள் எட்டாக் கனிக்கு கொட்டாவி
விட்டான்
அவளை வானம்பாடி என்றான்
இவள் தாடிக்காரனாய்ப் போனான்
அவளை செல்வம் என்றான்
இவள் செலவழித்துப்போனான்
அவளைத்தாலி என்றான்
இவள் உலகை விட்டுக்காலி ஆனான்



நூல் : சூரகளியன் (கவிதைகள்)
ஆசிரியர் : பா.அகிலன்
வெளியீடு : பேறு
71/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
விலை : 200/-

# விடிவு

-அநாதரட்சகன்-



அந்த வீதியில் மேடு பள்ளங்களுக்கு வெட்டி ஒதுக்கி மறுபடியும் பள்ளத்தில் விழுந்து எழும்பிக் கொண்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்தார் தவராசா. வீட்டை நெருங்க நெருங்க அவர் மனதில் குற்றவுணர்வுதான் வேர் விட்டது சைக்கிளில் நகர முடியாமல் நகர்ந்து ஒருவாறு வீடு வந்து சேர்ந்தார்.

வீட்டு விறாந்தையில் அவரை எதிர்பார்த்து இளைஞர்கள் சிலர் காத்திருந்தார்கள். அவர்கள் வேறு யாருமல்ல அந்த வீதியில் குடியிருக்கும் அயலவர்கள் அவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித் தொழில் செய்பவர்கள். தங்கள் வேலைகளை அவசரமாக முடித்து விட்டு வந்திருக்கிறார்கள். பல வருடங்களாக திருத்தப் படாமல் இருக்கும் அந்த வீதி பற்றி தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்காக கூடியிருக்கிறார்கள்.

மாநகராட்சி மன்றத்துக்குப் போய் வந்த தவராசாவின் பதிலைக்கேட்பதற்கு காத்திருந்தார்கள். அலைந்தலைந்து களைத்துப் போய் வந்திருந்த தவராசா சைக்கிளை சாத்தி விட்டு விறாந்தையில் வந்தமர்ந்தார். தவராசாவின் முகத்தில் கவிந்திருந்த ஏமாற்றத்தை இனங் கண்டுவிட்ட ஒருவன் கேட்டான்

"போன விசயம் என்னாம் அண்ண"

"மேயரைச் சந்திக்க முடியேல்ல பொழும்புக்கு ஏதோ மாநாட்டுக்கு போட்டாராம்"

"வேற பொறுப்பானவை ஆரும் இருக்கேல்லையே" அவன் மீண்டும் துருவிக் கேட்டான். ("இல்லை...எங்கடை பகுதி மெம்பர் சிவப்பிரகாசத்தைக் கண்டு கதைச்சன். எங்கட விசயத்தில எல்லாரும் நழுவப் பாக்கிறாங்கள் வேறை வழியத் தான் பாக்கவேணும். நம்பிக்கை இழந்து போய் தவராசா கூறினார். "எங்கட வோட்டாலை பதவிக்கு வந்துவிட்டு தங்கடை வசதிகளைத் தானே பாக்கினம். எங்கை பார்த்தாலும் எங்கடைபாக்கள் இருக்கிற பாதையள் தானை இப்படிக் கிடக்கிது"

"தங்கடை வீதியள் குச்சொழுங்கைகளுக் கெல்லாம் கல்லும் போட்டும் தாரும் ஊற்றி தெருவுக்கு விளக்கும் போட்டாச்சு"

"எங்கடை வீதிமட்டும் முப்பதெட்டு வருசமா திருத்தாமல் கிடக்கிறது இனி இதை ஆரட்டைப் போய்ச் சொல்லிறது"

தங்களது வீதி குறித்து ஒரு முறைக்குப் பலமுறை நேரில் முறைப்பாடு செய்தும் மனுக்கள் எழுதிக் கொடுத்தும் எதுவும் நடக்க வில்லை என்ற கோபா வேசத்தில் அந்த இளைஞர்களின் வார்த்தைகள் பல திக்கிலிருந்தும் அம்புகளாய் வந்து தவராசாவை தாக்கின. தவராசாவும் அந்த வீதியில் நீண்ட காலமாகக் குடியிருப்பவர். அந்த பகுதியில் பிரசித்தமானவர். யாரையும் வளைத்துப் போட்டு காரியம் சாதிக்கக் கூடியவர் என்று பேர் எடுத்தவர்

இம் முறை நடந்த தேர்தலில் ஆளும் கட்சியை ஆதரித்து நின்றது மட்டுமல்லாமல் தேர்தல் நாளன்று கட்சி முகவராகவும் இருந்து பாடுபட்ட மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீதி திருத்தத்தை முன்னிறுத்தி வாக்கு வேட்டைக்காக வீடு வீடாக பிரசாரமும் செய்தவர். தேர்தலில் வென்றால் முதல் வேலையாக இந்த வீதியைச் செப்பனிட்டு தருவது என்பது தான் வாக்குறுதி. அந்த நம்பிக்கையில் தான் அவருடன் நின்று அந்த இளைஞர்களும் இரவு பகல் பாராது பிரசாரத்தில் இறங்கினார் என்பது தான் உண்மை. அதைவிட அவர்களுக்கு கட்சி, அரசியல் கொள்கை, என்று எதிலும் பிடிப்பு இருக்கவில்லை. பாவம் தவராசா அவரும் தான் என்ன செய்வார் மூத்திரத்தை பயிறு என்று நம்பி குடித்து ஏமாந்தவர் போலானார்.

இது விடயமாக பல தடவை அலைந்து திரிந்து மேயர், மெம்பர், மராமத்துப் பொறியியலாளர் என எல்லோரையும் அணுகி களைத்து விட்டார். தனியாகச் சென்று கதைத்து எதுவும் ஆகவில்லை என நினைத்து இன்னும் பலரையும் அழைத்துச் சென்று கதைத்துப் பார்த்தார். அதுவும் பலிக்காமல் போக அந்த வீதியில் குடியிருப்பவர்களின் ஒப்பங்களைப் பெற்று மனுவும் எழுதிக் கொடுத்தார். வழக்கம் போல் எதுவுமே நடைபெறவில்லை.

இளைஞர்களின் கேள்விக் கணைகளின் நியாயத்தை உணர்ந்து பதிலளித்து இயலாது மௌனித்து நின்றார். அந்த வேளையில் தான் அந்த தெருவில் இருக்கும் பஞ்சலிங்கம் வந்து சேர்ந்தார்.

"வாருங்கோ...... பஞ்சண்ணை உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருக்க வாறியள்" என ஆசுவாசப் பட்டு கொண்டு கூறினார் தவராசா.

அங்கிருந்த எல்லோரும் பஞ்சலிங்கத்தை முகம் மலர்ந்து பார்த்து புன்னகைத்தனர்.

"இந்த பாதையிலை எப்படியப்பா நடக்கிறியள்........வெறும் கால் வைக்கேலாது. கல்லுகள் குத்திப் புண்ணாகப் போகுது" என்று தொண தொணத்தார் பஞ்சலிங்கம். அவர் நாட்டு நடப்பு அரசியல் பற்றித் தெரிந்த மனிதர். கட்சி, தொழிற் சங்க வேலைகள் என நீண்ட கால அனுபவமும் உள்ளவர். மாநகராட்சி மன்றத்தில் சில காலம் வேலை செய்து ஓய்வு பெற்றவர். அக் காலத்தில் தொழிற் சங்கப் போராட்டங்களில் முன்னின்று வெற்றியும் கண்டவர். மாநகராட்சி மன்றச் செயற்பாடுகளின் நெளிவு சுளிவுகள் பற்றி விளக்கமுள்ள மனிதர்.

"என்ன......? எல்லாரும் கூடியிருக்கிறியள். ஏதோ முக்கியமான விசயம் கதைக்கப் போறியள் போலை....... அது சரி..... இந்த றோட்டு விசயம் என்னவாம்..?" என்று முந்திக் கொண்டார் பஞ்சலிங்கம்.

"பஞ்சண்ணை நீங்கள் முந்தி படிச்சுப்படிச்சு சொன்னதை நாங்கள் கேட்கல்லை இப்ப எல்லாம் புரிஞ்சு போச்சுது" இப்பவும் அங்கதான் போய் வந்திருக்கிறன். ஆளையாள் சாட்டிக் கொண்டு நிக்கிறாங்கள்" மனம் நொந்து போய் தவராசா கூறினார்.

"பஞ்சண்ணை.... மேயரட்டை போனால் மெம்பரைப் போய்ப் பாக்கட்டாம் மெம்பரைக் கேட்டால் மராமத்து எஞ்சினியரோடை கதைக்கட்டாம் இப்பிடியே சாக்குப் போக்கெல்லோ சொல்லுகினம்"

ஆட்டபாட்டமான இளைஞன் ஒருவன் கறுவிக் கொண்டு கூறினான்.

"பதவிக்கு வந்தாப்பிறகு உங்களையெல்லாம் அவங்களுடைய கண்ணுக்குத் தெரியாது. இந்தப் பாதை இப்பிடியே கிடக்கிறது தான் அவைக்கு வசதி" என்று அந்த இளைஞனைப் பார்த்து பஞ்சலிங்கம் கூறினார்.

"ஏனண்ணை...? அப்பிடிச் சொல்லுறியள்..." அவர்களில் ஒருவன் கேட்டான்.

உங்கட குலம் கோத்திரத்தை இனங்காட்டுறதுக்கு வசதியாயிருக்கும் என்டு நினைக்கிறாங்கள் தம்பியவை"

"அப்ப ......, நாங்கள் என்ன செய்ய வேணும் சொல்லுங்கோ........" சற்று ஆவேசம் வந்தவன் போலக் கேட்டான் அந்த இளைஞன்

"அந்தக் கணத்தின் இனம் புரியாத நிசப்தமொன்று நிலவி எல்லோர் மனதிலும் அலை எழுந்தது.

"போராட்டம்தான் வழி" சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்து விட்டு அமைதியாகக் கூறினார் பஞ்சலிங்கம்.

"இவ்வளவும் நடந்து சனமெல்லாம் அலைப்பட்டதுக்குப் பிறகும் போராட்டம் அது இதுவென்டு கதைக்கிறியள் அண்ணை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கத்துடன் கேட்டார் தவராசா.

"பஞ்சண்ணை சொன்னதுதான் சரி எங்கட பிரச்சனை இது நாங்கள் போராடாமல் ஆர் வந்து எங்களுக்காக கதைக்கப் போகினம்..?"

நியாயம் கேட்கும் தொனியில் அங்கிருந்த இளைஞன் ஒருவன் கேட்டான்.

"பஞ்சண்ணை லேசாகச் சொல்லிவிடு வார். இந்த பிள்ளையளைப் பலிகொடுக் கிறதோ..?" தவராசா தயங்கியபடி கேட்டார்.

"என்ன தவம் உன்ரை கதை ஆட்சியைப் பிடிக்கவே போராடப் போறம். எங்கடை வீதியைத் திருத்தித்தா எண்டு தானே கேட்கப் போறம்" பஞ்சலிங்கம் உறுதி படக்கூறிவிட்டு தவராசாவை நிமிர்ந்து பார்த்தார்.

அப்ப நாங்கள் என்ன செய்ய வேணும் எண்டு சொல்லுங்கோ...? நெடிதான இளைஞன் ஒருவன் இடை மறித்துக் கேட்டான்.

"முதல் கட்டமாக ஊர்ச் சனங்களை கூட்டி அவையளுக்கு முன்னாலை போய் உரைக்கிறது மாதிரி கேக்கிறது தான். என்ன சொல்லியினம் எண்டு பாப்பம்."

பஞ்சலிங்கம் கூறியதைப் அங்கீக ரித்தது போல் அங்கிருந்தவர்கள் தங்க ளுக்குள்பேசி உடன்பட்டுக் கொண்டனர். பஞ்சலிங்கத்தின் யோசனையை அவர்க ளால் தட்டிக் கழிக்க முடியவில்லை. அவர் களது நிலையில் அதுதான் சரியாகப் பட்டது.

முதல் கட்டமாக வருகிற புதன்கிழமை ஊரைக் கூட்டி மாநகராட்சி மன்றத்துக்கு முன்னால் நிற்பது என்று ஏகோபித்த முடிவுக்கு வந்தனர்.

"இந்த முடிவை நாங்கள் எப்பவோ எடுத்திருக்க வேணும். எலக்சன் நேரம் எங்களைக் கெஞ்சி கொண்டு திரிஞ்சவங்கள் எல்லாம் றோட்டிலை திரும்பிப் பார்க்கிறாங் களில்லை" மன விரக்தியில் கூட்டத்தில் ஒருவன் கூறினான்.

"இரவு பகலெண்டு பாராமல் றோட்டு றோட்டா போஸ்ரர் ஒட்டினம் கூட்டம் வைச்சம் நினைக்கக் கோவம் தான் வருகுது. வெக்கமாயும் கிடக்கு" இன்னொருத்தன் பொருமி வெடித்தான்.

"இப்ப கவலைப்பட்டு என்ன..? தம்பி யவை காலங் காலமாக கண்ணை மூடிக் கொண்டு வோட்டுப் போட்டு என்னத்தைக் கண்டியள். உங்கடை வாழ்க்கையிலை வசந் தம் ஏதுவும் வந்ததா...? அவையள் தங்களை வளப்படுத்திக் கொண்டது தானே மிச்சம்" பஞ்சலிங்கம் சற்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

"சரி...சரி... பஞ்சண்ணை அடுத்த முறையும் வருவினம் தானை. அப்ப பாப்பம்.."

நிறைய எதிர் பார்புடனிருந்த தவராசா தனது மன உளைச்சலை வெளிப் படுத்தினார். "உங்களுக்கு ஒரு விசயத்தில் தெளிவு இருக்க வேணும். யார் பதவியிலை இருந்தாலும் இது தான் நடக்கும். ஆட்சி அதிகாரம் ஆற்றை கையிலை இருக் கெண்டு தான் பார்க்க வேணும். சாதாரண மக்களின்ரை நலனைப் பார்க்கிற ஆட்சிதான் எங்களுக்கு உதவும். விக்கல் கிழவியை விழுப் போட்டு கும்மல் கிழவியை வாங்கின கதையா இருக்கக் கூடாது"

மூச்சு விடாமலே சொல்லிக் கொண்டு எல்லோரது முகத்தையும் பார்த் தார் பஞ்சலிங்கம். அங்கிருந்த வர்களின் முகங்களில் நடைமுறை அரசியலை அறியும் ஆவல் தெரிந்தது.

"தம்பியவை இப்ப உலக நாடுக ளையும்... ஏன் அமெரிக்காவிலை நடக்கிறதைப் பாருங்கோ. மக்கள் ஆட்சி மாற்றத்துக்காக வீதியிலை இறங்கிப் போராடுகினம். அதெல்லாம் எங்களுக்கும் நல்ல பாடமாக இருக்க வேணும். இன்னை பதவியிலிருக்கிறவைக்கும் நல்ல பாடமாகத் தெரிய வேணும் இந்தப் பாடங்களைப் புரிஞ்சு கொள்ளாதவன் மக்கள் அரசியலை தெரியாதவன்"

சிறிய பிரசங்கமே நடாத்தி முடிந்தார் பஞ்சலிங்கம். தவராசாவின் மனைவி எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். தேநீரை பருகிய படியே புதன் கிழமைக்கான ஏற்பாடுகள் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பாதைப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட்ட திருப்தி அவர்களது முகங்களில் விகசித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு எழுச்சி; வெகுசனங்களின் போர்க் கோலமும் வெகுசன ஊடகங்களும்

-கனகநாயகம் வேல்தஞ்சன்-



ஏகாதிபத்திய உலக மய பொருளாதார நெருக்கடிகளின் தாக்கங்களினால் அமெரிக்க மக்கள் உட்பட உலகின் பெரும்பாலான மக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். அதற்கு எதிரான மக்களது போராட்டங்கள் உணர்வுகள் திசை திருப்பப்படுவதும் மாற்றுச் சிந்தனைக்கு இடமின்றி உளுத்துப் போன மேற்கத்தைய முதலாளித்துவ ஜனநாயக முறைமையை தூசுதட்டி மக்கள் மேல் திணிப்பதுமே இன்றைய உலகின் நடைமுறையாகிறது. இவ்விதம் வட ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் கொதி நிலை, திசைதிருப்பச் செய்யப்பட்ட வெகுசனங்களின் போர்க்கோலம் இவற்றில் வெகுசன ஊடகங்களின் வகிபாகம் என்ன?

### விக்கிலீக்ஸ் என்ன செய்கிறது?

விக்கிலீக்ஸ் "தட்டிப் பொறிதான்" விக்கிலீக்ஸ் "வைத்த பொறி" என்று கூறினால் மிகையாகாது. பொது சனங்கள் பார்க்க வேண்டிய ஆவணங்களை வெளியிடுகின்ற உலகளாவிய தகவல் தளமாக wikileaks.org எனும் இணையத்தளம் திகழ்கிறது. விக்கிலீக்ஸ் நூற்றுக் கணக்கான விடயங்களின் கீழான ஆவணங்களை வெளியிட்டுள்ளது. பெருவின் எண்ணெய் ஊழல் விவகாரங்கள், குவான்ரனாமோவில் அமைந்திருக்கும் அமெரிக்க இராணுவ பாதுகாப்புடன் கூடிய சிறைக் கூடத்தின் நடைமுறைகளும் செயற்பாடுகளும் போன்று பல விடயங்களை இது வெளியிட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஒளி ஆவணத்தில் அமெரிக்க இராணுவ உலங்கு வானூர்தி ஈராக்கியப் பொதுமக்கள் மீது 2007 இல் நடத்திய தாக்குதல் உள்ளடங்கியிருந்தது. 2010 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆப்கானிஸ்தான் போர் தொடர்பான 92000 (தொண்ணூற்று இரண்டாயிரம்) ஆவணங்களை இது வெளியிட்டது.

விக்கிலீக்ஸ் வெளியிடும் ஆவணங்களை சில ஆண்டுகளுக்கு முந்தியவையாக உள்ளன. விக்கிலீக்ஸில் அவ்வகையான ஆவணங்கள் உடனுக்குடன் வெளிவருவதில்லை. அதாவது இறந்தகால ஆவணங்களே அவை.

விக்கிலீக்ஸின் மூலம் வெளித் தெரியும் இப்பாரிய செயற்பாடு, இணையத் தளங்களை தமது முக்கிய ஊடகச் செயற்பாடாக நம்பியிருந்தவர்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கத் தொடங்கியது. அவ்வகையான உற்சாகமும் ஒரு போதை நிலையில் ஏற்படும் போலித் தனமான தற்காலிக விகாரம் மட்டுமே.

உலகின் பல நாடுகளிலும் அமெரிக்க தூதரகங்களில் அமெரிக்கத் தூதுவர்களாகப் பணிபுரியும் அல்லது பணிபுரிந்த அமெரிக்கர்கள் அமெரிக்காவுக்கு கடந்த காலத்தில் வழங்கிய தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டு வருகிறது. அமெரிக்கத் தூதுவர்கள் தமது நாட்டுக்கு வழங்கிய தகவல்கள் பல ரகமானவை. முறை சார்ந்த விபரங்கள், உத்தியோக பூர்வ ஆவணங்கள், ஆய்வு அறிக்கைகள், நேர் காணல் குறிப்புக்கள், நிபுணர் நிலை அறிக்கைகள், தூதுவர்களின் நேரடி அவதானிப்பு விபரங்கள், ஊடகவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாளர்களின் அறிக்கைகள் உள் நாடுகளில் இயங்கும் சர்வதேச வியாபாரம் உள்ள அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் அறிக்கைகள், முதலியனவே அவை. அமெரிக்கத் தூதுவர்கள் தாம் பணியாற்றும் நாடுகளின் உள் நாட்டு விடயங்கள், அரசியல், இராஜதந்திர, இராணுவ விடயங்களிலும், இவ் விடயங்கள் தொடர்பில் இந்த நாடுகள் ஏனைய நாடுகளுடன் கொண்டிருக்கின்ற தொடர்புகள் மற்றும் உறவுகள் பற்றியும் மேலே விபரிக்கப்பட்டுள்ள அடிப்படையில் தகவல்களை திரட்டி அமெரிக்காவுக்கு அனுப்புகின்றனர் என்பதை அனைவரும் தெரிந்தும், தெரியாமலும் அல்லது கண்டும் காணாமலும் இருக்கின்றார்கள் என்பது உண்மையே. எனினும் விக்கிலீக்ஸ் இவ் விடயத்தை தெரிந்து கொள்ளவும் கண்டு கொள்ளவும் செய்திருக்கின்றது. பொதுவாகவே அனைத்து நாடுகளின் தூதுவர்களும் தேவை ஏற்படும் போது தாங்களே ஒற்றர்களாக செயற்படுவதும் அன்றேல் தத்தமது தூதரகச் செயற்பாடுகளோடு ஒற்றர்களை இணைத்துக் கொள்வதும் மிக நீண்டகாலமாகவே உள்ள வழமையே. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா, பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகள் இவ் விடயத்தில் தீவிர செயற்பாடுகளை கொண்டிருக்கின்றன என்பதை வரலாறு நிரூபிக்கிறது. விக்கிலீக்ஸ் வல்லரசுகளின் தூதரகங்களின் ஒற்று வேலை ஆவணங்களை வெளியிட்டு வருகிறது. அது மத்திய கிழக்கு நாடுகள், இதைத்தவிர அமெரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் (இலங்கை உட்பட) ஆகியவற்றில் உள்ள அமெரிக்க தூதரகங்களின் தகவல் பரிமாற்ற முறைமைகளுக்குள் திருட்டுத் தனமாக ஊடுருவி தகவல்களையும் ஆவணங்களையும் பிடுங்கியெடுத்து வெளியிடுவதாக அனைவரும் நம்ப வைக்கப்பட்டுள்ளனர்.

விக்கிலீக்ஸின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான யூலியன் அசாஞ்சே

யூலியன் அசாஞ்சே (Julian Assange) 1971 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவின் மாநிலமான குயின்ஸ்லாந்திலே பிறந்தார். விக்கிலீக்ஸின் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவரும் முக்கியமானவரும் தற்பொழுது அதன் பணிப்பாளர் என்று சொல்லப்படுபவராகவும் அசாஞ்சே இருக்கிறார். இவர் கணனிகள் மூலம் பரிமாறப்படும் தகவல்களை திருட்டுத்தனமாக பிடுங்கிச் சேகரிப்பதில் வல்லவர். இவரது இளமைக் காலத் தொழிலாகவும் அதுவே இருந்தது. இவ்வாறானவர்களை *Computer hackers* என்று ஆங்கிலத்தில் கூறுவர். யூலியன் அசாஞ்சே கணனித்துறை கசடறக் கற்றவர். அதிலும் கணனித் தகவல் பரிமாற்ற பாதுகாப்புத் துறை தொடர்பில் நிபுணர். 1991 இல் கணனித் தகவல் திருட்டுக்காக அவுஸ்ரேலியாவில் தண்டப்பணம் செலுத்தி விடுதலையானவர். அசாஞ்சே தனது 18 ஆவது வயதிலே தனது நண்பியுடன் சேர்ந்து ஒரு ஆண் குழந்தையின் தந்தையானார். எனினும் அவர்களுக்கிடையேயான உறவு முறிந்து போனது. கணனி தகவல் வலைப்பின்னல்களின் மூலம் பரிமாறப்படும் ஆவணங்களை திருடிப் பிடுங்கி எடுப்பதில் சமர்த்தரான யூலியன் மீது சுவீடன் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டை தெரிவித்து சுவீடனில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். முதலில் சுவீடனின் நீதித்துறையும் பொலிஸ் துறையும் விசாரணைகளைத் தொடங்கின. பின்னர் கிடப்பில் போட்டுவிட்டன.

இவ்வாறான ஒருகட்டத்தில் விக்கிலீக்ஸ் வெளியிடும் ஆவணங்களின் மூலம் மீண்டும் பிரபலமடைந்தார் அசாஞ்சே. விக்கிலீக்ஸின் வெளியீடுகளால் அமெரிக்க அரசாங்கம் ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தது போன்ற தோற்றமே தெரிந்தது. அசாஞ்சே மீது சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருவதாகவும் வெளிக்காட்டப்பட்டது. அமெரிக்காவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும் அமெரிக்காவுக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்றும் அமெரிக்காவுக்கே அவர் வேலை செய்கிறார் என்றும் ஒரு சாரார் அப்பொழுதே ஐயங்களை வெளியிடத் தொடங்கிவிட்டனர். எனினும் இதுவரை அவ்வாறான தகவல்கள் ஐயங்களாகவும் வதந்திகளாகவுமே இருக்கின்றன. அசாஞ்சே விசிறிகள் பல மில்லியன் கணக்கானோர் அமெரிக்க விசாரணை மூலம் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சினர். வேறு ஏதாவது சதிக்குள் அவர் சிக்கி இறந்து விடுவாரோ என்றும் அவர்கள் பயந்தனர். அமெரிக்கா அசாஞ்சேயுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆராயும் போது அவர் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்து விட்டார்.

அசாஞ்சே அமெரிக்காவின் ஆள் ...?

ஜூலியன் அசாஞ்சேயை ஒப்படைக்கும் படி அமெரிக்கா பிரிட்டனுக்கு கோரவில்லை. எனினும் முன்னைய பாலியல் வன்முறை குற்றச் சாட்டை விசாரிக்க சுவீடனின் நீதித்துறை முயற்சிக்கத் தொடங்கியது. சுவீடனின் நீதித்துறை விசாரணையை தனது சட்டத் தரணிகளின் துணையுடன் ஜூலியன் அசாஞ்சே எதிர் கொள்கிறார். விசாரணைகள் தொடர்கிறது. விசாரணை முடிவில் அசாஞ்சே எதிர் கொள்ளப் போகும் தீர்ப்பையறிந்து அவர் மீது அமெரிக்காவும் விசாரணைகளை ஆரம்பித்து அமெரிக்காவுக்கும் அதன் பாதுகாப்புக்கும் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் விக்கிலீக்ஸ் மூலம் ஆவணங் களை வெளியிட்டமை தொடர்பான குற்றச் சாட்டுக்களை அமெரிக்க நீதி மன்றில் வழக்காக தொடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் தோற்றப்பாடும் இப்பொழுதும் கூட நிலவுகிறது.

எனினும் விக்கிலீக்ஸின் செயற்பாடு களால் உற்சாகமும் உந்துதலும் பெற்ற சமூக ஊடகங்களான இணையத் தளங்கள் blogspots, Face book, Twitter ஆகிய வற்றை பயன்படுத்துவோர் உலகளாவிய ரீதியாகக் காணப்படுகின்றனர். ஆட்சி யதிகாரத்தில் உள்ளோருக்கும் எதிரான அதிருப்திகள் ஆட்சியதிகாரத்தில் உள்ளோரின் ஊழல்கள், முறைகேடுகள், ஏனைய துஷ்பிரயோகங்கள் முதலிய வற்றை வெளியிடும் ஊடகப் பணியை சாதாரணமாக கைத்தொலைபேசிப் பாவனையாளர் மத்தியிலேயே விதைத்து விடுவதில் விக்கிலீக்ஸ் வெற்றி கண்டது. ஏனெனில் ஒரு கையடக்கத் தொலை பேசியூடாகவே படம் பிடித்தல், செய்தி களை அனுப்புதல் Face book, Twitter பயன்பாடுகளை மேற் கொள்ளுதல், இணையத் தளங்களை பார்வையிடுதல் முதலிய சகல சமூக ஊடகச் செயற் பாடுகளும் சாத்தியமாகின்றன.

இவ்வாறான ஒரு கட்டத்தில் மீண்டு கொண்டு பின்வரும் எடு கோள்களுக்கு வரமுடிகிறது.

1) ஜூலியன் அசாஞ்சே பெற்றி ருக்கும் கணனித் தகவல்கள் பரிமாற்ற பாதுகாப்புத் துறை நிபுணத்துவமும் அவரது தனிப்பட்ட வாழ்வு சார்ந்தப்பட்ட திருட்டு குணாம்சமும் அபாரத் துணிச்சலும் பாலியல் பலவீனமும் அமெரிக்காவால் நன்கு பயன் படுத்தப்படுகிறது.

2. ஊருக்கு உபதேசிக்கும் அமெரிக்கர்கள் உலகமே ஊகிக்க முடியாதளவில் சித்திரவதைகளை காட்டி "பேக்கராம் சிறை" ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் தம்மால் மேற் கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதற்கு (ஜூலியன் அசாஞ்சே விக்கிலீக்ஸில் வெளிப்படுத்துவதற்கு) அமெரிக்கா அனுமதித்திருக்கலாம். அசாஞ்சேயுடன் சேர்ந்து திட்டமிட்டோ அல்லது அவரது திருட்டுக்களை தெரிந்து கொண்டு அவரோடு சேர்ந்து திட்டமிடாமலேயே தமது எதிரான நோக்கங்களை எய்துவதற்காக இவற்றை வெளியிடட்டும் என்று தடை ஏற்படுத்தாமல் அமெரிக்கா இருந்திருக்கலாம். மிகப் பாதுகாப்பாக மிக மிக உயர்ந்த தொழினுட்ப ரீதியில் அமெரிக்க இராஜதந்திரிகள் பரிமாறிய தகவல்களை ஜூலியன் அசாஞ்சே "களவுத் திருட்டு" பெற்றுக் கொண்டார் என்று அமெரிக்கா உலகத்திற்கு புலம்புகிறது. அமெரிக்காவுக்குரிய முக்கிய இராஜதந்திர ஆவணங்கள் தகவல் தொடர்பு பாதுகாப்புக் கட்டமைப்பை உடைத்து அசாஞ்சேயால் திருடப்படுவது எவ்வாறு சாத்தியமாகும்?

3. அவரது வெளிப்படைத் தன்மை, நேர்மைத் தன்மை முதலியன எக் கட்டத்திலும் தமக்கு பாதகமாகப் போய்விடக் கூடாது என்பதற்காக அவர் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்களை மீண்டும் விசாரித்து அவருக்கு கடும் உள, பௌதீக அழுத்தங்களை ஏற்படுத்தி அவரைக் கட்டுப்படுத்த அமெரிக்கா திரை மறைவில் செயற்படலாம்.

அவரை பிரிட்டனுக்குள் அனு மதித்து சுவீடன் நாட்டு நீதிமன்ற விசாரணையை அவர் எதிர் கொள்ளக் கூடிய சூழல் ஏற்படுத்தப் பட்டமை தெளிவாகத் தெரிகிறது.

அமெரிக்க ஆதரவு ஊடகங்கள் என்ன செய்கின்றன?


பிரிட்டனின் முன்னணிப் பத்திரி கைகளும் அமெரிக்காவின் முன்னணிப் பத்திரிகைகளும் விக்கிலீக்ஸில் வெளிவரும் தகவல்களையும் ஆவணங்களையும் அந்தப் படியே விக்கிலீக்ஸை ஆதாரமாகத் தெரி வித்து வெளியிடுகின்றன. அவை உண்மை யில் ஆவணக் கோவையாக, தகவல் மூலங்களாகவே வெளிவருகிறது. விக்கி லீக்ஸ் கூறுவது உண்மையோ என்பதை வேறு ஒரு மூலங்கள் வாயிலாக

மொரோக்கோ, லெபனான், மவுரிடானியா (Mauritania), குவைத், சவுதி அரேபியா, சூடான், மேற்கு சஹாரா ஆகிய நாடுகளில் மக்கள் கிளர்ச்சிகள் நடைபெறுகிறது பற்றியும் அந்நாடுகளின் மக்கள் அந் நாட்டுப் படைகளால் கொல்லப்படுவதையும் அவர்களது மனித உரிமைகள் மீறப்படுவதையும் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் பெரிது படுத்தவில்லை. அமெரிக்காவுக்கு ஆதரவாக உள்ள நாடுகளில் மக்கள் கிளர்ச்சிகளை தணித்து விடும் நோக்கமே அமெரிக்க கூட்டுக்கு இருக்கிறது. எனினும் இடையிடையே இந் நாடுகளையிட்டும் கண்டனங்களையும் வெளியிடுகிறார்கள். அத்துடன் இந் நாடுகளின் அரச தலைவர்களில் பலர் அமெரிக்காவின் சொல்வழி கேட்கக் கூடியவர்களாகவும் உள்ளனர். அவர்களில் சிலர் பதவி துறப்பதும் அன்றேல் தங்கள் நாடுகளுக்கு அமெரிக்கா ஏற்றுமதி செய்ய விரும்பும் "ஜனநாயகத்தை" வரி விதிப்புக்கள் ஏதுமின்றி இறக்குமதி செய்யவும் தயாராக இருப்பதனால் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய கூட்டாளிகளும் அந் நாடுகளில் ஆட்சியாளர்கள்தான், ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் போர்க் களங்களை திறப்பித்தது போல செயற்பட விரும்ப வில்லை

ஜனநாயகத்தின் மனித உரிமைகளின் பேரால் அமெரிக்காவும் அதன் பேர்குலகைக்குக் கூட்டாளிகளும் இரண்டு பிரதான விடயங்களை நிறைவேற்ற முனைகின்றனர். எனினும் பிரான்ஸ் சில தருணங்களில் ஒட்டியும் ஒட்டாமலும் மிறபகர்தும் முனையலாம். ஆனால் இறுதியில் மேற்கு ஐரோப்பிய யூரோ வலய பொருளாதார நலன்களை பிரான்ஸ் காப்பாற்றியே தீரும்.

அவ்விரு பிரதான விடயங்களும் வை

1) வட ஆபிரிக்க நாடுகளினதும் மத்திய கிழக்கு நாடுகளினதும் வளங்களை முழுமையாக கட்டுப்படுத்தி முகாமைத் துவம் செய்து காணிகரம் செய்வதே அமெரிக்க நாட்டின் நிலையான கொள்கை. தற்போது உலகப் பொருளாதார நெருக்கடிக்குள் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சிக்கியுள்ளன. யூரோ வலயம் பொருளாதார மந்த நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியில் சக்தி வளப் பற்றாக்குறை மிக 'கரைச்சலான' விடயமாக இந் நாடுகளின் கைத்தொழில்த்துறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றுக்கு உள்ளது. வேலையிழந்தோர், தொழில் வாய்ப்பு அற்றோர் ஆகியோரின் தொகை இந் நாடுகளில் பல பல மில்லியன்களாகி விட்டது. மக்களின் நலன் குறைப்புத் திட்டங்களை முன் வைத்து பொருளாதாரச் சிக்கல்களை தீர்த்து வைக்க இந் நாடுகள் முனைந்து நிற்கின்றன. இவ்வாறான நலன் குறைப்புத் திட்டங்கள் தொடர்பில் மக்கள் சமூகங்கள் அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டுள்ளன. தீவிர ஆர்ப்பாட்டங்களும் மேற்கு நாடுகளில் நடக்கின்றன. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பல வாரங்களாக மக்கள் குளிரிலும் கூடாரங்கள் அமைத்தும் இரவு பகலாக தங்கி நின்று அமெரிக்க அரசின் பொருளாதாரக் கொள்கைகள், ஊழல்கள், மோசடிகள் முதலியவற்றுக்கு எதிராகவும் வேலை யிழப்பு, வேலையின்மை முதலியவற்றுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை தொடர்ந் தனர். நியூயோர்க் "வோல் ஸ்ட்றீட்" (Wall Street) போராட்டம் என்று விபரிக்கப்படும் இப்



போராட்டத்தை பலவந்தமாக நசுக்க நியூயோர்க் மாநகர முதல்வரும், நியூயோர்க் பொலிஸ் ஆணையாளரும் தீர்மானித்தார் என பி.பி.ஸி சி.என்.என் ஆகிய தொலைக்காட்சிகள் அறிவித்தன. போராட்டத்தில் ஈடுபட்ட அமெரிக்கர்களை அமெரிக்க பொலிஸார் அடித்து விரட்டினர். பலரைக் கைது செய்தனர். இது தொடர்பாக அமெரிக்க மக்கள் கோபமடைந்துள்ளனர். இவ் விடயம் மேற்கு நாட்டு ஊடகங்களாலும் அமெரிக்க ஊடகங்களாலும் பட்டும் படாமலும் அறிக்கையிடப்படுகிறது. இச் சூழலில் அமெரிக்காவும் பிரிட்டனும் வெளிநாட்டுப் போர்களுக்காக ஒதுக்கும் தொகையை ஏன் தமது மக்களின் நலன் மேம்பாட்டுத் திட்டங்களிலிருந்து வெட்டியும் குறைத்தும் பெற வேண்டும்? வெளி நாடுகளில் உள்ள வளங்களை பயன்படுத்தியே அங்கு போர்களை நடத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்த இப் பத்திரிகைகள் ஒரு போதுமே முனையவில்லை. இப் பத்திரிகைகளின் வாசகர்கள் விக்கிலீக்ஸ் கூறுவதை அப்படியே விழுங்க வேண்டும் என்று அவ்வூடகங்கள் எதிர்பார்க்கின்றன. விக்கிலீக்ஸை ஒரு பகவத் கீதையாக, பைபிளாக, திருக்குரானாக உள் நாடுகளில் உள்ள ஊடகங்களும் கூறும் அபத்தமான ஊடகச் சூழலே காணப்படுகிறது. உண்மையில் விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்களில் அதாவது அமெரிக்க இராஜதந்திரிகள் பரிமாறிய ஆவணங்கள் என்று பெயரிட்டு விக்கிலீக்ஸ் வெளியிடும் "தகவல் குப்பைக் குவியலை" கிளறக்கிளற அது நாறுகிறது. அதற்குள் பொய்ப்புழுக்கள் துடிக்கின்றன. இந் நிலையில் அமெரிக்க, பிரித்தானிய தொலைக் காட்சிகளும் வானொலிகளும் கூட விக்கிலீக்ஸின் வெளியீடுகளை தேவாமிர்தமாக விழுங்குமாறு தங்கள் நேயர்களுக்கு திணிப்புச் செய்கின்றன. அமெரிக்க ஆதரவு இணையதளங்களும் விக்கிலீக்ஸ் தகவல்களுக்கு முழுமையாகவே தம்மை அர்ப்பணம் செய்து விட்டன.

**அமெரிக்க ஊடக ஏகாதிபத்தியத்தை வெறுக்கும் ஊடகங்கள் என்ன செய்கின்றன?**

அமெரிக்க ஆதரவு ஊடகங்கள் எதைச் செய்கிறதோ அதையே அமெரிக்க ஊடக ஏகாதிபத்தியத்தை வெறுக்கும் பல ஊடகங்களும் விக்கிலீக்ஸ் விடயத்தில் மேற் கொள்கின்றன. RT எனப்படும் ரஷ்ய தொலைக்காட்சி பெருமளவுக்கு விக்கிலீக்ஸ் தகவல்களை அப்படியே ஆரம்பத்தில் வெளியிட்டன. ஆயினும் யூலியன் அசாஞ்சே மற்றும் அவருடன் ஆரம்பத்தில் இணைந்து செயற்பட்ட அவரது தோழர்கள் அசாஞ்சேயுடன் முரண்பட்டு விலகத் தொடங்கிய நாடகங்கள் முதலியவற்றை RT ஆழமாக வெளியிடத் தொடங்கியது அதன் மூலம் RT மறைமுகமாக சில உண்மைகளை சொல்லாமல் சொல்ல முனைந்தது போலிருந்தது.

எனினும் மாற்று ஊடகங்கள் கூட விக்கிலீக்ஸ் பற்றியும் மற்றும் யூலியன் அசாஞ்சே எனும் "கனவான்" பற்றியும் உறக்கத்தில் கூட ஒரு கெட்ட கனவையும் காணவில்லை. கண்டாலும் துணிந்து எவ்வாறு இக் கட்டுரை முன் வைக்க முனையும் எடுகோள்களை முன் வைப்பது? இக் கட்டுரை முன் வைத்திருக்கும் எடுகோள்களை உலக சமுதாயங்கள் என்று களங்களில் நடைபெறும் விளையாட்டுக்களை உன்னிப்பாக அவதானித்தால் உண்மையின் திசை துலங்கும்.

**மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க நாடுகளின் மக்கள் கிளர்ச்சிகள் தூண்டப்பட்டவை தான்**

மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க நாடுகளின் மக்கள் கிளர்ச்சிகள் ரியூனிசியா, எகிப்து, லிபியா, ஆகிய நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புக்கள், படு கொலைகள், பேரழிவுகள் ஆகியவற்றுடன் தொடர்ந்தன. சிரியாவில் இடம் பெறும் மக்கள் கிளர்ச்சிகளை சிரிய ஆட்சியாளர்கள் பாரியளவான மனித உரிமை மீறலோடு ஒடுக்குகின்றனர் என்று அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தீவிரமாகக் கண்டிக்கின்றன. பிரான்சும் அவ்வாறே தீவிரமாகக் கண்டிக்கிறது. ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளும் மிதமாகக் கண்டிக்கின்றன. ஐ.நா.வும் வழமை போலக் கண்டிக்கிறது. சிரியாவுக்கு எதிரான ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானத்தை தமது வீட்டோ அதிகாரத்தின் மூலம் இரத்துச் செய்து விட்டன ரஷ்யாவும் சீனாவும். ஈரானிலும் கிளர்ச்சிகள் தூண்டப்படுவதற்கான சூழ் நிலைகள் தோன்றி மறைகின்றன. ரியூனிசிய மக்களும், எகிப்து மக்களும் லிபிய மக்களும் வெளிநாட்டவர்களின் உதவியைப் பெற்று ஜனநாயக விரோத ஆட்சிகளை முடிவுக்குக் கொண்டு வந்தது போல ஈரான் மக்களும் செயற்பட்டால் நல்லது என்று சீமாட்டி ஹிலாரி கிளின்ரன் ஈரானியர்களுக்கு அறிவுரை கூடச் சொல்லத் தொடங்கியிருக்கிறார்.

சிரியாவிலும், ஈரானிலும் மக்கள் கிளர்ச்சிகளைத் தூண்டவே அமெரிக்கா கங்கணம் கட்டி நிற்கிறது. உடன் நடைபெறா விட்டாலும் காலம் கனியும் என்று அமெரிக்காவும், பிரிட்டனும் எதிர்பார்க்கின்றன. பிரான்சும் அமெரிக்கா வுக்கும் பிரிட்டனுக்கும் நட்பாக இவ் விவகாரத்தில் இருக்கலாம். சிரிய அரச படைக்குள் உட்பிளவு ஏற்பட்டுள்ளது சிரிய அரச தலைமைக்கு எதிராக கிளர்ச்சிகள் ஈடுபடுவதற்கு பதினையாயிரம் சிரியப் படைவீரர்கள் தயாராகியுள்ளதாக பி.பி.ஸி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் பஹ்ரைன், யெமன் (Yemen), அல்ஜீரியா, ஜோர்தான், ஓமான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அதே வேளை செலவுக்கு அப்பால் பன்மடங்கு வளங்களை சுரண்டவும் வாய்ப்புக் கிட்டும். அமெரிக்க, மேற்குலகப் பாதுகாப்பும் ஸ்திரப்படுத்தப்படும். இதுவே இந்த வல்லரசுகளின் அடிப்படையான மூல உபாயம். இவ்வாறான வல்லரசுகளின் மக்கள் சமூகங்கள் அதிகரித்த வேகத்தில் செய்யும் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புப் போராட்டங்களும் அந்த மக்கள் சமூகங்களின் நீதியான கோஷங்கள் என்ற அடிப்படையில் வேறு வேறு பரிமாணங்களில் பார்க்கப்பட்டாலும் உண்மையில் வெளி நாடுகளின் வளங்களையும் இறைமையையும் தமது ஏக போக ஆளுமைக்குள் வர்த்தக நடவடிக்கைகளுக்குள் கொண்டு வந்து தமது மக்களின் திருப்தியை பாதுகாக்கவே வகை செய்யும்.

2) தமது வளச் சுரண்டலுக்கு எதிராக எழக் கூடிய தேசிய வாதங்களையும் மத வாதங்களையும் அழித்தொழிப்பது. இவ் வல்லரசுகளின் அடுத்த நோக்கம். எனினும் வளச் சுரண்டலுக்கான அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை ஆதரிக்கும் தேசிய வாதங்களும் மத வாதங்களும் தப்பிப் பிழைக்க விடப்படுகின்றன. மத்திய கிழக்கில் அரபிய தேசிய வாதத்தைக் கட்டியெழுப்ப முனைந்த சதாம் ஹுசைன் "கனகச்சிதமாக" முறைப்படி தூக்கில் விடப்பட்டார். அகண்ட ஆபிரிக்க வல்லரசு ஒன்றை ஸ்தாபிக்க கனவு கண்ட லிபியத் தலைவர் கேணல் கடாபி கொல்லப்பட்டார். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வியாபகப் படுத்தி எழுச்சி கொள்ள செய்ய முனைந்து நின்ற ஒஸாமா பின்லேடன் முன்னரேயே அழிக்கப்பட்டார். எனினும் பஹ்ரைன், யேமன், ஜோர்தான், மொரொக்கோ, ஓமான், குவைத், சவுதி அரேபியா முதலிய நாடுகளில் அமெரிக்க கூட்டாளிகளுக்கு நிலைமை சாதகமாக உள்ளது. அந் நாடுகளின் ஆட்சியாளர்கள் "சொல்வழி" கேட்கிறார்கள்

அமெரிக்க கூட்டாளிகளுக்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன.

1) எண்ணெய்த் தாகத்தை தீர்த்தல்

2) தடையாக இருக்கக்கூடிய பல்வேறுபட்ட "வாதங்களையும்" வாதக்காரர்களையும்" அகற்றுதல் அல்லது அழித்தல்

தமது நோக்கங்களுக்கு சமூக ஊடகங்களின் பரவு திறனையும் சுவாரஸ்யத் தன்மையையும் நன்கு பயன்படுத்தும் அமெரிக்க கூட்டாளிகள்

அட! அமெரிக்காவையே புலியன் அசாஞ்சே திட்டியும் சொரியும் பார்ப்பதற்கு சமூக ஊடகமான விக்கிலீக்ஸை பயன் படுத்துகிற என்ற ஒரு மாயத் தோற்றம் நிலவிக் கொண்டிருக்கும் சூழலில் தான் வட ஆபிரிக்காவின் நுனியில் ஐரோப்பாவுக்கும் லிபியாவுக்கும் எல்லை நாடாக இருந்த ரியூனிசியா என்ற நாட்டில் மக்கள் கிளர்ச்சி தூண்டப்பட்டது. ரியூனிசியாவின் அனைத்து மக்களிடமும் இருந்த கைத்தொலை பேசிகளும் சமூக ஊடகங்களான டுவிட்டர், ஃபேஸ்புக் முதலியனவும் கிளர்ச்சிக்கான தூண்டுதலுக்காக பயன்படத் தொடங்கின.


சில நிமிடங்களில் மில்லியன் கணக்கான மக்களுக்கு செய்திகள் பரவின. ஆர்ப்பாட்டங்களும் அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இடம், காலம் முதலியன பிசகாமல் இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டனர். உடனுக்குடன் தமது ஆர்ப்பாட்டங்களின் விளைவுகளை சமூக ஊடகங்கள் மூலம் தத்தமது அயல் நாடுகள் உள்ளிட்ட சர்வ உலகுக்கும் பரப்பினர். இக் கிளர்ச்சி களுக்கு "Arab Spring" என்றும் பி.பி.சி (B.B.C) சி.என்.என் (C.N.N) ஆகிய தொலைக் காட்சிகள் பெயரிட்டு சமூக ஊடகங்களில் வெளிவரும் விடயங்களுடன் தமது நேரடி ஒளிபரப்பை ஆர்ப்பாட்டக் களங்களிலிருந்து இரவு பகலாக மேற் கொண்டனர். ரியூனிசியாவின் தூண்டல்கள் எகிப்திலும் தீயெனப் பரவியது. ஆட்சிகள் கவிழ்ந்தன. லிபியாவிலும் சமூக ஊடகச் செயற் பாடுகளே கிழக்கு லிபியர்களை ஆரம்பக் கட்டத்தில் கேணல் கடாபி ஆட்சிக்கு எதிராக அணி திரட்டியிருந்தது. சிரியாவிலும் ஈரானிலும் சமூக ஊடகச் செயற்பாடுகளுக்கான தூண்டுதல்களை "ஜனநாயகம்" மற்றும் "மனித உரிமைக் காவலர்கள்" மேற் கொள்ள முனைகின்றனர். Digital Democracy, Online Democracy என்ற பதங்கள் கூட அமெரிக்க மேற்குலகக் கூட்டாளி ஊடக வியலாளர்களால் ஆங்கில மொழியின் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளன.

இப் பொழுதும் கூட அமாவாசை இருட்டுக்குள் ஒரு கண்டங்கறுப்புப் பூனையாக புலியன் அசாஞ்சே எமது "மாலைக் கண்ணோட்டத்துக்கு" தேடிப்பார்த்தாலும் தெரியாத வராக இருப்பார்

எனினும் சிறு வெளிச்சமாயினும் வெள்ளைக் கறுவலை தேடிப் பார்க்க கிடைக்கும் வரை எல்லாம் எடுகோள்களே?

# தவிப்பு

- அமரபாரதி சி. உதயகுமார் -



சாந்தியின் மகளுக்கு வயது இருபது இருக்கும். அடுத்த மாதம் பதினாறாம் திகதி அவளுக்குக் கல்யாணம். அதற்கான ஆயத்தங்கள் அவ்வீட்டில் நடந்து வண்ணம் இருந்தன.

சங்கக் கடையில் நாலைந்து பெண்கள் இதைச் சொல்லிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கதைக்கும் கதைகளைக் கேட்டபடி, சீட்டை போட்டு கணக்குக் கூட்டிக்கொண்டிருந்தேன் நான்!

சாந்தியும் நானும் பாலர் வகுப்பு முதல் உயர்தரம் வரை ஒன்றாகவே படித்தனாங்கள். என் பள்ளிக்கால அன்பான தோழிகளில் சாந்தியும் ஒருத்தி. சாந்தி என் இணை பிரியாத நண்பி.

ஆனாலும் சாந்தி என்னைப் போல ஏழை அல்லள். அவள் ஒரு பணக்காரி! எங்கள் ஊரின் பெரும் புள்ளிகளில் சாந்தியின் அப்பாவும் ஒருவர். அவர் செய்யும் தொழிலால் அவரிடம் பணம் நல்லாகவே புரண்டோடியது. அதனால் சாந்தியிடமும் பணம் நிறையவே புரண்டு விளையாடியது.

என் அம்மா, அப்பாவிற்கு ஒரே ஒரு பிள்ளை நான். அப்பா சாதாரண ஒரு கூலித் தொழிலாளி. அப்பா, வேலைக்குப் போய் வந்தால் மாத்திரமே எங்கள் மூவருக்கும் உணவு கிடைக்கும். இல்லையேல் அடுத்த நாளின் முக்காலாசிப் பொழுதும் பட்டினி தான்.

ஏழையின் மறுவடிவம் என்றால் அது எங்கள் குடும்பம்தான்! அப்பா செய்யும் கூலி வேலையினால் கிடைக்கும் பணம் போதுமையாக இருந்தது. குடும்பம் என்கிற சக்கர நாற்காலி இழுகி நிற்பதும், பின்னர் ஊர்ந்து நகர்வதாகவும் இருந்தது.

அம்மாவினதும் அப்பாவினதும் அப்பாவித் தனங்களை வைத்துக் கொண்டு அழகை முகர்ந்து விடலாம் என்று எத்தனை பேர் அலைந்து, உலைந்திருப்பார்கள்.

'மாதங்கி நீங்கள் சேற்றில் மலர்ந்த செங்கமலம்! உங்களைப் பார்த்துவிட்டு ஒரு காரியத்திற்குப் போனால், அன்றைய பொழுது இன்பமான பொழுதாகத் தான் இருக்கும்' என்று எங்கள் வகுப்பு மாணவர்கள் ஒரு சிலர் இப்படி அளவளாவுவர். இவை போன்ற வார்த்தைகளை என் மனது ஏகமனதாக ஏற்கும். அதன் விளைவாக நானும் சில புன்னகைகளை வெளித்தள்ளிச் சிரிப்பேன்!

எங்கள் வகுப்பில் அவர்களுக்கு என் மீதே ஒரு கண்! என்னோடு ஒரு நாளைக்கு ஒரு தடவை என்றாலும் கதைக்க என்று வருவார்கள். வலியக் கதை கேட்பார்கள். அவை ஏதோ தயார்படுத்தி வைத்திருந்தது போலவே இருக்கும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயம் பற்றிக் கதைப்பார்கள். அவர்கள் கதைக்கும் கதைகள் இடையே அழகாகச் சிரிப்பார்கள். பதிலுக்கு நானும் சிரிப்பேன்.

'கெமின்ரி கொப்பி தாங்கோ! பிசிக்ஸ் கொப்பி தாங்கோ!' என்றுதான் ஆரம்பத்தில் உரையாடுவார்கள். இன்று என் முக அழகையும், உடல் அழகையும் வர்ணித்து, நல்லாக வெள்ளுவிட்டு, வழிந்து கதைப்பதை நானும் கவனிக்கத் தவறுவதில்லை. இந்த மாதிரியான நேரங்களில் எல்லாம், சாந்தியின் புத்திமதிகளும் எனக்குள் இணைந்து பாதுகாப்புச் செய்தன.

சாந்தி ஒரு அமைதியான அடக்கமான பெண்! எப்போதும் நற்பண்புள்ளவள் அவள்! நல்ல குணமுள்ள இனிமையான தோழி அவள்! தான் ஒரு பணக்காரி என்ற திமிர் எப்பவும் அவளிடம் இருந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் எங்கள் இருவரினதும் மனதும் ஒருவரைக் கொருவர் ஒருங்கிப்போயின. எங்கள் பழக்க வழக்கங்களில் வஞ்சகம் என்பது துளியளவும் இல்லை என்றே சொல்லலாம்.

சாந்தி பத்தொன்பதாவது வயதில் திருமணம் செய்தவள்! அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் அப்படியொரு விழாவைக் கண்டிருக்கவே முடியாது. மிகவும் டாம்பீகமாக நடந்து முடிந்த வைபவம் அது. சாந்தியின் அப்பா பணக்காரர் மட்டும் புள்ளிகளில் முதன்மையானவர் என்பதை அவ்விழா எடுத்தியம்பியிருந்தது.

சாந்தியின் கல்யாண வைபவத்திற்காக சாந்தியோடு ஓடி அடி நானும் அலுவல்களை முடித்துக்கொடுத்தனான். எங்களோடு படித்தவர்களுக்கும், எங்களுக்குப் படிப்பித்தவர்களுக்கும் சாந்தியே அழைப்பிதழ் கொண்டு போய்க் கொடுத்தாள். அவளுடன் நானும் சென்றேன். அது எங்களுக்கொரு புது அனுபவமாகவும் இருந்தது.

எங்கள் வயதுப் பிள்ளைகளுக்குக் கல்யாணம் நடந்தால் எங்களுக்கும் பேரானந்தம் பிறக்கும்! ஏனென்றால், அடுத்து கல்யாணம் எங்களுக்கும் நடக்கலாம் என்ற ஆர்வமும்! ஆசையும்தான் அந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

இன்று சாந்தியின் மகளுக்குக் கல்யாணம்! அந்தளவுக்குக் காலங்கள் வெகு வேகமாக உருண்டோடி விட்டன. அழகும், மற்றவர்கள் விரும்பி ரசிக்கக் கூடிய கவர்ச்சியும் என்னிடமும் இருக்கின்றன. இருந்தும் கல்யாணம் ஆகாமலேயே இன்றுவரை வாழ்ந்து வருகின்றேன்.

என்னொத்த பிள்ளைகள் கல்யாணம் செய்து பிள்ளை குட்டிகளோடு வாழ்கிறதையும், என் வாழாமையினையும் கண்டு எனக்காக அம்மா அழுதிருக்கிறார். அந்த அழுகை அம்மாவிற்கு ஓரளவு ஆறுதல் கொடுத்ததே தவிர அம்மாவை ஆரோக்கியப்படுத்தவில்லை. இதனால் நாளடைவில் கடுமையான நோய் வந்து அம்மா இறந்து போனார். அம்மாவின் இழப்பினால் என் மன அழுத்தம் இன்னும் இறுகி என்னுள் துன்பத்தை வளர்த்திருந்தது.

அம்மா இறந்து ஐந்து ஆண்டுகளைக் கடந்து ஓடிவிட்டன. அம்மாவைப் போல் எத்தனை தாய் உள்ளங்கள் வயதுக்கு வந்த குமருகளை வைத்திருந்து இறந்திருக்களோ தெரியாது. அது அவர்களுக்கு மடியில் நெருப்புத்தணலை கட்டிக் கொண்டு உலாவுவதற்குச் சமமாகவே இருந்திருக்கும்! என்றுதான் நான் நினைப்பதுண்டு.

இன்று தள்ளாத வயதிலும் என் அப்பா உழைத்துக் கொண்டுதான் இருந்தவர். அப்பாவின் உடல் நிலைகண்டு வேலைக்குப் போகாதபடி மறித்துப் போட்டன். நான் மட்டும் சங்கக்கடை மனேச்சராக இருந்து, வீட்டுப் பணிவிடைகளையும் செய்து காலம் கடத்தும் கன்னியாகவே வாழ்ந்து வருகின்றேன்.

□□□

ஒரு நாள் எனக்கொரு வரன் கிடைத்தார்! அவர் ஒரு அழகன்! எனக்காக அவர் காத்திருந்தவர் போலவே இருந்தார்! அமைதியான சுபாவம் அவருக்கு!

சாதகம் பார்த்து, குறித்த நாளில் கல்யாண நாளும் வந்தது. யாருமே நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு விழா சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. கல்யாணச் செலவுகள் அத்தனையினையும் மாப்பிள்ளை வீட்டாரே பொறுப்பெடுத்திருந்தனர். கல்யாண விழா அவர்கள் திட்டப்படியே நடந்து கொண்டிருந்தது.

மாப்பிள்ளை லண்டனில் இருந்து வந்தவராம்! தன் நான்கு சகோதரிகளையும் கரை சேர்க்கும் வரை கல்யாணம் ஆகாமல் இருந்தவராம்!

'எனக்கென ஏற்கனவே பிறந்தவர் இவரோ! என்று சொல்லுமளவு. அப்படித்தான் இவரும் என்னைக் கரம் பிடிக்க வந்தார் போலும்! தங்கமான மாப்பிள்ளை என்று எல்லோராலும் புகழப்பட்டவர்! அப்படியான ஒருவரே இன்று என்னைக் கரம் பிடிக்கப் போகிறார்! இப்ப, கல்யாண மேடையில் என்னருகில் அமர்ந்திருக்கிறார்.

ஐயர் மந்திரம் ஓதி...! ஓதி...! எங்களையும் இயக்கிக் கொண்டிருந்தார். ஐயரின் தாளத்திற்கு நாமும் ஆடிக் கொண்டுதான் இருந்தோம். அந்த ஆட்டம் ஒரு வகையில் மனதை ஆனந்தப்படுத்தியது.

மாப்பிள்ளை எனக்கு நெற்றியில் குங்குமப் பொட்டிட்டார். ஐயர் தந்த மாலையை மருகத் தந்தார். என் கழுத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை அணிந்தார். நானும் அவருக்கு மாலை அணிந்தேன்!

இடையிடையில் என் கன்னம் தடவி விழுந்திருந்த ஒலிம்பிக் வளையங்கள் போன்ற கேசத்தினை தன் கையால் ஒதுக்கிக் கொண்டார். இதனால் என்னைத் தொட்டுவிட வேண்டும் என்ற அவரின் அந்த ஆவல் கன கச்சிதமாக நிறைவேறியிருக்க வேண்டும். அதிலும் அவருக்கு ஒரு மகிழ்ச்சி! என்னைப் பார்த்துப் புன்னகைக்கிறார்.

இந்த மாதிரியாக அவர் என்னைத் தொடும் போதெல்லாம் எனக்குள்ளும் ஒரு புத்துணர்வு தோன்றி மறையவே செய்தது. அது என்னவென்று என்னால் சொல்ல முடியாமல் இருக்கிறது. அது எனக்கு புதுமையானதாகவும் பிடித்தமானதாகவும் இருந்தது.

இப்ப அவர் கரம் பிடித்து அக்கினிக் குண்டத்தைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தேன். சபையில் உள்ளோரும் என்னைப் பற்றிக் கதைப்பதாகவே நானும் உணர்கிறேன்.

'மாதங்கி அக்காவின் அமைதிக்கும், நல்ல குணத்திற்கும் கேற்ற மாப்பிள்ளை கிடைச்சிருக்கிறார்' என்று பலர் கதைப்பதாகவே என் காதுகள் உணர்கின்றன. வறுமையிலும் பார்க்க நான் நல்ல அழகாயும் இருக்கிறேனாம்!

குடும்பம் குடும்பமாக போட்டோ எடுக்கிறார்கள். வீடியோக்காரனின் தொல்லை! ஐயோ கடவுளே! அது என்னவென்று சொல்லி மாளாது தொல்லை என்றால் பெரும் தொல்லை.

'மாப்பிள்ளையின் தோளில் சாயுங்க!' என்கிறான். 'மாப்பிள்ளைக்கு முன் நில்லுங்க!' என்கிறார். மாப்பிள்ளையின் கன்ன ஓரம் என் கன்னத்தை மெதுவாக தொடுங்க' என்கிறான். 'இருவரும் சேர்ந்து ஸ்மைல் பண்ணுங்க!' என்கிறான். இப்படியே வீடியோக்காரனின் அத்து மீறிய நடவடிக்கைகள் என்னைத் துவம்சம் செய்தன.

நான் அவருடன் சேர்ந்து வந்து காரில் ஏறுகிறேன். காருக்குள் ஏறி அமர்ந்ததும் என் கரங்களை அவர் அழுத்திப் பிடிக்கிறார். மனது இதமாய் இனித்தது.

'இவர் எனக்குக் கிடைத்த ஒரு புதையல்!'

'இவரை நான் இன்று போல் என்றும் அன்பாக அரவணைக்க வேண்டும்!'


ஷ அவருக்கு ஆதரவாக எப்பவும் நடந்து கொள்ள வேண்டும்!

'என்னிடம் குறை என்பது இல்லை எனும்படியாக அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும்' என்றெல்லாம் என் நினைவலைகள் அவருக்காக கற்பனையில் மிதக்கின்றன. அவை உள்ளுறைந்து என் மனதை இனிப்பூட்டிச் செல்கின்றன.

இதற்கிடையினில், என்னை யாரோ எழுப்புவதாக உணர்கிறேன். ஆம்! இன்று அதிக நேரமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறேன் நான்! அம் அப்பாதான் என்னை எழுப்புகிறார்!

'அப்பா! என்னை எழுப்பாதீர்கள்! இன்னும் கொஞ்ச நேரம் தூங்க விடுங்கள்! நான் மிக நல்ல மகிழ்வாக இருக்கிறேன்! என் சந்தோசத்தைக் குழப்பி விடாதீர்கள்!' என்று சொல்லிவிட என் மனம் நினைக்கிறது. அப்படியிருந்தும் படுக்கையிலிருந்து படக்கென்று எழுந்துவிடுகிறேன். இன்று சாந்தியின் மகளுக்குக் கல்யாணம் என்ற உணர்வு நிலை என்னைத் துரத்தி வந்தது.

இன்று பகல் 11 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தில் சாந்தியின் மகளுக்குத் தாலிகட்டு வைபவம்! அங்கு போவதற்கான ஆயத்தங்களில் மெல்ல மெல்ல ஈடுபடுகின்றேன் நான்.



நூல் : நீங்களும் எழுதலாம் கவிதைகள்
ஆசிரியர் : த.ஜெயபாலசிங்கம்
வெளியீடு : "நீங்களும் எழுதலாம்"
103/1, திருமால் வீதி,
திருகோணமலை
விலை : 25/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள் இன்றும் உதிர்கின்றன

- க.சுரேந்திரகுமார் -

"நேற்றைய தினம் கே.கே.எஸ் வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளைஞர்கள் இருவர் ஸ்தலத்திலேயே பலியாகினர். லொறி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டவேளையிலேயே இந்த விபத்து இடம் பெற்றதாக அறியப்படுகிறது. யாழ் நகரில் சமீப காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. சாரதிகளின் கவனயீனமும் மோசமான வீதிகளுமே இத்தகைய விபத்துக் களுக்குக் காரணமாகும்"

–செய்தி



இன்று 30ஆம் திகதி. மாதக்கடைசி நாள்... சிவாவின் கையில் இந்த மாதச்சம்பளம். இன்றுடன் வேலைக்குச் சேர்ந்து இரண்டு வருடங்களாகிவிட்டது. அவன் காசைக் கையில் இருக்கும்போது தண்ணிபோலச் செலவழிப்பவன் அல்ல. அதேநேரத்தில் கஞ்சனாகவும் இருப்பவனு மில்லை. இந்த நிமிடம் அவன் கையில் இருக்கும் பணம் அவனின் குறிக்கோள் ஒன்றை நிறைவேற்றுவதற்காக ஒரு வருடமாக சேர்த்துக் கொண்டிருக்கும் பணத்துடன் சேர்ந்து கொள்ளப் போகிறது. வேலைக்கு சேர்ந்த நாளில் இருந்தே அந்தக் கனவு அவனுக்குள் முளைவிட்டுவிட்டது. அவனைப் போன்ற நடுத்தர வயது இளைஞர்களின் முதல் இலட்சியம் 'பைக்' வாங்குவதாகவே இருக்கிறது. இணுவில் அவன் வசிக்கும் ஊர். யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் விற்பனை முகவர் ஆகப் பணிபுரிகின்றான். தினம் பஸ்ஸில் பயணம் செய்கின்றான். யாழ்ப்பாணத்தை நோக்கி பஸ்கள் காலையில் மக்களை அடைந்து கொண்டு ஊர்ந்தபடி போகும். பல சமயங்களில் அவைகள் தரிப்புகளில் நிற்பதில்லை.அதனாலே அவனது பயணம் தாமதித்து நிறுவனத்தில் பிந்திய வருகை என்று தண்டமாய் சம்பளத்தில் வெட்டு வார்கள். அவனிற்கு வயிறு பற்றி எரியும்.

சக ஊழியர்கள் அனைவரும் விதம்விதமாய் பைக்கில் மடிப்புக் கலையாத சேட்டுடன் வந்திறங்கும்போது இவன் மட்டும் வேர்த்து விறுவிறுத்து கசங்கிய பூனைப் போலக் களைத்திருந்தான். சக ஊழியர் தாழ்வு மனப்பான்மையால் போகசங்கிப் போனான். போன மாசம் வேலையில் இணைந்து கொண்ட ஒரு பொன்பிள்ளை ஸ்கூட்டியில் வந்திறங்கினாள். இரண்டு வருடமாக வேலை செய்யும் அவனும் பைக் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான்.

வீட்டிலும் கேட்ட உடனே பைக் வாங்கித்தரும் அளவிற்கு அவனது பெற்றோர்கள் வசதியானவர்களில்லை. கம்பனியில் லோன் வசதி எல்லாம் கொடுத்தும் கூட சொந்தக் காசில் கடன்படாமல் ஒரு பைக் வாங்க வேண்டும் என்பதே அவனது இலட்சியமாக இருந்தது. அதனை மானசீகமாக ஏற்றுக்கொண்டு மாதாமாதம் அவனது சம்பளப்பணத்தில் ஒரு தொகையை வங்கியில் வைப்பிலிட்டுக் கொண்டு வருகிறான். இன்றுடன் அவனது இலட்சியத்தை நிறைவேற்றத் தேவையான தொகையை அடைந்துவிட்டதில் மன மெல்லாம் பூரித்துப் போயிருக்கிறது. அதற்காக அவன் பட்ட கஷ்டங்கள் கூட இன்று சாதாரணமாகவே தோன்றுகிறது. வீட்டிற்கு மூத்த பிள்ளை. அவனிற்கு அடுத்ததாக 10ஆம் ஆண்டு படிக்கும் தங்கை சிந்து. அண்ணன் மீது நிறையப் பாசம் இருக்கிறது.ஆனால் இருவரும் எந்நேரமும் பாசமலர் அண்ணன் தங்கைபோலப் பாசத்தை பொழிந்து கொண்டிருப்பவர் களில்லை. வெளியில் பார்ப்பவர்கள் இவர்கள் அண்ணன் தங்கையா அல்லது எதிரிகளா என்று சொல்லுமளவிற்கு எந்நேரமும் சண்டைபோட்டபடியே இருப்பார்கள். ஆனால் இருவருக்குள்ளும் இருக்கிறது அளவில்லாத பாசம். எல்லோ ரையும் விட அம்மாவை அளவுக்கதிகமாக நேசிக்கிறான். கண்டிப்பு என்றால் அப்பா தான். ஆனால் பல சமயங்களில் அவனிற்கு உற்றதுணையாக நண்பனாக இருந் திருக்கிறார். பைக் வாங்க வேண்டும் அதையும் தானே சொந்தமாகவே வாங்க வேண்டும் என்ற திட்டத்தைக் கேட்டு அளவில்லாத மகிழ்ச்சியடைந்தார்.தான் படித்துமுடித்து வேலைக்குப் போகும் போது

தானும் அந்தக்காலத்து BSA பைக்கை வாங்குவதாகக் கனவு கண்டு அதை நிறைவேற்ற முடியாமல் முட்டுக்கட்டை போட்ட வீட்டுச் சூழலையும் நினைத்துப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டார். தன்னால் முடியாததை தன் மகன் நிறைவேற்றுவதற்கு தைரியமூட்டினார்.

இந்தக் காலத்தில் வெளிநாட்டில் இருக்கும் அண்ணாமாரும் அப்பாமாரும் டொலர்களிலும் பவுண்ஸ்களிலும் பணத்தைத் தாராளமாக அனுப்ப அநேக இளைஞர்களிற்கும் யுவதிகளிற்கும் அது பெரிய விடயமாகவே இருப்பதில்லை. மாறாக நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டுத் துணையில்லாமல் இந்தச் சமூகத்துடன் போராடுபவர்களிற்கு அது பெரும் கனவாகவே இருக்கிறது சிவாவைப் போல. ரமணனிடம் சொல்லிவிடவேண்டும். நல்ல பைக் ஒன்றை அவனே தெரிவுசெய்வான் நிறைய விஷயம் தெரிந்தவன். அன்று இரவு நித்திரை உடனே வரவில்லை. நேரம் பிந்தியே தூங்கினான். தூக்கத்தில் கனவு வந்தது. அந்த பிரபலமான பைக் விளம்பரத்தில் வரும் ஹீரோவிற்குப் பதில் இவன் புது பைக்கில் வேலைக்குப் போகின்றான். அழகான பெண்கள் எல்லாம் அவனையும் பைக்கையும் திகைப்புடன் பார்க்க இவன் புன்னகைத்துப் போவதாயும் கனவு கண்டான்.

காலையில் அம்மா கேளாமலே எழும்பிவிட புது உற்சாகத்துடன் எழும்பிக் குளித்துவிட்டு வெளியில் புறப்படத் தயாரானான். புது பைக் வாங்குவதற்காக வேலைக்கு லீவு போட்டிருந்தான். வீட்டில் ஒருவருக்கும் தெரியாது. பைக்கை வாங்கி திகைப்படையச் செய்ய வேண்டும் என்பது அவனது ஆசை.

வாசலில் யாரோ சிவா என்று கூப்பிடுக்கேட்டது. ரமணனாகத்தான் இருக்கவேண்டும். ரமணனிடன் நேற்றே போன் பண்ணிச் சொல்லியிருந்ததால் காலையிலேயே வந்துவிட்டான். "மச்சான் என்ன கண்ணெல்லாம் வீங்கியிருக்கு... இரவு முழுக்க நித்திரை முழிச்சியோ?"

"ஓமடா லேட்டாத்தான் நித்திரை வந்தது..."

"அது சரி, நீ அந்த பொல்லாதவன் படத்தில வந்த தனுஷ் மாதிரி முதன் முதலில் உன்ர ஆளைத்தான் ஏத்துவன் என்டு என்ன கழட்டிவிடமாட்டியே?"

"என்னடா இப்படிச் சொல்லிட்ட உன்னை விட எனக்கு பிகரா முக்கியம்? அதுவும் யாழ்ப்பாணத்தில இருந்துகொண்டு அதுகளை ஏத்திக்கொண்டு திரிஞ்சால் வீட்டில அடிச்சுத்தான் கலைக்குங்கள்"

"சரியடா நம்புறன்.... இப்ப வெளிக்கிடுவமா பஸ் வாறமாதிரிக் கிடக்குது. இருவரும் யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்லும் ஒரு பஸ்ஸில் தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். வீதி அகலிப்புப் பணிகளிற்காக தோண்டப் பட்டிருக்கும் வீதிகளில் விழுந்து எழும்பி பஸ் ஒரு வழியாக யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தது. சிவா முதலில் ரமணனைக் கூட்டிக்கொண்டு தான் கணக்கு வைத்திருக்கும் வங்கிக்குக் கூட்டிச் சென்றான். அங்கே பைக் வாங்கத் தேவையான பணத்தை மீளப்பெற்றபின்னர் ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் அந்தப் பிரபலமான காட்சியறைக்குள் நுழைந்தார்கள். சிவா தனது கனவை நிறைவேற்றிக் கொள்ளும் தருணத்தில் கடவுளிற்கு நன்றி கூறிக்கொண்டான். யசமானர் காசைப்பெற்றுக் கொண்டார் படிவங்கள் பத்திரங்களைப் பூரணப்படுத்தி பைக் திறப்பை அவன் கைகளில் பக்குவமாய் தெய்வீகப் பொருள்போல் நீட்டினார். அவனும் அதை மரியாதையுடன் வாங்கிக்கொண்டான்.

ரமணன் பைக்கை வெளியில் உருட்டி வந்து ஸ்ராட் செய்தான்.

"சிவா நீ ஓட்டப்போறியா அல்லது நான் ஓடவா?"

"நீ கொஞ்சத் தூரம் ஓடிப்பார் மச்சான். அதுக்குப் பிறகு நான் ஓடுறன்"

யாழ்ப்பாண நகரைத் தாண்டி வீட்டை நோக்கி பைக்கில் பயணித்தார்கள். கொக்குவிலைத் தாண்டியவுடன் ரமணன் பைக்கை நிற்பாட்டினான்.

"இனி நீ ஓடு மச்சான் புது பைக் நீயே வீடு வரைக்கும் ஓடிப்போனால் நல்லாயிருக்கும்."

சிவா பைக்கை வாங்கி ஓடத் தொடங்கினான். கொஞ்சம் தடுமாற்றமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயகத்தின் பெயரால்..

- புலோலியூர் வேல்நந்தன் -

ஜனநாயகத்தின் பெயரால் மீளவும்
சாகடிக்கப் படுகிறது
விடுதலையின் விருட்சங்கள்

வீரர்களின் முடிவுரைகளில்
மீளவும் கொக்கரிக்கும்
முதலாளித்துவ முகங்கள்

அரசுகளின் அபிப்ராயங்கள்
மட்டும் பாதுகாக்கப்பட்டபடி
இரட்டை வேடம் போடும்
இரக்கமற்ற வல்லரசத்தனங்கள்

விக்கிலீக்சில் விடையாகும்
பதிவுகள்
மக்கள் கிளர்ச்சியொன்று
சொல்லிநிற்கும் மறைந்துள்ள
வலிபாதிக்கப் போராளிகள்

வரலாற்றை
விளங்கிக் கொள்ளாமல்
ஆடும் அந்தத் திருக்கூத்தில்
மீண்டும் வரலாறு
இவர்களுக்கும்
பாடம் சொல்லும்
அதுவரை
பொறுத்திருப்போம்





நூல் : மறுபாதி
(கவிதைக்கான இதழ்)
ஆசிரியர் : சித்தாந்தன்
வெளியீடு : "மறுபாதி"
அரசடி வீதி,
கோண்டாவில் வடக்கு, யாழ்ப்பாணம்.
விலை : 25/=


இருந்தது. கனகாலமாய் பைக் ஓடவில்லை. லைசென்ஸ் கூட எடுக்கவில்லை. பயமாகத்தான் இருந்தது. கொஞ்சத் தூரம் ஓடியபோதும் தெம்பு வந்தது. பைக்கை வேகமாக ஓட்டினான்.

குளப்பிட்டிக்கு அருகில் வரும் போது.... பொலிஸ்!

நிறுத்துமாறு சிக்னல் காட்டுகிறான். சிவா என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற உடனே ரமணன் கத்துகின்றான்.... "டேய் நிப்பாட்டாத எடு... நிண்டியெண்டா மாட்டுவாய்..."

சிவாவிற்கு அந்த நேரத்தில் ஒன்றும் யோசிக்கத் தோன்றவில்லை. ரமணன் சொன்னதைக் கேட்டு வேகமாக பைக்கை நிறுத்தாமல் ஓட்டத்தொடங்கினான். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக இரண்டு பொலிஸ்காரர்களும் அவர்களை தங்களது பைக்கில் துரத்தத் தொடங்கினார்கள். சிவா வேகமாக பைக்கை ஓட்டினான். அவர்களும் இவர்களை விடவில்லை. இணுவிலைத் தாண்டி சென்று கொண்டிருந்தார்கள். போகும் வழியில் வந்த ஒரு ஒழுங்கையால் பைக்கைத் திருப்புமாறு ரமணன் வழிகாட்ட சிவா அதற்குள் நுழைந்து வேறொரு ஒழுங்கைக்குள்ளால் திரும்பி பலாலி வீதிக்குள் ஏறினார்கள். பொலிஸ்காரர்களின் கண்ணிற்குள் மண்ணைத் தூவியாயிற்று.

"போதுமடா சாமி நீயே ஓடு உனக்கு லைசென்ஸ் இருக்குத்தானே... இனி லைசென்ஸ் எடுத்தாப்பிறகுதான் பைக் ஓடுறது."

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ரமணன் பைக்கை வீட்டை நோக்கி ஓட்டினான். சிவா நிம்மதியாய் ரமணனின் தோள்களில் சாய்ந்து கொண்டான். முன்னால் ஒரு லொறி மந்தமான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. எரிச்சலடைந்த ரமணன் ....

அதை முந்திச் செல்ல முற்படும்போது எதிரே வந்த பஸ் ஒன்றில் நேருக்கு நேராய் மோதிக் கொள்கிறார்கள். அடுத்த நாள் தினசரிகளில் முதற்பக்கத்தில் அவர்கள் செய்தியாகிப் போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கட்டை வால்" முன்னங்கால்களை முன்நோக்கி நீட்டியும் பின்னங்கால்களை மடக்கிக்கொண்டும் இருந்து கொண்டு சின்னி தூக்கிப்போடுகிற தேவையற்ற கீரி மீன்களையும் இறால் கூனிகளையும் சுவைத்துக்கொண்டிருந்தது. அதற்கு எசமானர் இல்லாததினால் சின்னி இறால் வியாபாரம் செய்கின்ற அதிகாலை நேரத்தில் உருண்டோடுகின்ற அந்த ஒரு சில மணித்துளிகளே அதற்கு உணவு கிடைக்கக்கூடிய நேரம். மிகுதி நேரங்களில் காடேறி கோவில் வாசலில்தான் இருக்கும். இருந்தாலும் காடேறி கோவிலுக்கு முன் பக்கமாக இருக்கின்ற இரட்டை முச்சந்தி களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் அது வைத்திருந்தது. அயல் அட்டைகளில் உள்ள நாய்களைத் தவிர வேறு நாய்கள் அப்பகுதிக்குள் வந்தால் மற்றைய நாய்களை விட கட்டை வால்தான் முன் நின்று எதிர்த்துக் குரைக்கும்.

கிட்டத்தட்ட கட்டைவாலை ஒரு வருடத்துக்கு முன்னால் யாரோ இரவோடு இரவாக காடேறி கோவிலுக்கு முன்னால் இருந்த ஒற்றைக்கல் குண்டுக்குப் பக்கத்தில் கொண்டுவந்து போட்டுவிட்டு போய் விட்டார்கள். பெட்டைக்குட்டியாய் பிறந்து விட்ட பாவத் திற்காக தாயைப் பிரித்து சகோதரர்களைப் பிரித்து கொண்டுவந்து எறிந்துவிட்டு சென்றுவிட்டார்கள் சில இரக்கம் அற்றவர்கள். அது சரி மனிதப்பிறவியிலேயே பெண்ணாக பிறந்து விட்டால் வேண்டா வெறுப்பாக பார்க்கும் இவ்வுலகில் நாய்க்கு மட்டும் விதி விலக்கா என்ன? கொண்டுவந்து போடப்பட்ட அடுத்த நாளே யாரோ அதன் வால் மீது சயிக்கிளை ஏற்றி விட்டார்கள். அப்போது நசிந்த அதன் வால் காலப் போக்கில் கட்டையாகி விட்டது. அதைக் கொண்டுவந்து போடப்பட்ட இடத்தில் இருந்த ஒற்றைக்கல் குண்டு கூட வழிப்போக்கர்களின் தாக சாந்தி தீர்ப்ப தற்காக யாரோ ஒரு புண்ணியவானால் ஒரே கல்லில் கடைந்தெடுக்கப்பட்ட தண்ணீர் குண்டுதான். அருகில் ஒரு சுமைதாங்கி கூட இருந்தது. அந்த ஒற்றைக்கல் குண்டும் எம்முறவர்களின் சரித்திர சின்னங்களில் ஒன்றுதான். அது இப்போது எங்கிருக்கிற தென்று தெரியவில்லை.

கட்டை வாலை ஆதரிக்க ஒரே ஜீவன் இறால் விற்கும் சின்னி மட்டும் தான். அதை திட்டுவதும் அரவணைப்பதும் சின்னிதான். இறாலுக்குள் இருக்கும் வியாபாரத்துக்கு உதவாத கழிவுகள் கட்டை வாலுக்கு மட்டும் தான் கிடைக்கும். காகங்களும் போட்டி போட்டு தோற்றுப் போய்விடும்.

கனகலிங்கம் கிணற்றடிக்கு குளிக்கப் போகு முன் கழிவு தண்ணி போகும் வாய்க்காலை தன் வீட்டு எலுமிச்சை மரத்தின் பக்கமாக திருப்பி விட்டுக் கொண்டிருந்தான். முத்தத்தில் பாத்திரங்கள் மினுக்கிக் கொண்டிருந்த கமலம் "நீங்களும் உந்த எலுமிச்ச மரத்தை பெத்த பிள்ளை மாதிரி மூண்டு வரியமாய் வளக்கிறீங்கள் அது உந்த வளத்தி வளர்ந்தும் என்னும் ஒரு பிஞ்சுகூட காய்க்கேல்லை" என்று முணு முணுத்தது கனகலிங்கனின் காது களில் விழத் தவறவில்லை. தருமண்ணை சொன்னமாதிரி செய்தால் அது நல்லாய் காய்க்கும். எல்லாத்துக்கும் ஒரு சந்தர்ப்பம் வரும் அப்ப பாப்பம். என்று சொல்லிவிட்டு குளிக்க ஆரம்பித்தான்.

இரண்டு நாட்களாய் சின்னி வியாபாரத்துக்கு வரவில்லை அந்த இரண்டு நாட்களும் சின்னிக்காக காத்திருந்து கட்டைவால் சாப்பாடு இல்லாமல் மிகவும் சோர்ந்துபோய் விட்டது. மூன்றாவது நாளும் அதே போன்று காத்திருந்துவிட்டு வைரவர் கோவிலில் யாரோ விளக்கு கொளுத்திவிட்டு போய் இருக்கிறார்கள். காற்றில் விளக்கு அணைந்திருந்தது. அந்த விளக்குக்குள் இருந்த மிச்ச எண்ணை எல்லாவற்றையும் துளி விடாமல் குடித்துவிட்டு ஒற்றைக்கல் குண்டுக்கு அருகில் வந்து படுத்திருந்தது. சிறிது நேரத்தில் அந்த வழியாக பறைமேளச்சத்தத்தொடு ஒரு பிரேத ஊர்வலம் ஒன்று சுடலையை நோக்கி சென்றுகொண்டிருந்தது. கட்டை வால் திடுக்கிட்டு எழும்பி முகத்தை சரித்து கூட்டத்தை வேடிக்கை பார்த்தது. பாவம் அதற்கு எப்படித்தெரியும் அந்தப் பாடையில் போவது சின்னிதான் என்று. மூன்று நாட்களுக்கு முன் காச்சலால் படுத்த படுக்கையாகிவிட்ட சின்னி நேற்று இந்த உலகை விட்டு போய் விட்டாள். கட்டைவாலையும் விட்டுவிட்டுத்தான்.

ஐந்து நாட்கள் ஆகிவிட்டது கட்டைவாலின் வயிறு ஒட்டிப்போய் எலும்புகள் தோலை கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிடும் போல் இருந்தது. சோர்வான நடையோடு வைரவர் கோவில் வாசலிலேயே படுத்திருந்தது. அப்பொழுது அந்தவழியால் வந்த கனகலிங்கத்தின் எட்டு வயது குறும்புக்கார மகன் கட்டை வாலை சீண்டிப்பார்க்க ஆசைப்பட்டு அதன் காலை தன் காலால் உதைத்தான். தாங்க முடியாத பசியோடு இருந்த கட்டைவால் கட்டுக் கடங்கா கோபத்தில் அப்படியே துள்ளி எழும்பி வளைந்து தன் வேட்டைப்பல்லை அவனின் கால்தொடையில் ஆழமாகப் பதித்துவிட்டது. அம்மா என்று அலறி அடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினான். கமலம் என்னப்பு நடந்தது என்று மகனை நோக்கி ஓடினாள். கோடிக்குள் ஏதோ அலுவலாக இருந்த கனகலிங்கமும் ஓடிவந்தான். காடேறி கோவிலுக்கு முன்னால நிக்கிற அந்த நாய் கடிச்சுப் போட்டுது என்று மட்டும் சொன்னான். தான் அதற்கு என்ன செய்தான் என்பதை சொல்லவில்லை. பக்கத்துவீட்டுகாரர்கள் புதினம் பாக்க ஓடிவந்தார்கள். "அந்த நாய் இப்ப நாலைஞ்சு நாளாய் ஒருமாதிரித்தான் நிக்கிது விசர் பிடிச்சி விட்டுது போல" என்று பெரிய ஆராச்சியாளன் மாதிரிச்சொன்னான். கனலிங்கம். "உது இனி உயிரோட விட்டால் பறையால போறவாறவை எல்லாரையும் கடிக்கப் போகுது உதை ஏதாவது செய்ய வேணும்" என்று சொல்லி ஒரே கல்லில இரண்டு மாங்காய் அடிக்க முடிவெடுத்தான் அவன். அந்த இரண்டாவது மாங்காய் தருமண்ணை அவனுக்கு சொன்ன ஐடியா ஏதாவது செத்த ஆடு மாடு நாயையோ கொண்டுவந்து எலுமிச்சை மரத்துக்கு கீழ தாட்டுவிட்டால் பிறகு நல்லாய் காய்க்கும் என்பதுதான். மகனை தேற்றிக்கொண்டு அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக ஆயத்தமானான் கனகலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் இரவு ஒரு உலக்கையோடு காடேறி கோவிலை நோக்கி போனான் கனகலிங்கம். கட்டைவால் ஒற்றைக்கல் குன்றுக்கு பக்கத்தில் நின்று காலை மடக்கி படுக்க முடியாமல் மயக்கமான நிலையில் வாயால் வீணீர் வடிய நின்றுகொண்டிருந்தது. கனகலிங்கம் சத்தம் போடாமல் அதன் பின்பக்கமாக மெதுவாகச்சென்று சரியான இடம் வந்ததும் நின்றான். அடுத்த விநாடி அவன் கையில் இருந்த உலக்கை மேல்நோக்கி உயர்ந்து கீழிறங்கியது. ஒரு மேரல் சத்தத்தோடு கட்டைவாலின் தலை மண்ணைத்தொட்டது. அதன் உடலில் எஞ்சியிருந்த கொஞ்ச இரத்தமும் அந்த மண்ணை ஈரமாக்கியது. ஒரு நிமிடத்தில் அதன் உயிர் போய்விட்டது என்பதை தீர்மானித்துவிட்டு பின்னங்கால் இரண்டையும் பிடித்து தூக்கிக்கொண்டு வீடுநோக்கி அவன் சென்றுகொண்டிருந்தான். எந்த ஒற்றைக்கல் குன்றுக்கு பக்கத்தில் அதன் வாழ்க்கை ஆரம்பித்ததோ அந்த இடத்தில் அதன் வாழ்வு முடிந்து விட்டது. இவ் வளவையும் காடேறி வைரவர் பார்த்துக் கொண்டிருந்தார் புன் சிரிப்போடு நாய் வாகனத்தின் மீது இருந்துகொண்டு தான்

# ஆசிரியம்


காவத்தையூர் மகேந்திரன்.

அகில மாற்றத்தின் ஆணிவேர்
சமுதாய வளர்ச்சியிலும்
மறைந்தே கிடக்கும் ஆச்சரியம்
ஆசிரியன்...
மாணவ மூளை நிலத்தின்
களையகற்றி அறிவு விதைக்கும்
அற்புத விவசாயி
உண்மையின் வெளிச்சத்தில்
ஒடுக்கும் போதும் பயணிக்கும்
உரமேறிய மாலுமி பாடகன்


விஞ்ஞான அறிவனை உதிக்கவைத்து
வீண் மடத்தனம் போக்கும் நெருப்பு
படித்தல் விமர்சித்தல் படைத்தல் செய்யும்
கற்பனை இல்லா பிரம்மன்

பதவி பணத்தாசை பசப்பு வார்த்தைக்கு
மேற்கோள் சொல்ல முடியா தூய்மை
ஊழல் கண்டல் ஒழிக்கல்
அம்பலப்படுத்தும் மானுடக் குரல்
கட்டு உழைப்பு சமூக மாற்றம்
வேண்டி பாடுபடும் பொதுநலவாதி
வறுமை வாட்டம் இடமாற்றம்
வந்தபோதும் தயங்காத வாழ்வு போராளி

இப்படியெல்லாம் எழுதிப் புகழ்வோம்
வாழ்த்துவோம் நல் ஆசிரியர்களை.



நூல் : கலைமுகம்
பிரதம ஆசிரியர் : நீ.மரியசேவியர் அடிகள்
வெளியீடு : திருமறைக்கலாமன்றம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
விலை : 100/=



நூல் : ஜீவநதி
பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்
வெளியீடு : கலையகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி,
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
விலை : 60/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஃபீனிக்ஸின் மரணம்

அரபு மூலம்: மஹ்மூத் தர்வீஷ்
ஆங்கில வழியாக: ஜெஃப்ரி ஸ்மித்
தமிழாக்கம்: சோ. பத்மநாதன்

நாம் பாடும் கீதங்களில் உள்ளது
ஒரு புல்லாங்குழல்
எமக்கு நீயும் தரும் புல்லாங்குழலில்
உள்ளது நெருப்பு
நாம் வளர்க்கும் அந்நெருப்பில் ஒரு
பச்சை ஃபீனிக்ஸ்
அது பாடும் இரங்கற்பாவில் உன்னது
எனது சாம்பலா உனது புழுதியா.

மீனவர்களுடைய கூடாரங்களை
நம் கண்களில் படாது மறைக்க
ஒலைக் காக் கூட்டம் போதும்
"யேசுவைப்போல் நீர்மேல் நடவுங்கள்!"
அவன் எனக்குச் சொன்னான்
உனக்காக நான் வைக்கும் தீவனங்களுக்கு
ஒரு பாதுகாவலனில்லை,
இக்கணத்திலிருந்து
உன் வீட்டு இடிபாடுகளைப் பிரிந்து
கொண்டுவரும்
ரோஜாப் பூக்களுக்குப் பகைவருமில்லை

நிமிர்ந்திருக்கும் மலைகளைச் சூழ
நீர்வளையம்
முதலாவது ஏதேனுக்கு முற்றம்
ஹரபீயன்
நான் சொன்னேன்:
உலகின் படிமம்
இரு பச்சைக் கண்களுள் பூரணமாயிற்று
அவள் சொன்னாள்:
"என் இளவரசே என் சகதியே
என் தலையை உனது தொடையில் வைத்திரு

எம்முடன் எரிந்து சாம்பரான
அவ்விரியர் இருவரும்
சற்று முன்னர்
எம்மைக் கொல்ல முனைந்தவர்கள்
சிறிது நேரத்தில்
மீண்டும் தம் வாள்களை உருவப் போகிறவர்கள்
அவர்கள் கேட்கிறார்கள்:
நீங்கள் இருவரும் யார்.

"எங்கள் முந்தைய வாழ்வின் இரு நிழல்கள்
போர்களுக்கு உணவாகும் கோதுமையின்
இருபெயர்கள்

போராளிகள் மீண்டது போல
எல்லையிலிருந்து நான் மீளவிரும்பவில்லை
இருவருக்கும் இடையிலுள்ள தொலைவு
நான் நான்
ஒருபுறம் கடவுள்
மறுபுறம் நமது பெயர்களை நிறுவுவோர்
நீரில் நடக்கும் நிழல் நான்
சாட்சியும் காட்சியும் நான்.
நானும் நீயும் முற்றுகையிட்ட நாட்டில்
வழிபடுவோனும் கோயிலும் நானே

அவள் சொன்னாள்:
இரு போர்களுக்கிடையில்
கண்ணாடிக்கெதிரில் என் காதலனாகியிரு
நான் என் தந்தையின் கோட்டைக்குத்
திரும்பமாட்டேன்
உன் பழத்தோட்டத்துக்கு என்னை கூட்டிச் செல்
உன் அம்மாவிடம் அழைத்துப் போ
துளசி நீரை என்மீது தெளி
வெள்ளிக் கிண்ணத்தின் மீது என்னைச் சிந்து
துலக்கிவிடு
உன்பெயரால் என்னைச் சிறைப்பிடி
காதலால் என்னைக் கொய்து
வயல்களின் சடங்குகளுக்கமைய
என்னை மணந்து கொள்
புல்லாங்குழலூத எனக்குக் கற்றுக்கொடு
என் நெருப்பிலிருந்தும் உன் நெருப்பிலிருந்தும்
நான் ஃபீனிக்ஸாக எழுமாறு
என்னை எரித்துவிடு
ஃபீனிக்ஸ் போன்றதொரு வடிவம்
மீனவனுடைய கூடாரத்துக்கே
நீருள் மீளுமுன்
எப்பொழுதும் ஒலிவியாயே.

என் காத்திருப்புக்கும் உன் காத்திருப்புக்கும்
என்னதான் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டைக் கவிதை


-மாக்ஸ் பிரபாஹர்-

மோப்ப நாயின் உருதரித்து - என்
முலை முடுக்கெலாம்
மூக்கை நுழைக்கிறாய்!
என் வாசிப்பின் இரகத்தை,
யாசிப்பின் சுகத்தை
அறியும் வெறியுடன் - இரகசியமாய்
எனை பின்தொடர்கிறாய்!
என் சேத்தாளிகள் குறித்த செய்திகளை
சேகரிப்பதில் தீவிரம் காட்டுகிறாய்!
நூலகம் சென்று, குறிப்பேடுகள் தின்று
நான் கேட்டுப்படிக்கும் நூற்பட்டியலை
அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுகிறாய்!
உன் தூதுவர்களை ஏவி
நான் போய்வரும் இடங்களை
உற்று நோக்குகிறாய்!
சீருடை தவிர்த்து - என் செயலக
ஊழியனாய் அவதாரமெடுத்து
அருகமர்ந்து தோழமை காட்டுகிறாய்!
தேநீர் சாலைகளில்
தேவைக்கதிமாய் நடமாடுகிறாய்!
கலைஞன் உருவில் - எனதின்
மனது கௌவி
கைபேசி இலக்கங்கள் பெறுகிறாய்!
என் தொலைபேசி அலைவரிசைகளை
பதவிசாய் பதிவுசெய்து
கூர்மையாய் செவிமடுக்கிறாய்!
நிகழ்வுகள் அனைத்திலும் நீயே தோற்றுவிட
அதிவித அலுப்புகள் சகிதம்
மீளவும் களம் குதித்து காரியமாற்றுகிறாய்!
தோழமையுரு தொடுத்து தூண்டிலிடும்
உன் முயற்சியின்
திரட்சியெல்லாம் தொடரினும்.
உழைக்கும் கூட்டத்தின் விடுதலைக்காய்
எனக்குள் வீழ்ந்து, விதைப்புற்று,
உயிரின் அந்தம்வரை ஆழப்பதிந்து,
வேர்பரப்பிக் கிடக்கும்
அந்த உயரிய எண்ணங்களை
என்னிலிருந்து அறுத்தெறிய முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தேசிய கலையிலக்கிய பேரவையின்
குறும்பட வெளியீடாக

பாடிப்பறை நிகழ்வு - கொழும்பு





முருகையன் நினைவு நிகழ்வு -வவுனியா தேசிய கல்வியற்கல்லூரியில்





சி.கிருஸ்ணபிரியனின் வேரின் பிரசவங்கள் கவிதை நூல் அறிமுகம் - இரத்தினபுரி





இலங்கை தேசிய இனப்பிரச்சினையும் தீர்க்கான தேடல்களும் நூல் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org